Registered as a News Paper
பக்கம் – 16

# ஈழநாதம்


வெள்ளிநாதம் Weekly

விலை: 12.00

நாதம் -13 | திருவள்ளுவர் ஆண்டு 2033 | 17 - 24 ஜனவரி 2003 | ஓசை 333

## யாழ்ப்பாணத்தின் ஆறாக்காயம்





## நத்தார் சமாதானச் சுற்றுலா





## கிட்டண்ணா...

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 17.01.2003

## புரிந்து கொள்ளவேண்டிய காலகட்டம்

இன்று பொதுசன ஐக்கிய முன்னணியினதும் ஜே.வி.பியினரதும் பெரும் கவலை இந்த நாட்டில் ஏதாவது ஒருவகையில் சமாதானமோ, அமைதியோ, ஏற்பட்டு விடுமோ என்பதைப் பற்றியதேதான்.

சமாதானமும், பிரச்சினைகளுக்கான அரசியல் தீர்வும் தங்களை அரசியலில் அனாதைகளாகவும், அநாமதேயங்களாகவும் ஆக்கிவிடுமோ என்கிற அச்சமே அவர்களின் கவலைகளுக்கான காரணமுமாகும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஒவ்வொரு கட்டமாக நகர, நகர, இவர்களதும், இவர்களைப் போன்ற இனவாதிகளும் நாடோ, நாட்டின் அனைத்து வளங்களுமோ அழிந்தாலும் கூட சமாதானம் - நியாயமான நீதியான சமாதானம் இந்த நாட்டில் ஏற்படக்கூடாதென்பதில் மிகவும் உறுதியாகவே உள்ளனர்.

இதனை மிகவும் தெளிவாக, பிரதமரின் சமாதான முயற்சிகளுக்கு சனாதிபதி தடைகளை ஏற்படுத்த முயன்று வருவதாக, அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் வெளிப்படையாகவே தெரிவித்துள்ளார்.

'சனாதிபதிக்கு சமாதான முயற்சிகளை ஊக்குவிக்கும் எண்ணமில்லை. அவர் சமாதானத்தை எதிர்க்கிறார். இராணுவத்தைத் தூண்டுவதன் மூலம் எதிர்காலத்தில் சமாதான முயற்சிகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்த அவர் முயலக் கூடும் என நாம் அஞ்சுகிறோம்' என அவர் செவ்வியொன்றில் தெரிவித்திருப்பதானது மிகைப்படுத்திக் கூறப்பட்ட ஒன்றல்ல.

இதுவே இன்றைய யதார்த்த நிலை.

சந்திரிகா கடந்த காலங்களில் மட்டும் அல்ல இற்றைவரை கூட ஒரு கண்ணியமான தேசியப்பற்றும் தொலைநோக்கு சிந்தனையும் கொண்ட மக்கள் நலன் பேணும் அரசியல் வாதியாகவோ, நாட்டின் தலைவராகவோ இயங்கும் ஒருவராக இல்லை, எப்போதும் தனது அதிகாரபலத்தை வைத்து அனைவரையும் அச்சுறுத்தும் ஆதிக்க வெறி கொண்ட ஒரு மூன்றாந்தர அரசியல் வாதியாக இயங்கி வருவது ஒன்றும் மறைக்கக் கூடிய விடயமல்ல...

இதுவே இந்த நாட்டின் இன்றைய நிலைமைகளுக்கெல்லாம் காரணம்.

பொய், ஏமாற்று, மிரட்டல், அச்சுறுத்தல், சுத்துமாத்து, ஊழல், மோசடி என அனைத்து வகையான மூன்றாந்தர அரசியல் செயற்பாடுகளும் அவரால் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளமைக்கும், வருகின்றமைக்கும் தென்பகுதி ஊடகங்களில் வெளிவந்து கொண்டிருக்கும் செய்திகளே சான்றாகும்.

சமாதானத்திற்கான யுத்தம் என்று கூறிக் கொண்டு அவரும் அவரது அரசியல் சகாக்களும், அரசியல் உறவுகளும் மேற்கொண்ட ஊழல்கள் ஒவ்வொன்றாக இப்போது வெளிப்படுகையில் திகைக்க வைக்கிறது.

இப்படியான ஒரு அரசியல்வாதி சிறிலங்காவின் சனாதிபதியாக அதுவும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியாக இருப்பதுதான் இன்றைய சமாதான முயற்சிகளுக்கு மிகப் பெரும் அச்சுறுத்தலாகும்.

'சனாதிபதியின் தலைமையிலான பொ.ஐ. முன்னணி ஆட்சிக்கு வரும் பட்சத்தில் சமாதான முயற்சிகள் முறிவடையலாம். கடந்தகால கசப்பான அனுபவங்கள் எமக்குண்டு, சமாதானம் குறித்து அவருக்கு நம்பிக்கையில்லை என்பதை நாம் கண்டுள்ளோம்' எனவும் அரசியல் ஆலோசகர் அந்தச் செவ்வியில் தெரிவித்துள்ளமையானது முற்றிலும் உண்மையானதாகும்.

அரசியல் ஆலோசகரின் இந்தச் செவ்வியானது இன்று அமைதியையும் சமாதானத்தையும் இங்கு ஏற்படுத்த முனைந்து செயற்பட்டு வரும் சர்வதேச சமூகத்திற்கு மிகத் தொளிவாகவும் சரியானதுமான பல செய்திகளைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் இயல்புவாழ்க்கையை அவரவர் சொந்த இடங்களில் மீளக்கட்டியெழுப்புவதற்கான மனித நேயப்பணிகளைக் கூட இராணுவ நலன்களுக்காக, நிராகரிக்கும் சந்திரிகாவால் தமிழ் மக்களுக்கு ஒரு நிரந்தரத் தீர்வை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு ஆதரவை நல்கும் பக்குவத்தையும், மனோபலத்தை வெளிப்படுத்தும் இயல்பையும் நடை முறைப்படுத்த முடியும்என எவருமே நம்பமுடியாது.

அப்படி அவரை எவரும், எந்தச் சமூகமும், எந்த நாடும் நம்பி ஆதரிக்குமேயானால் அவர்கள் ஏமாற்றப்படுவார்கள் என்பது சர்வ நிச்சயமான ஒன்றாகும்.

அல்லது அவர்களும் சமாதான நகர்வுகளை சந்திரிகாவின் வழியில் குழப்பும் சக்திகளாகவே இருப்பர்.

இதனைச் சர்வதேச சமூகமும் தெளிவாகப்புரிந்து கொள்ளவேண்டிய, இலங்கையின் சமாதான விரோத பேரினவாத சக்திகளை அவற்றின் அரசியல் மற்றும் மதத் தலைமைகளை இனங்கண்டு கொண்டு எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டிய பொறுப்பு இன்று சமாதான முன்னெடுப்புகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் தரும் சகல நாடுகளுக்கும் உண்டு. இதனையும் எவரும் நிராகரித்துவிட முடியாது.

மனித நேயத்தைப் புறந்தள்ளிய மனித உரிமைகளை நிராகரித்த, இராணுவ நலன்களுக்கு முன்னுரிமை கொடுக்க முயலும் அனைத்து சக்திகளும் சமாதான விரோதிகளாகவே வரலாற்றால் இனம் காட்டப்படுவர்.

விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைகளின் போது தமக்கான சர்வதேச ஆதரவை வளர்த்துக் கொள்கின்றனர் என சந்திரிகாவின் தோழமைக்கட்சியான ஜே.வி.பி தென்னிலங்கையில் செய்துவரும் பிரச்சாரத்தின் உள்நோக்கும் எத்தகையது என்பதை விளக்கவேண்டிய அவசியம் இல்லை.

புலிகளின் பக்கம் உள்ள நியாயத் தன்மைகள் சர்வதேச சமூகத்தால் புரிந்து கொள்ளப்பட்டு அவர்களின் சமாதானம் மீதான பற்றுறுதி உணரப்பட்ட நிலை வளர்ந்து வருவது சமாதான எதிர்ப்பு சக்திகளால் ஜீரணிக்க முடியாமல் உள்ளது. இதனையும் உலகம் புரிந்து கொள்ள வேண்டும்.

சமாதானத்திற்கான விரோதிகள் சிறிலங்காவின் தென்பகுதியில் - அரசியல் வாதிகள், மதவாதிகள் மற்றும் இனவாதிகள் என்ற வகையில் ஓரணியில் அணிவகுக்க தொடங்கியுள்ளமை சர்வதேச சமூகத்திற்கு அவர்களின் சமாதான முயற்சிகளுக்கு விடுத்துள்ள சவாலாகவே தமிழ்மக்கள் கருதுகின்றார்கள்.

போருக்கு உதவிபுரியும் உலகநாடுகளைத் தேடித்தேடி பிச்சாபாத்திரம் ஏந்தித்திரிந்த சிறிலங்காவின் பேரினவாதிகள் சமாதானத்திற்கு உதவவரும் நாடுகளை புறக்கணிப்பதும் அவமதிப்பதும், அவர்கள் அமைதிக்கு எதிரான கொடிய, நிராகரிக்கப்பட வேண்டிய, மனித தர்மத்திற்கு எதிரான சக்திகள் என்பதை உலகம் புரிந்து கொள்ளப் போதுமானவையாகும்.

இதுவே இன்றைய சிறிலங்காவின் அரசியல் நிலை. உலகசமூகத்திற்கு விடுக்கும் செய்தியுமாகும்.

## சமாதானத்துக்கான தந்திரம்


சிறீலங்காவின் இரு தசாப்தங்களாக நடந்த யுத்தமும் சனநாயகத்தின் வாரிசான கட்சியரசியலின் சீரழிவும், அச்சீரழிவின் பயனாக ஆட்சியைக் கைப்பற்றவும் தக்கவைக்கவும், இனவாதத்தையும் யுத்தத்தையுமே துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தியதும், பயன்படுத்தவேண்டி வந்ததும் சிறிலங்காவின் அரசியலில் 'இராணுவத்தை' இனவாதமும் தன்னாதிக்கமுள்ள ஒரு சக்தியாக வளர்த்து விட்டமை வெளிப்படையானது. இதன் தர்க்கபூர்வ வளர்ச்சியானது, அரசாங்கங்கள் இராணுவத்தினரைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு மாறாக இராணுவத்துடன் சமரசப் போக்கை கடைப்பிடிக்க வேண்டிய அளவுக்கு நிலைமையினை விபரீதமாக்கியுள்ளது. இந்த விபரீதம் ஏற்படுத்தப் போகின்ற கடுமையான நெருக்கடியை, தாக்கத்தை அவை பார்க்க வேண்டிய சூழல். அச்சூழலுக்கு அடிகோலிய கட்சிகளுக்கு ஏற்பட்டு விட்டமை வேடிக்கையானதுதான். ஆனால் அது தமிழ் மக்களைத் தொடர்ந்தும் பாதிப்பதும் நசுக்குவதும் எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளவோ சகித்துக் கொள்ளவோ முடியாத விடயங்களாகும்.

சீனாவில் சனாதிபதி ஒருவர் தெரிவு செய்யப்பட்டவுடன் 'சீன மக்கள் இராணுவம்' தனது பணிவை உடனடியாகவே அவருக்குத் தெரியப்படுத்தும். அதன் மூலம் அவர் தனது ஆட்சியினைத் தங்கு தடையின்றி நடத்திச் செல்ல முடிகிறது. சிறிலங்காவில் என்ன நடக்கிறது? இராணுவமானது '- (இங்கு இராணுவம் எனக் குறிப்பிடப்படுவது ஒட்டு மொத்த பாதுகாப்புப் படைகளை மட்டுமேயாகும்) - அரச இயந்திரத்தின் ஒரு பகுதி என்பதையும் மீறி அரசாங்கத்தின் பங்காளி போன்றோ, அன்றி அரசாங்கத்துக்குச் சமமான அந்தஸ்துள்ள ஒரு அமைப்புப் போன்றோ இயங்க முற்படுவது வேடிக்கையானதும் விபரீதமானதுமாகும்.

மேற்படி செல்நெறியின் மிக அண்மைக்கால வெளிப்பாடுகளாகவே 'உயர்பாதுகாப்பு வலயங்கள்' விடயம் விளங்குகிறது. சிறிலங்காவின் இராணுவத் தளபதியும். அதன் யாழ்.குடாவுக்கான பொதுக்கட்டளையிடும் (Genaral Officer Commanding) அதிகாரியும் நடந்து கொள்கின்ற கருத்துக்களும் ஒரு நாட்டின் பாதுகாப்பு விவகாரம் அல்லது நாட்டின் இராணுவ நலன்கள் என்பதாக அல்லாமல்







"இராணு வத்தின் நலன்களைப் பேணுவ தற்கு அவர்கள் முற்படுவதனையே சுட்டிக் காட்டுகின்றன. இவர்களுக்குத் தாளம் போடும் வகையிலேயே பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் பாதுகாப்புத்துறை சார்ந்த சிவில் அதிகாரிகளினதும் கருத்து வெளிப்பாடுகள் அமைந்துள்ளமை சோகமானதும் விரக்தியை ஏற்படுத்து பவையுமாகும்.

கடந்த சில நாட்களின் முன்னர் கண்டியில் வைத்து (மகாநாயக்கர்களிடம் ஆசிபெற்ற பின்னர்) சிறிலங்காவின் இராணுவத் தளபதி தெரிவித்த கருத்துக்கள் மேற்சொன்ன விடயங்கள் அனைத்தையும் தெழிவுபடுத்தப் போதுமானவையாகும். "அரசியல் தீர்வு ஏற்பட்டாலும் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட மாட்டாது. அத்தோடு இராணுவத்தின் நலன்கள் கவனத்திலெடுக்கப்படும்." இதுவே அவரது கூற்று.

இக் கூற்றினைக் கவனமாகப் பரிசீலித்துப் பாருங்கள் அரசியல்தீர்வு ஏற்பட்டதன் பின்னரும் நாட்டில் இராணுவம் தனது பிடியினைத் தளர்த்துவதற்குத் தயாராக இல்லை என்பதனை இது காட்டவில்லையா? அத்துடன் நாட்டின் இராணுவ நலன் என்பதாக இல்லாமல் 'இராணுவத்தின் நலன்' என்பதிலேயே இராணுவத்தின் கவனம் குவிந்துள்ளதையும் இது தெளிவாக்கவில்லையா?

இப்போது, முன்னாள் அரசாங்க அதிபரும் நிர்வாக சேவையில் மூத்த ஒரு அதிகாரியுமான சிறிலங்காவின் பாதுகாப்பமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவின் கூற்றைக் கவனியுங்கள். "அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் உள்ள சொத்துக்களுக்கான உரிமையாளர்கள் யார் என்பதைக் கண்டறிவதில் பிரச்சினை உள்ளது. அத்தோடு அவற்றிலிருந்து இடம் பெயர்ந்தவர்களின்

**இ.விவேகானந்தன்**

எண்ணிக்கை பற்றியும் பிரச்சினை உள்ளது. அதனால் அவற்றை ஒப்படைப்பதில் பிரச்சினை காணப்படுகிறது.

பாருங்கள் இராணுவம் தன் பிடியைத் தளர்த்த மறுக்கும் சூழலுக்கு எவ்வாறனதொரு நிர்வாகரீதியான விளக்கத்தை அவர் வழங்குகிறார். அப்படியாயின் உரிமையாளர் இல்லாத அல்லது [illegible] தனது உடமைதான் அது என்பதை நிரூபிக்க முடியாத ஒருவருடைய சொத்தினை இராணுவம் ஆக்கிரமித்துக் கொள்வது நியாயம்தான் என்பதா ஒஸ்ரின் பெர்னாண்டோவினுடைய நிலைப்பாடு?


உண்மையில் இலங்கைத்தீவில் சமாதானம் ஏற்பட வேண்டுமெனில் சிங்கள ஆளும் வர்க்கத்திடமும், அதிகார இயந்திரத்திடமும் ஆழ்மனதில் தமிழ் மக்களுடைய உரிமையை அங்கீகரிக்கும் மனப்பதிவு உருவாகும் வரைக்கும் இலங்கைத்தீவில் சமாதானம் என்பது பகற்கனவேதான். இராஜதந்திர நகர்வுகள் பேச்சுவார்த்தைகள், தீர்மானங்கள் என்பவையெல்லாம் அவற்றின் அமுலாக்கலில்தான், அவை நடைமுறைக்கிடப்படுவதில் தான் தங்கியுள்ளன. மாறாக வெறும் வார்த்தை ஜாலங்களாகப் பேச்சுவார்த்தை முடிவுகள், கொள்கைத் தீர்மானங்கள் அறிவிக்கப்படுவதும், பின்னர் அவை காற்றில் 'கரைந்த கற்பூரமாகக் கழிந்து கவனிக்கப்படாமற்' போவதும் மக்கள் மனதில் சமாதான நகர்வுகள் மீதான நம்பிக்கையின்மையையே தோற்றுவிக்கும். இதனையே சண்டேலீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவுக்களித்த பேட்டியில் கேணல் கருணா அவர்கள் "மக்களிடமிருந்து எங்களுக்கு அழுத்தங்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஒரு மாற்றத்தையும் காணவில்லையென்று. எனவே அரசு இராணுவத்தைச் சாட்டிக் கொண்டிருக்காமல். தான் விடயங்களை நிறைவேற்ற வேண்டும்." எனக் குறிப்பிட்டார்.

உண்மையில் இது மிகச் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்ட இலங்கையில் சமாதானத்தை எட்டுவதற்கான சூத்திரமாகும். மக்கள் சமாதானத்தில் நம்பிக்கை கொள்ள வேண்டுமெனில் அரசு இராணுவத்தைக் கட்டுக்குள் கொண்டுவர வேண்டும். எடுக்கப்படும் முடிவுகளை மதிக்கும், அமுல்படுத்தும் மனநிலைக்கு இராணுவத்தைக் கொண்டுவரல் வேண்டும்.

(15ம் பக்கம் பார்க்க...)

காலம் என்னும் மூலிகை எல்லா நோய்களையும் குணப்படுத்த வல்லது. - பெஞ்சமின் ஃபிராங்ளின்

எரியூட்டப்பட்ட நிலையில்......



# யாழ்ப்பாணத்தின் ஆறாக்காயம்

முன்பு வந்த தகவல்களின் படி புனரமைக்கப்பட்ட யாழ். பொதுசன நூலகம் நேற்று முன்தினம் பொங்கல்தினத்தன்று திறக்கப்படும் என்று கூறப்பட்டது.

ஆனால் பிந்திக்கிடைத்த தகவல்களின்படி திருத்தவேலை முடியாதபடியால் திறப்புவிழா பிந்தும் என்று கூறப்படுகின்றது

இதில் சம்பந்தப்பட்ட சக்திகளுக்கிடையிலான இழுபறியே திறப்புவிழா பிந்தக் காரணம் என்று கூறப்பட்டாலும் சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான திருத்தவேலைகள் மீதமிருப்பதால்தான் திறப்புவிழா பிந்துவதாக உரிய வட்டாரங்களிலிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

திறப்புவிழா பொங்கலன்று நடக்காவிட்டாலும் என்றைக்கோ ஒருநாள் அது நடக்கும்.

யாழ்ப்பாணத்தில் அது ஒரு பெருவிழாவாக அமையக்கூடும்.

சமாதான காலத்தில் அது யாழ்ப்பாணத்துக்கான ஒரு சிறப்புப் பரிசு என்று காட்டப்படலாம்.

சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு அது கொலரை உயர்த்தும் ஒரு விவகாரமாகலாம்

சம்பந்தப்பட்ட அமைச்சர் ஏற்கனவே தனது சாதனைப் பட்டியலில் நூலகத்தைச் சேர்த்து விளம்பரமும் செய்து விட்டார்.

ஆனால் ஈழப்போரின் ஆறாக்காயம் ஒன்றை மூடி மறைக்கும் முயற்சி இது என்பதே மெய்நிலை.

அந்த ஆறாக்காயம் எப்படி ஒரு கீழ்த்தரமான அரசியலாயானது என்பதை வாசகருக்குச் சுட்டிக்காட்டுவதும் என்றைக்கோ ஒருநாள் திறப்புவிழா நடக்கும் போது இதில் சம்பந்தப்பட்ட சக்திகள் கட்டாயம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய சில விசயங்களை முன்கூட்டியே சொல்லி வைப்பதும் தான் இன்று இப்பத்தியின் நோக்கம்.

தென்னாசியாவின் மிகச் சிறந்த நூலகம் என்று அதற்குப் பெயர்.

வாயைக்கட்டி வயிற்றைக்கட்டி சேமிக்கும் யாழ்ப்பாணத்தவர்கள் கார்ணிவெல் நடாத்தியும் லொத்தர் குலுக்கியும் சிறுகச்சிறுகக்கட்டிய நூலகம் அது.

ஈழப்போரின் ஆரம்பகால அடைகாப்பு மையங்களாயிருந்த கிராமிய வாசகசாலைகளின தாய்நிலையம்போல அது கட்டியெழுப்பப்பட்டது.

ஒரு பொதுசன வாசிப்புக்குரிய நூலகமாகவே அது அதிகம் காணப்பட்டது.

**நிலாந்தன்**

புலமைசார் தேவைகளை ஈடுசெய்யத்தக்க உரிய வளர்ச்சிகளைப் பெற முன்பே அது எரிக்கப்பட்டுவிட்டது என்று கூறப்படுகிறது.

எரிக்கப்பட்டதிலிருந்து அதைச்சுற்றி ஒரு ஒளிவட்டம் உண்டாகியது. ஒரு ஐதீகம் வளரத் தொடங்கியது. நூலகம் அரசியலாயானது.

அதை எரித்தவர்கள் அதை வெறுமனே உயிரற்ற ஒரு கட்டடத்தொகுதியாக புத்தக இடுக்குகளாகப் பார்க்கவில்லை.

அதை அவர்கள் உயிருள்ள ஒரு ஜீவியாக, யாழ்ப்பாணத்தின் கல்விப்பாரம்பரியத்தின் உயிர் நிலையாகக் கருதியே எரித்தார்கள்.

நள்ளிரவில் கள்வர்களை போல வந்து எரித்து விட்டுப் போகுமளவுக்கு அது படித்த யாழ்ப்பாணத்தவரின் பொக்கிசமாயிருந்தது என்று அவர்கள் நம்பினார்கள்.

அதை எரிக்கும் போது யாழ்ப்பாணத்தின் இதயம் வெந்து கருகிப் போய்விட வேண்டுமென்று நினைத்தே அவர்கள் எரித்தார்கள்.

கொல்லப்பட்ட முன்னாள் அமைச்சரும் யு.என்.பி. தலைவர்களில் ஒருவருமாகிய காமினி திசநாயக்க இதற்கான ஆணையை வழங்கியதோடு யாழ். சுபாஸ் ஹொட்டலின் மேல்மாடியில் நின்று அதைப்பார்த்து ரசித்ததாகவும் ஒரு தகவல் உண்டு. அப்பொழுது அவர் அணிந்திருந்தது ஒரு பற்றிக்ஸ் சறம் என்று அந்தத் தகவல் மேலும் கூறு கின்றது.

அந்த அடியோடு யாழ்ப்பாணம் மீள எழாதபடி வீழ்ந்துவிடும் என்றும் அதன் இதயம் அப்படியே கருகி சாம்பலாகிவிடும் என்றும் அவர்கள் கணக்குப் போட்டார்கள்.

ஆனால் எரிந்த நூல்களின் சாம்பலிலிருந்து ஒரு புதிய யாழ்ப்பாணம் எழுந்தது.

அது கொழும்புக்கு நெருப்புக் கொண்டு போனபோது அதை யாராலும் தடுத்து நிறுத்த முடியவில்லை.

அணுக்குண்டுச் சாம்பலிலிருந்து யப்பானியர்கள் உயிர்த்தெழுந்தது போல, ':.பீனிக்ஸ்' பறவை தனது சொந்தச்சாம்பலிலிருந்து புத்திளமையோடு எழுவது போல ஒரு வீரம் மிகுந்த யாழ்ப்பாணம் அதன் சாம்பலிலிருந்து சிலிர்த்துக் கொண்டு எழுந்தபோது தென்னிலங்கையில் அந்தப்புரங்கள் சிதறின. ஜென ரல்கள் நித்திரையில் புலம்பினார்கள்.

இப்பொழுது நூலகத்தை அவர்களே திருத்தித தருமளவுக்கு நிலைமை மாறி விட்டது. இதன் மூலம் தமது பாவங்களுக்கு பிராயச்சித்தம் தேடுகிறார்களா? அல்லது அந்த ஆறாக்காயத்தை வெள்ளையடித்து மறைத்துவிட முயல்கிறார்களா?

> வாயைக்கட்டி வயிற்றைக்கட்டி சேமிக்கும் யாழ்ப்பாணத்தவர்கள் கார்ணிவெல் நடாத்தியும் லொத்தர் குலுக்கியும் சிறுகச் சிறுகக்கட்டிய நூலகம் அது.

கடந்த வருடம் மானுடத்தின் தமிழ்க்கூடல் நடந்தபோது அதில் கலந்து கொண்ட இந்திய ஓவியர் மருது யுத்த அழிவுகளை இயன்றளவு அப்படியே பேணிப் பாதுகாக்கவேண்டும் என்று சொன்னார்.

புனரமைப்பு என்ற பெயரில் ஒரு பயங்கரமான காலகட்டத்தின் சான்றுப் பொருட்களை அழித்து விடக் கூடாது என்றுமவர் சொன்னார்.

ஆம். முன்பு எரிக்கப்பட்ட நூலகத்தை அப்படியே பேணியிருந்திருக்கவேண்டும். அது என்றென்றும் தமிழர்கள் பற்றிய சிங்களவரின் மனோபாவத்தைக் கூறும் ரத்த சாட்சி போல நின்றிருந்திருக்கும். தமிழர்கள் ஏன் வெடிமருந்துகளாயானார்கள் என்ற செய்தியை அந்தச்சாம்பல் சதாகாலமும் கூறியபடியிருந்திருக்கும்.

ஆனாலதைப்பற்றி அப்பொழுது யாருமே சிந்தித்திருக்கவில்லை.

*1981ல் எரிக்கப்பட்ட நூலகம் 1984ல் புனரமைக்கப்பட்டு திறக்கப்பட்டது.*

எந்த சனாதிபதி ஜெயவர்த்தன நூலகம் எரிக்கப்பட்டதற்காக குற்றஞ்சாட்டப்பட்டாரோ அவரிடமிருந்தும் ஒரு தொகைப் பணம் பெற்று நூலகம் புனரமைக்கப்பட்டது.

எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரை(எஸ்.பொ) அந்தக்காசை Blood Money - ரத்தக்கறை படிந்த காசு - என்று கூறினார்.

ஆனால் புனரமைக்கப்பட்ட நூலகம் நிமிரமுன்பே ஈழப்போர் வேகமெடுக்கத் தொடங்கி விட்டது.

யாழ்ப்பாணத்துக்கான சமர்களில் குறிப்பாக நகரத்துக்கான சமர்களில் சிக்கிப் பாழடைந்தது போயிற்று நூலகம்.

யாழ்ப்பாணத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து பொது சன ஐக்கிய முன்னணி அரசாங்கம் அதைப் புனரமைக்கப் போவதாக அதிகம் விளம்பரம் செய்தது.

யு.என்.பி.க்கு எதிரான அரசியலில் நூலகத்தை உயர்த்திப்பிடித்த சந்திரிகா, சனாதிபதி நிதியத்திலிருந்து நூலகத்துக்காக ஒதுக்கிய தொகை ஆயிரம் ரூபாய் மட்டுமே என்பது அதிலுள்ள மிகவும் அருவருப்பான ஒரு விசயம்.

இது ஒன்றே போதும் நூலகம் எப்படி எப்படி எல்லாம் அரசிய லாகியதென்பதைக்காட்ட.

இப்பொழுது இன்னொரு ஜெயவர்த்தன அதை இரண்டாவது தடவையாகப் புனரமைத்திருக்கிறார்.

இம் முறையும் அது புனரமைக்கப்படுகையில் அதைத் தடுத்து நிறுத்தி அதையொரு யுத்தகால நினைவுச் சின்னமாகப் பேணியிருந்திருக்க வேண்டும்.

சம்பந்தப்பட்ட எவருமே அதை அப்படிப் பேண வேண்டும் என்று தோன்றுவது துர்லாபமே. இப்பொழுது அந்த அழிவுகளை மூடி வெள்ளையடிக்கப்பட்டு விட்டது.

இதில் யாழ்மாநகரசபை தனது பொறுப்பையுணர்ந்து தீர்க்க தரிசனத்துடன் நடந்து கொள்ளவில்லை என்று ஒரு குற்றச்சாட்டு உண்டு,

ஆனால் சம்பந்தப்பட்ட அமைச்சர் இதுவிசயத்தில் மாநகரசபையை அதிகம் கலந்தாலோசிக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

எதுவோ - நூலகம் அரசியலாகிவிட்டது. அதை ஒரு உயிருள்ள மியூசியமாகப் பேணத்தவறியதற்கு சம்பந்தப்பட்ட எல்லாருமே, படித்த தமிழர்கள், எல்லாருமே பொறுப்பேற்க வேண்டும்.

சரி - இப்பொழுது எல்லாவற்றையும் மூடி வெள்ளையடித்தாயிற்று. இதன் மூலம் அவர்கள் பாவமன்னிப்புக் கேட்கிறார்கள் என்று ஒரு கதைக்காக வைத்துக் கொள்வோம்.

அவ்வாறாயின் இரு தடவைகள் புனரமைத்து வெள்ளையடித்ததால் மறைக்கப்பட்டு விட்ட செய்திகளைக் குறைந்த பட்சம் வேறொரு வழியில் கூறமுடியும்.

எப்படியென்றால் - நூலகத்தின் பெயரை தாவீது அடிகள் நினைவு நூலகம் என்று வைத்து விடலாம்.

நூலகம் எரிக்கப்பட்டதாம் என்ற செய்திகேட்டு அந்த அதிர்ச்சியிலேயே உயிரை விட்டவர் அவர்.

தும்பளைத் தாவீது அடிகள் என்று அறியப்பட்ட வணக்கத்துக்குரிய கலாநிதி டேவிற் (அல்லது தாவீது) யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரியில் ஆசிரியராய் இருந்தவர். பன்மொழிப் புலவர்.

அவருடைய பெயரை நூலகத்துக்குச் சூட்டினால் அதில் அனேகமாக எல்லாச் செய்திகளும் கூறப்பட்டு விடும்.

அதை எரித்தவர்கள் அதை ஒரு நூலகம் என்று நினைத்து எரிக்கவில்லை.

அது யாழ்ப்பாணத்தின் கல்விப் பாரம் பரியத்தின் இதயம் என்று நம்பித்தான் எரித்தார்கள்.

இப்பொழுது அதைப் புனரமைத்தவர்களும் அது ஒரு நூலகம் என்பதற்காக அதைச் செய்தார்கள் என்பதை விடவும் வசப்பட மறுக்கும் யாழ்ப்பாணத்தின் இதயத்தைக் கவரவும் உலகத்தின் அபிமானத்தைப் பெறவும் முயல்கிறார்கள் என்பதே சரி.

சமாதான காலத்தில் அதை ஒரு ஷோகேஸ் ஆக மாற்ற சில அரசியல்வாதிகள் முயல்வது போலத் தெரிகிறது.

இந்த நூலக அரசியலில் உள்ள பயங்கரம் என்னவென்றால் - முன்பு அதை எரித்தவர்கள் மனதில் என்ன இருந்ததோ அது தான் இப்பொழுதும் அதைப் புனரமைத்தவர்கள் மனதிலுமிருக்கிறது என்பதே.

முன்பு எரித்துச் சாதிக்க முடியாமற் போனதை இப்பொழுது புனரமைத்துச் சாதிக்க முயல்கிறார்களா?



# முரண்பாடுகளைக் கடந்தும் தாண்டப்பட்டுள்ள தடைகள்

**முரண்பாடுகள்** நிறைந்ததாகவே அமையும் என்று எதிர்பார்க்கப்பட்ட அரசு புலிகள் இடையிலான தாய்லாந்துப் பேச்சுக்கள்,அதிக சிக்கல்கள் இன்றி,பெருமளவுக்குச் சுமுகமாகவே நடந்தேறியிருக்கின்றன. யாழ் குடாநாட்டின் உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினைகளால் கருத்து வேறுபாடுகள் எழுந்து இதனால் சமாதான முயற்சிகள் பாதிக்கப்படும் என்ற எதிர்பார்ப்புக்கள் காணப்பட்ட போதும்,சில கருத்துவேறுபாடுகளையும் கடந்து தாய்லாந்துப் பேச்சுக்கள் சுமுகமாக நிறைவேறியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சமாதான முயற்சிகளுக்குத் தடங்கலாக இருக்கும் சக்தி இராணுவமும்,அதன் பெருந்தளபதியான சனாதிபதி சந்திரிகாவுமே என்பதை இருதரப்பும் தெளிவாக உணர்ந்து கொண்டுள்ள நிலையில், இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்றும் விடயம் ஒரு மனிதாபிமானப் பிரச்சினையே என்பதில் இருதரப்பும் ஒரு பொது உடன்பாட்டுக்கு வந்துள்ளமை ஒரு முக்கிய அடைவாகவே கருதப்படமுடியும்.நடைமுறைரீதியாக சில சிக்கல்களை ஏற்படுத்திய விடயங்களில், 'உடனடியாக நடைமுறைச் சாத்தியமான இடத்திலிருந்து ஆரம்பித்தல்' என்கின்ற ஒரு உத்தியை இருதரப்பும் கடைப்பிடிக்க முனைவதாகவே, பேச்சுக்களின் முடிவில் வெளியிடப்பட்ட அறிக்கை புலப்படுத்துகிறது.

தாய்லாந்து நாகன்பத்தம் நகரின் றோஸ்கார்டன் ஹோட்டலில் இம்மாதம் 6ஆம் திகதிமுதல் 9வரையில் நடைபெற்ற பேச்சுக்களில் பிரதானமாக யாழ் குடாநாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்ற விவகாரத்திலேயே அதிகளவு கவனம் குவிக்கப்பட்டிருந்தது.இந்த விவகாரத்தை ஒரு இராணுவரீதியான பிரச்சினையாக்குவதற்கு யாழ் குடாநாட்டுத் தளபதி மேஜர் ஜெனரல் பொன்சேகா முயன்றிருந்தநிலையில், சிக்கலடைந்திருந்த இந்தப் பிரச்சினை ஒரு பொதுஉடன்பாட்டுக்கு வந்திருக்கிறது.இதன்படி பேச்சுக்களின் முடிவில் இருதரப்பாலும் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கை,இம்முறை பேச்சுக்களிலும் சில முக்கிய இலக்குகள் எய்தப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்ற விவகாரத்தை இருகட்டங்களாக மேற்கொள்ளவது என ஒரு நடவடிக்கைத் திட்டத்தை இருதரப்பும் தீட்டியுள்ளன. இதன்படி, தற்போது உடனடிப் பிரச்சினையாக இருக்கும் இந்த அவசர மனிதாபிமானப் பிரச்சினை கட்டம்கட்டமான நடவடிக்கைகளின்மூலம் தீர்த்து வைக்கப்பட ஏற்பாடாகியுள்ளது. முதற்கட்டமாக,தற்போது உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியிலேயே இடம்பெயர்ந்த மக்கள் அதிகளவில் காணப்படுகின்றனர் என்ற அடிப்படையில் இவர்களை முதலில் அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிப்பது என்று இருதரப்பும் இணங்கியுள்ளன.இதனை நிறைவேற்றுவதற்கான கால அட்டவணையொன்றும் இருதரப்பாலும் தீட்டப்பட்டுள்ளது.



இந்த இணக்கப்பாட்டின் முக்கியத்துவம் பற்றிக் குறிப்பிடும்போது,விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம்,"முதற்தடவையாக இந்த அரசாங்கம் உயர்பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே அமைந்துள்ள இராணுவ முகாம்களை அகற்றி அப்பகுதிகளில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பொதுமக்களின் வீடுகள் மற்றும் சொத்துக்களை மீளவும் அவர்களிடம் ஒப்படைத்து மக்களை மீளக் குடியேற்ற அனுமதிப்பது என்று இணங்கியிருக்கிறது.இது விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரையில் மிகமுக்கியமான ஒரு அடைவே.அடுத்த கட்டமாக உயர் பாதுகாப்பு வலயங்களில் மீள் குடியேற்றத்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு இணங்கியிருக்கிறது"என்று குறிப்பிட்டார்.



**ருசாங்கன்**

"யாழ் குடாநாட்டில் மீளக் குடியேற்றத்தை துரிதப்படுத்துவதற்கான செயற்றிட்டம்" என்று பேச்சுக்களின் முடிவில் இருதரப்பாலும் வெளியிடப்பட்டுள்ள கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள திட்டம்,இருகட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமான, பாதுகாப்பு வலயத்துக்கு வெளியேயான மீள்குடியேற்றச் செயற்பாட்டுக்கான கால அட்டவணை பின்வருமாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

1)மீள்குடியேற்றத்துக்கான பௌதீக மதிப்பீடுகளை பெப்ரவரி மாதம் 7ஆம் திகதியளவில் நிறைவு செய்தல்,

2)பெப்ரவரி 14ஆம் திகதியளவில் திட்ட ஆலோசனைகள் பெறப்பட்டு,அவற்றை செயற்படுத்தக்கூடிய முகவர்களை இனங்காணல்,

3)இதற்குத் தேவையான நிதி மூலங்களை இனங்கண்டு, அவற்றைப் பெறுவதற்கான ஏற்பாடுகளை ஜனவரி மாதம் 30ஆம் திகதியளவில் நிறைவுசெய்தல்,

4)ஜனவரி 31ஆம் திகதிக்குள்,பாதுகாப்புப் படையினரால் பயன்படுத்தப்பட்டுவரும் பகுதிகளை உரியவர்களிடம் கையளித்தல் அல்லது அதற்குரிய பாவனைக்கு ஒப்படைத்தலுக்கான திட்டமொன்றை வகுத்தல்.

இவ்வாறு இந்த மீள்குடியேற்றத் திட்டத்தை இயன்றவிரைவில் நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக,உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுப் பணிகளுக்கான உபகுழுவின் அரச மற்றும் புலிகளின் பிரதிநிதிகள் இயன்ற விரைவில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரதிநிதிகளைச் சந்தித்து ஆலோசனை நடாத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.இந்தத் திட்டத்துக்குள் இடம்பெயர்ந்த முஸ்லிம்களை அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றுவதற்கு அவசியமான நடவடிக்கைகளும் உள்ளடக்கப்படும் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை இராணுவ விவகாரமாக்கிச் சிக்கலுக்குள்ளாக்காமல் நடைமுறைச்சாத்தியமான ஒரு இடத்திலிருந்து அதனை ஆரம்பிப்பதற்கான ஒரு திட்டவரைவு எட்டப்பட்டுள்ளது இந்தப் பேச்சுக்களில் எய்தப்பட்டுள்ள ஒரு முக்கிய இலக்கு என்றே கருதப்படுகிறது.

பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியேயுள்ள பிரதேசங்களில் திட்டமிட்டபடி இந்த மீள் குடியேற்றம் வெற்றிகரமாக நிறைவேற்றப்படும் போது, அதன்பின்னர் பாதுகாப்பு வலயத்துக்குள்ளே அமைந்துள்ள பகுதிகளுக்குள்ளும் மீள்குடிறேற்றத்தை ஆரம்பிப்பதற்கான ஒரு சூழல் கனியும் என்கின்ற எதிர்பார்ப்புடனே இந்த உடன்பாடு எட்டப்பட்டுள்ளது என்று கருதப்படுகிறது.இதற்கான திட்ட வரைவும் கூட்டறிக்கையில் பருவரையாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



"உயர்பாதுகாப்பு வலயச் சிக்கல் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இலகுவில் தீர்க்கப்பட முடியாத ஒரு பிரச்சினையாகக் காணப்படுகிறது. இந்த விடயத்தில் இராணுவம் ரணில் விக்கிரமசிங்காவின் அரசுக்கு ஒத்துழைக்கத் தயாராக இல்லை.இராணுவத்துக்குப் பின்னால் இருந்து கொண்டு, முப்படைத்தளபதியும், சனாதிபதியுமான சந்திரிகா பண்டாரநாயகா இந்த விவகாரத்தைக் குழப்பியடிக்க முயல்கிறார்.இந்நிலையில் இதற்கு மேல் நாம் இந்த விவகாரத்தில் இறுக்கமாக இருந்தால் அது ரணில் அரசை நெருக்கடிக்குள் தள்ளிவிடும். சந்திரிகா அரசைக்கலைத்து விடுவார்.எனவேதான் உயர் பாதுகாப்பு வலயங்களை எவ்வாறு தளர்த்துவது, அப்பகுதிகளில் நிலைகொண்டுள்ள படையினரை எவ்வாறு பாதுகாப்பாக வேறு இடங்களுக்கு நகர்த்துவது என்பது தொடர்பாக சர்வதேச இராணுவ வல்லுணர்களின் ஆலோசனைகள் பெறப்படும்வரையில் இந்த அரசுக்கு ஒரு காலஅவகாசம் வழங்குவது என நாம் தீர்மானித்துள்ளோம்"என்று பேச்சுக்களின் முடிவில் தமிழ் ஊடகவியலாளர்களிடையே பேசிய திரு.அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தெரிவித்தார்.


உயர்பாதுகாப்பு வலயத்துக்குள்ளான மீள்குடியேற்றம் தொடர்பாக இருதரப்புக் கூட்டறிக்கையின் வருமாறு தெரிவிக்கிறது.அதாவது 'இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றுதற்கான நடவடிக்கைத்திட்டத்தின் இரண்டாம் கட்டமாக, படையினரால் மீளக் கையளிக்கப்படும் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக் குடியேற்றுவதில் கவனம் குவிக்கப்படும்' என அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

இவற்றைவிட இம்முறை பேச்சுக்களில் எட்டப்பட்ட முக்கிய ஒரு அடைவாகக் கருதப்படுவது,வடக்குக் கிழக்குப் புனர்வாழ்வு நிதியத்திற்கான பொறுப்பு உலகவங்கியிடம் ஒப்படைக்கப்பட்டமையாகும். இது விடயத்தில் முன்னர் முரண்டு பிடித்த சிறிலங்கா அரசு இப்போது அதற்கு இணங்கியுள்ளது.அத்தோடு இனிமேல் வடக்குக் கிழக்கில் புனர்வாழ்வு புனரமைப்புத் தொடர்பான விடயங்களில் தீர்மானங்களை மேற்கொள்ளும் பொறுப்பு முற்றாக இதற்குரிய உபகுழுவிடமே இருக்கும் என்றும் இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.இதுவும் பேச்சுக்களின் முக்கிய அடைவு என்று கருதப்படமுடியும்.

இதேசமயம்,இனிமேல் பாதுகாப்பு மற்றும் இயல்புநிலைதொடர்பான உபகுழுவில் பங்குபற்றுவதில்லை என்று புலிகள் தீர்மானித்துவிட்ட நிலையில்,இனிமேல் போர்நிறுத்த மீறல்கள் தொடர்பாக கண்காணிப்புக் குழுவுக்குக் கிடைக்கக்கூடிய முறைபாடுகள் தொடர்பாக மாதாந்தம்,அரசதரப்பில் பெர்ணாண்டோவும் புலிகள் தரப்பில் கேணல் கருணாவும் சந்தித்து உரையாடுவார்கள் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.அத்தோடு பால்நிலை மற்றும் பெண்கள் விவகாரங்களைக் கையாள்வதற்கென முற்றிலும் பெண்களைப் பிரதிநிதிகளாகக் கொண்ட புதிய உபகுழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இதில் இருதரப்பிலிருந்தும் தலா ஐந்துபேர் அங்கம் வகிப்பர் என்றும், அவர்களுடைய பெயர் விவரங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஆகமொத்தம் பலத்த முரண்பாடுகள் எழலாம் என்று எதிர்பார்க்கப்பட்ட இம்முறை பேச்சுக்கள் சில கருத்து வேறுபாடுகளுடனும் சமாதான முயற்சிகளில் தொடர்ந்தும் உறுதியாக ஈடுபடுவது என்ற உறுதியுடள் நிறைவடைந்திருப்பது வெளிப்படையாகிறது

## மதவடி மயிலர்



*செய்தி: பொதுசன ஐக்கிய முன்னணியைக் கலைத்துவிட்டு பொதுவான எதிர்க்கட்சி ஒன்றை உருவாக்க சனாதிபதி - ஜே.வி.பி சந்தித்துப் பேசினாலும் கூட இறுதியான முடிவை எடுப்பது நானே என்கிறார் மகிந்த ராஜபக்ஷ.*

மயிலர்: அரசியல் சூடாகத்தான் போகுது பாருங்கோ.... போகிற போக்கைப் பார்த்தா சனாதிபதி தன்ரை நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்த தன்னிடம் தான் அனுமதி பெறவேண்டும் என்று ராஜபக்ஷ சொன்னாலும் ஆச்சரியப்பட முடியாது.... என்னவானாலும் சுதந்திரக்கட்சி, பொதுசன ஐக்கிய முன்னணி இரண்டினது எதிர்காலம் கவலைக்குரியதாகத்தான் இருக்குது.... அதை ராஜபக்ஷவாலும் காப்பாற்ற முடியாது, அநுராவாலும் காப்பாற்ற முடியாது. பாருங்கோ... பாம்பை அரவணைக்க நினைச்சவை கடிவாங்கவும் தயாராத்தானே இருக்க வேண்டும்.... நான் சொல்லுறது சரிதானே....?

*செய்தி: சனாதிபதி கட்சியைப் பலப்படுத்தியதும் அரசைக் கலைப்பார் என்கிறார் சரத் அமுனுகம...*

மயிலர்: அப்ப கட்சி சரியாப் பலவீனப்பட்டுக் கிடக்கெண்டு அமுனுகம ஒப்புக் கொள்ளுகிறார்.... அதுசரி அம்மணியின்ரை நடவடிக்கைகள் மேலும் கட்சியை பிளவுபடுத்திற மாதிரியெல்லே போகுது.... இந்த நிலையிலை ஜே.வி.பி யோடை சேர்ந்து கட்சியை பலப்படுத்தலாமெண்டே அம்மணி நினைக்கிறா....ஏழரைச் சனியும் அட்டமத்து சனியும் சேர்ந்தா எப்படியிருக்கும்.... ஆபத்து சுதந்திரக்கட்சிக்கு மட்டுமில்லை சுதந்திர லங்காவுக்கும் தான் பாருங்கோ....!

*செய்தி: பாதுகாப்பு வலயம் தொடர்பாக கருத்து முரண்பாடுகள் நிலவின - நோர்வே அரசின் அறிக்கை தெரிவிப்பு.*

மயிலர்: மக்கள் குடியிருப்புப் பகுதிகளை அதியுயர் இராணுவ பாதுகாப்பு வலயம் எண்டு சொல்லுறதே பெரிய முரண்பாடுதானே... முரண்பாடுகளுக்கு நியாயமான முறையில் உடன்பாடு காணத்தானே பேச்சுவார்த்தை... அதுக்கே நிபந்தனை விதிக்கிற இராணுவத்தினர் சமாதானத்தோடு உடன்படுவார்கள் எண்டு எப்பிடி நம்புறது பாருங்கோ... எப்படியெண்டாலும் இராணுவம் இராணுவம்தான்... கருத்திலை முரண்பாடு இருக்கையில் தீர்விலை உடன்பாடு வருவது எப்படியெண்டு தான் விளங்கேல்லை....

*செய்தி: அநுசரணையாளராக வந்த நோர்வே ஆக்கிரமிப்பாளராக மாறியுள்ளது... என்கிறார் முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரம நாயக்கா.*

மயிலர்: ஐயா... இருக்கிறீங்களே...! ஆளைக்காணேல்லை... தலை மறைவாகிவிட்டார் என்றெல்லே ஊரெல்லாம் கதையடிபட்டது... நோர்வே ஆக்கிரமிச்சது இருக்கட்டும் நீங்க அடிச்சதா கூறப்பட்ட கோடிக் கணக்கான ரூபாய்க்கு என்னநடந்தது? அதுசரி உங்கடை வீட்டிலை கூட நீங்கள் எங்கையெண்டு தங்களுக்கு தெரியா தெண்டெல்லே கையை விரிச்சினமாம்... ஏன் ஐயா உங்கடை குடும்பத்தோடை உங்களுக்கு ஏதும் பிரச்சினையே... இவ்வளவு பிரச்சினை உங்களை ஆக்கிரமிச்சு அலைக்கேக்கை... நோர்வே ஆக்கிரமிப்பு உங்களுக்கு பெரிசாத் தெரியலாமோ...?

ஆள்வதை விட, அடங்கி கீழ்ப்படிவது பெரிதும் பாதுகாப்பானது. - தாமஸ் ஏ கெம்பிஸ்

# நறுக்கென...

## நீலம் பாரித்த இடதுசாரிகளும் பொ.ஐ.முன்னணியும்....



பொதுசன ஐக்கியமுன்னணி - ஜே.வி.பி. கூட்டணி உருவாகுவது என்பது பெரும்பாலும் உறுதியாகி விட்டுள்ள நிலையில் பொதுசன ஐக்கிய முன்னணியின் 'பேச்சு வார்த்தைகள்' தொடர்பான 'மறைமுக' பேச்சாளராக விமல் வீரவன்சவே இயங்கி வருகின்றார் என்று கொழும்பு ஊடகவிய லாளர்கள் தெரிவிக்கின்றனர். இதில் உண்மையில்லாமல் இல்லை.

சந்திரிகா பொதுவாக சமாதானத்திற்கு தன்னை ஆதரவாளராகக் காட்டிக் கொண்டாலும் கூட, தன்னுடன் இணைந்துள்ள சரத் அமுனுகம போன்றோரையும், ஜே.வி.பி. போன்ற இனவாத இடது சாரிகளையும் ரணிலின் அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும், சமாதான முயற்சிகளுக்கும் அதற்கான அனுசரனையாளர் களுக்கும் எதிரான பரப்புரைகளை மேற்கொள்வதற்கான ஒலி பெருக்கிகளாகப் பயன்படுத்தி வருகின்றார் என்பது தெளிவு.

குறிப்பாக ஐ.தே.கட்சியிலிருந்து கடந்த தேர்தலின் முன்னர்விலகி பொ.ஐ.முன்னணியில் இணைந்தவரான சரத் அமுனு கமவின் அண்மைக்காலப் பேச்சுக்கள் இதற்கு சிறந்த உதாரணங்களாகும்.

புலிகளின் குரல் வானொலி ஒலி பரப்புக்கானசாதனங்கள் தொடர்பான விடயத்தை ஒரு பெரும் விவகாரமாக்கி தென்பகுதியிலும், இந்தியா போன்ற அயல் நாடுகளிலும் குழப்பத்தை ஏற்படுத்தவும், நோர்வேக்கு எதிரான பிரசாரங்களை மேற்கொள்ளவும், சரத் அமுனுகம தான் பிரசாரகாரராகச் செயற்பட்டார்.

ஒட்டு மொத்தமாகவே சமாதான நடவடிக்கைகளுக்கும், அது தொடர்பான சகல செயற்பாடுகளுக்கும் ஆரம்பகாலம் முதலே எதிர்ப்புக்குரல் எழுப்பிப் புலம்பி வரு கின்ற ஒலிபரப்பு சாதனமாக விமல் வீரவன்சவும், டில்வின் சில்வா போன்ற ஏனைய ஜே.வி.பி.யினரும் இயங்கிவருவது பகிரங்கமான விடயமேயாகும்.

ஜே.வி.பி. யின் பின்புலப் பலமாக சந்திரிகாவே இயங்கி வந்துள்ளமை, ஜே.வி.பியுடன் இணைந்து பகிரங்கமாகவே செயற்பட்டுவரும் அநுராபண்டார நாயக்கா மங்கள சமரவீர போன்ற வர்களின் நடவடிக்கைகள் மூலம் தெளிவானதாகியுள்ளன.

அண்மையில் ஒரு தென்பகுதி பத்திரிகையாளர் சந்திரிகாவின் ஆலோசகர் அநுரா, அநுராவின் ஆலோசகர் விமல்வீரவன்ச எனக்குறிப்பிட்டுள்ளதை நினைவுபடுத்தினால் அனைத்தும் விளங்கும்.

நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி ஆட்சியைக்கலைக்குமாறு ஜே.வி.பி தொடர்ந்து சந்திரிகாவுக்கு அழுத்தங்கள் கொடுத்து வருகின்றது.

இதேவேளை ஐ.தே.முன்னணி அரசில் பிளவுகளை உருவாக்கி, அதனைப் பலவீனப்படுத்தி, மாற்று அரசாங்கம் ஒன்றை உருவாக்கும் 'சதி'முயற்சியிலும் பொ.ஐ.முன்னணி, ஜே.வி.பி கூட்டணி தீவிரமாக இயங்கி வருகின்றமையும் பகிரங்கமான விடயமே.

ஆனாலும் பொ.ஐ.முன்னணி - ஜே.வி.பி. கூட்டணியின் கோமாளித் தனமான கூட்டணியிலிருந்து கம்யூனிஸ், மற்றும் சமசமாஜக் கட்சிகள் போன்ற 'நீலம்பாரித்த' இடதுசாரிகள் உறுதியான முகவரியை இழந்தவர்களாக வெளியேறத் தீர்மானித்திருப்பதும் சந்திரிகாவை குழப்பமடைய வைத்துள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்களுடன் சிறிமாவோ காலம்முதலே இறுக்கமான பிணைப்பினைக் கொண்டிருந்த இடது சாரிகளின் 'வெளியேறுவதற்கான' எண்ணம், கட்சிக்குள் கடும் விமர்சனங்களையும், குழப்பங்களையும் ஏற்படுத்தியுள்ள நிலையில்...

பொ.ஐ.முன்னணியில் இருந்து சிறிலங்கா சுதந்திரக்கட்சி வெளியேற்றப்படுமா? அல்லது பொ.ஐ.முன்னணியிருந்தும் இடதுசாரிகளும் ஏனைய ஜே.வி.பி எதிர்பாளர்களும் வெளியேறு வார்களா என்பது இன்னும் சில நாட்களில் தெரிந்துவிடும்.

எல்லாமே..'நீலம்பாரித்த' இடது சாரிகளின் 'ரோசத்'தில் தான் தங்கியுள்ளது.

## சந்திரிக்காவுக்கு விழுந்துள்ள அறிவுறுத்தல் குட்டுகள்



புலிகளின் குரல் ஒலிபரப்புக்கான கருவிகள் மற்றும் சாதனங்கள் இறக்குமதி செய்யப்பட்டமை தொடர்பாக பெருமளவில் நோர்வே தூதருக்கு எதிராகக் கொக்கரித்த சந்திரிகா, இது தொடர்பாக நோர்வே பிரதமருக்கு நேரடியாகவே விளக்கம் கேட்டு எழுதிய கடிதத்திற்கு மிகச் சுருக்கமாக, தெளிவாக, அதேசமயம் 'நறுக்கென...' இராஜதந்திர வார்த்தைகளில் அனுப்பிய பதில் சந்திரிகாவை வாயடைக்க வைத்ததுடன். 'சந்திரிகா' தொடர்பான நோர்வேயின் 'மதிப்பீட்டை'யும் வெளிப்படுத்தியுள்ளது.

ஒரு நாட்டின் சனாதிபதி - அதே நாட்டின் பிரதமரையும் அவர் தலைமையிலான ஆட்சியையும் மட்டம் தட்டும் நோக்குடன், அவரையும் அவரது ஆட்சியையும் விட தனது நிறைவேற்று அதிகாரம் வலுவானது என்ற மமதையுடன் எழுதப்பட்ட அந்த விளக்கம் கோரும் கடிதம், ஒரு நாட்டின் பிரதமர், அல்லது அதிபர் எவ்வாறு தன்னுடைய நாட்டையோ, அதன் தூதுவரையோ மதித்து கௌரவிக்க வேண்டும் என்பதை அவருக்கு அறிவுறுத்துவதாகவும் அமைந்துள்ளது.

சந்திரிகா, ரணிலையும் அவர் தலைமையிலான அரசையும் மிரட்டியும், அச்சுறுத்தியும், ரணில் ஒரு அதிகாரமுமற்ற ஒருவர் என பகிரங்கப்படுத்தும் நோக்குடன் மிகவும் அசிங்கமான முறையில் அறிக்கைகளை விட்டு வரும் நிலையில் நோர்வே பிரதமரின் கடிதம் ஒரு நாட்டின் தலைவர் எவ்வாறு நாகரிகமாகப் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டும் என்பதை தெளிவாக உணர்த்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

வெறும் ஒரே பக்கத்தில் மிகவும் சுருக்கமாக எழுதப்பட்ட அந்த விளக்கப்பதில் கடிதத்தில்.

'உங்களின் கேள்விகளுக்கு இலங்கை அரசாங்கம் விளக்கம் கொடுத்துள்ள நிலையில் எமது அரசின் விளக்கம் தேவையற்றது' என்றும் குறிப்பிடப்பட்டிருந்ததாம்.

நோர்வே அரசு ரணில் தலைமையிலான அரசாங்கத்தையே சிறிலங்காவின் அரசாக அங்கீகரித்துள்ளது என்பதையும், 'சந்திரிகாவின் அதிகாரபலம்' என்பதை ஒரு பலமான அரசாங்கமாக கருதவில்லையென்பதும் இக்கடிதம் தெளிவுபடுத்தியுள்ளது.

நோர்வேயின் இராஜதந்திரப் பாஷையை சந்திரிக்காவின் வரட்டுத்தனமான பதவிமோக அரசியல் அறிவு புரிந்து கொள்ளாது என்பது தெளிவு.. அவரது அரசியல் பாரம்பரியம் அப்படியானதுதான்.

இதேவேளை சந்திரிகாவின் இந்தக் 'கடித' நடவடிக்கையை பொறுப்பற்ற ஒன்று என வர்ணித்துள்ள சிறிலங்காவின் வெளியுறவு அமைச்சர் டிரோன் பெர்ணான்டோ, 'இது சிறிலங்கா அரசின் இராஜீக எல்லைகளை மீறுவதாகக் குறிப்பிட்டுள்ளதுடன் இனிமேல் நோர்வே பிரதமருடன் சனாதிபதி தொடர்பு கொள்வதாயின் வெளியுறவு அமைச்சகத்தின் ஆலோசனையைப் பெற வேண்டும் என அறிவித்துள்ளார். இது எப்படி இருக்கிறது?

இதனை சந்திரிகா நிராகரித்தாலும் கூட, அவருக்கு தலையில் விழுந்துள்ளது பலமான 'நறுக்...நறுக்' தான்.

## நம்பியாரின் வருகையும் இந்தியாவின் உதவிகளும்



சிறிலங்காவின் சகல பிரச்சனைகளுக்கும் 'முடிவு' காணும் அல்லது ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் வழங்கும் பொறுப்புகள் ஒவ்வொன்றாக வெளிநாடுகளின் கைகளில் ஒப்படைக்கப்படத் தொடங்கியுள்ளது.

உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான பிரச்சினைகள் குறித்து ஆராய உருவாக்கப்பட்டுள்ள சர்வதேச குழுவுக்கு இந்திய இராணுவ அதிகாரியான லெப். ஜெனரல் சதீஸ் நம்பியார் தலைமை தாங்கவுள்ளதாக தெரியவந்துள்ளதையும் தான் கூறுகிறோம்.

இந்தியாவின் முப்படைகளுக்கும் பொதுவான - அனைத்துத்தரப்பினரும் அங்கம் வகிக்கும் இணைந்த சேவைகள் நிறுவனத்தின் முன்னாள் பிரதித்தலைமை அதிகாரியும், இந்திய முன்னாள் பிரதித்தலைமை அதிகாரியும், இந்திய இராணுவத்தின் நடவடிக்கைகளுக்கான கட்டளை அதிகாரியாகவும் இருந்தவரான சதீஸ் நம்பியாரின் தேர்வும், அவரது வருகையும் பல்வேறு சந்தேகங்களையும், வினாக்களையும் எழுப்பியுள்ள நிலையில், அவர் இலங்கை அரசாங்கமே தன்னை அழைத்துள்ளதாகவும், இந்திய அரசுக்கும் தனது வருகைக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லையென்றும் தெரிவித்துள்ளார்


'இல்லை' என வலுவாக மறுப்பதே 'ஏதோ இருக்கிறது' என்ற சந்தேகத்தை ஏற்படுத்து கின்றது என்கிறார் ஒரு இராணுவ ஆய்வாளர்.

இது குறித்து விரிவாகத் தன்னால் கூறமுடியாதென்றும் அவர் தெரிவித்துள்ளமையானது. விபரிக்க முடியாத விடயங்களும் இருக்கின்றன என்பதை உறுதிப் படுத்துவதாகவே உள்ளது.

எனது வருகை தொடர்பாக இந்திய அரசிடம் நிச்சயம் இலங்கையரசு கேட்டிருக்கும். எனினும் இலங்கை செல்வது எனது தனிப்பட்ட முறையில் தான் எனக் கருத்துக் குழப்பத்தை ஏற்படுத்தும் நம்பியார். இந்திய அரசின் விருப்புக்குமாறாக, அவர்களின் அனுமதியின்றி, ஆலோசனையின்றி இங்கு வந்திருக்கமாட்டார். என்றே இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

சமாதான முயற்சியில் இந்தியா தலையிடாது ஆலோசனை வழங்க ஆனால் இலங்கை கேட்டும் உதவிகளை வழங்கும் என்று இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந் சிங்ஹா கூறியுள்ளதனை ஆழமாக யோசித்தால் சில உண்மைகள் விளங்கவே செய்யும். சதீஸ் நம்பியாரின் வருகை இலங்கைக்கான இந்தியாவின் உதவிகளில் ஒன்றாக ஏன் இருக்க முடியாது? சதீஸ் நம்பியார் வழங்கப்போகும் ஆலோசனைகள் அவருடைய தனிப்பட்ட ஆலோசனைகளாக மட்டும் தான் இருக்கும் என எவரும் நம்பினால் அதற்கு ஒன்றும் செய்ய முடியாது. இந்தியா இலங்கைக்கு வழங்கும் ஆலோசனைகளோ உதவிகளோ, இலங்கைக்கு உதவியாக இருக்குமோ என்னவோ... ஆனால் இந்திய நலன்களை - அபிலாஷைகளைப் பாதுகாப்பதாக மட்டும் நிச்சயம் இருக்கும் இது தான் நடைமுறை... இதுதான் வரலாறு....

## கதிர்காமரின் சிந்தனைகள் இந்துவின் வெளிப்படுத்தல்கள்



இந்தியாவில் இருந்து வெளியாகும் 'இந்து' என்ற ஆங்கிலப் பத்திரிகையின் இலங்கைப் பிரச்சினை தொடர்பான நிலைப்பாடு பிரபல்யமான விடயம். எப்போதும் குட்டையக்குழப்ப 'குஷி' காணும் போக்கையே அது கொண்டு வந்துள்ளமை தெளிவான விடயமாகும்.

இந்தப் பத்திரிகை விடுதலைப் புலிகளுக்கும், தமிழ் மக்களின் போராட்டத்திற்கும் எதிராக உண்மைக்குப் புறம்பான கருத்துக்களை விதைப்பதில் சிறிலங்காவின் உபாலி நிறுவன வெளியீடுகளுக்கு சமமானது.

இப்பத்திரிகைக்கு முன்னாள் வெளியுறவு அமைச்சருக்கும் இந்நாள் சனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகரும், வெளிநாடுகளில் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தையும் விடுதலைப்புலிகளையும் பற்றி கொச்சைப்படுத்தி அவர்களுக்கு எதிரான பரப்புரைகளுக்கு தலைமை தாங்கி, சிங்கள இனவாதிகளால் பாராம்பப்பட்டு வருபவருமான லக்ஷ்மன் கதிர்காமர் ஒரு பேட்டியை வழங்கியுள்ளார்.

'அதில் தற்போதைய சமாதான நடவடிக்கைகளுக்கான விலை மிகவும் அதிகமாக இருப்பதாக' பெரும் தத்துவம் ஒன்றை உதிர்த்திருக்கிறார்.

'எந்த விலை கொடுத்தாவது சமாதானத்தை வாங்கி விட வேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு தீவிரமாக செயற்படுகிற தென்றும் இந்த முயற்சி சிறிலங்காவை பிளவுபடுத்துமென்றும்' அவர் வழமைபோல் சந்திரிகா விசுவாசத்துடன் தனது நாவையாட்டியுள்ளார்.

எந்த விலை கொடுத்தென்றாலும் போரை நடத்தி புலிகளையும், தமிழ் மக்களின் விடுதலையுணர்வையும் முற்றாக நிர்மூலமாக்க முயன்ற சந்திரிகா அரசின் வெளியுறவு அமைச்சராக கொத்தடிமைப் பதவியை வகித்தபோது, சிறிலங்காவின் நிதி மற்றும் மனிதவளங்கள் அனைத்தையும் யுத்தத்திற்குள் கொட்டி நாசமாக்கியபோது, அதற்கு அம்மையார் கொடுத்த விலையை கதிர்காமர் சிந்தித்திருக்க மாட்டார். ஏனென்றால் அந்தப் போரினால் இலாபமடைந்தவர்களில் அவரும் ஒருவர்.

போருக்காக எந்தவில்லையும் கொடுக்கலாம், சமாதானத்திற்காக எந்தச் செலவும் செய்யக் கூடாது என நினைத்து அபூர்வ அரசியல் ஞானியின் ஆலோசனைகளைப் பெற சந்திரிகா என்ன தவம் செய்திருக்க வேண்டும்?

'பேச்சு வார்த்தைகள்' தேசத்தைப் பிரிக்குமாம் போர் பிரிக்காதாம்.... என்ன அபூர்வமான சிந்தனை கதிர்காமருடையது?

'இந்து' பத்திரிகை இப்படி ஒரு அரசியல் மேதை (பேதை)யினுடைய பேட்டியை போட்டதற்காகப் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

## வருந்தத்தக்கது

எமது பத்திரிகையில் கிராமசேசையாளர்கள் தொடர்பான ஒரு ஆக்கம் வெளிவந்தமை தெரிந்ததே.

இவ்வாக்கம் மூலம் எல்லாக்கிராம சேவையாளர்களையும் குறைகாண்பதாக அதன் கட்டுரையாளர் எழுத முயலவில்லை. அவ்வாறான செயலில் ஈடுபடும் நபர்களை மட்டுமே அவர் குறிப்பிட விரும்பினார்.

ஆனால் எல்லாக் கிராமசேவையாளர்களையும் அது பாதிக்கும் படியாக அமையுமாயின் அது வருந்தத்தக்கதே. அதற்காக நாம் வேதனை அடை கின்றோம்.

இன்றைய சூழலில் மக்களின் பிரச்சினைகள் உரிய முறையில் அணுகப்படவேண்டும் என்ற நல்ல நோக்கத்தின் அடிப்படையிலேயே அவ்வாறான விடயங்கள் வெளிவருகின்றன என்பதை தெரியப்படுத்துகின்றோம்.

# தாய்லாந்து - சமாதானப் பேச்சின் - புதுப்பரிமாணம் பயணமும் பார்வையும்

தி-தவபாலன்

அடுத்த நாள் 2ம் கட்டப் பேச்சுக்களின் இறுதிநாள். காலை பேச்சுக்கள் ஆரம்பமாகிவிட்டன. பகல் 11 மணியிருக்கும் பேச்சுவார்த்தைக் குழுவினர் மண்டபத்தை விட்டு வெளியே வந்தனர். ஒரு இடத்துக்கு அவர்களைத் தாய்லாந்து பிரதிநிதிகள் அழைத்துச் சென்றனர். ஊடகவியலாளர்கள் தொடர்ந்து சென்றனர்.

கூட்டிச் செல்லப்பட்ட இடத்தில் மரமொன்று நடுகைக்கு தயார்ப்படுத்தப்பட்டநிலையில் இருந்தது. தாய்லாந்தில் மகிழ்வான முன்னேற்றகரமான நிகழ்வுகள் ஏதும் நடந்தால் அதற்கு அடையாளமாக சோலோ என்ற வகை மரத்தை நடுவார்களாம். அதேபோல் அன்றும் மரம் நடப்பட்டது. இருதரப்பு பிரதிநிதிகளும் மரத்துக்கு மண் இட்டனர். இதன்பின்னர். பேச்சுக்களில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் ஒளிப்படம் எடுக்க ஒழுங்கு செய்யப்பட்டது. இது நடைபெற்று முடிய பகல் 12 மணியாகி விட்டது. பிரதிநிதிகள் உணவுக்குச் சென்று விட்டனர்.

பிற்பகல் 3 மணிக்கான ஊடகவியலாளர்கள் சந்திப்புக்கான ஏற்பாடுகள் நடந்தன. வெளிநாட்டு நிபுணர்களின் தலைமையில் ஊடகவியலாளர்களின் உடமை (சாதனம்) சோதனைகள் நடைபெற்றன. ஒரு பக்கம் உடமைச்சோதனை -மறுபக்கம் உடற்சோதனை 4 சக்கர சிறிய வண்டி (Tover) குண்டு தேடி ஓடித்திரிந்தது.

சுமார் 1 மணிநேர சோதனையின் பின் (கடும்) ஊடகவியலாளர்கள் சந்திப்பிடத்தில் அமர்த்தப்பட்டனர். TTN செய்தியாளர் சந்திப்பை நேரடியாக ஒளிபரப்ப THICOM TV ஐ ஏற்பாடு செய்தது.

பிரதிநிதிகள் வந்தனர். மேடையின் நடுவில் நோர்வேயின் துணை வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கேசன் - இருபுறமும் திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்களும், G.L பீரிஸ் அவர்களும் அமர்ந்தனர். எரிக்சொல்கெய்ம் சந்திப்பை நெறிப்படுத்த - பேச்சுவார்த்தை அறிக்கையை ஹெல்கேசன் வாசித்தார்.

இதன் பின் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு இருதரப்புப் பிரதிநிதிகளும் பதிலளித்தனர்.இதில் ஒரு சுவாரஸ்யமான விடயம் இந்துப் பத்திரிகை நிருபர் சம்பந்தன் - விடுதலைப்புலிகளை தாக்கி ஆதாரமற்ற தகவல்களை முன்வைத்து கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தார். ஏனைய ஊடகவியலாளர்களின் சந்தர்ப்பங்களை சம்பந்தன் பறிப்பதை உணர்ந்த சொல்கெய்ம் அவர் கேள்வி கேட்டதை நிறுத்துமாறு கேட்டார்.

இருந்தும் கடைசியில் ஒரு கேள்விகேட்டார். விடுதலைப்புலிகள் அரசியல் பிரமுகர்களுக்கு கொலை மிரட்டல்களை விடுக்கிறார்களே என சம்பந்தன் கேட்க திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள் இது ஆதாரமற்ற குற்றச்சாட்டு எனவும் - அப்படி மிரட்டல்களை விடுத்துக் கொண்டு நாம் எப்படிப் பேச முடியும் எனவும் இப்பொழுது உமக்குத் தான் மிரட்டல் விடுக்கவேண்டும் என நகைச்சுவையாகக் கூறினார். அத்துடன் சம்பந்தன் ஓய்ந்து விட்டார்.

சுமார் அரைமணி நேரம் ஆங்கிலத்தில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பினையடுத்து - G.L பீரிஸ் சிங்களத்திலும் திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தலைமையிலான விடுதலைப் புலிகள் தமிழிலும் ஊடகவியலாளர்கள் பதிலளிக்க இரு அறைகளில் ஒழுங்கு செய்யப் பட்டிருந்தது.

அந்தச் சந்திப்புகளும் நடந்து முடிய தாய்லாந்து நேரம் 5 மணியாகி விட்டது. இதற்கிடையில் 'ஒரு இலங்கை' என செய்திக்



குள் இனவாத விளம்பரம் செய்யும் தனியார் கொழும்பு தொலைக்காட்சி ஒன்றின் தமிழ்

காட்சிதன் தமிழ், சிங்கள, ஆங்கில சேவைகளில் செய்திகளிடையே 'ஒரு இலங்கை' என ஆங்கிலத்தில் பயன்படுத்துவது இனவாதமா, இல்லையா, ஒரு இலங்கை என்பது அந்த ஊடகம் கூறும் இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வா? அல்லது சகல மக்களும் ஒரு இலங்கை என்றதை மறக்காதீர்கள் என 'திட்டமிட்டு சிங்கள ஆட்சியாளருள் தமிழர் அடிமையாக இருங்கள் என்ற கருத்தை வலியுறுத்தும்

ஏற்றிவிட்டார் (றோஸ்கார்டனுக்கு வருமானத்துடன் கூடிய இலவச விளம்பரத்தை செய்து கொடுத்த பேச்சுவார்த்தையல்லவா அது)

றோஸ்கார்டனை விட்டு விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் 'தாய்' தலைநகர் பாங்கொக்கிற்கு புறப்பட்டனர்.

நாங்களும், நிதர்சனம் பிரிவினரும் கொழும்பு உடாக தாயகம் திரும்ப, TTN குகன் குணரட்ணம், Denmark சீவாவை அவரது நாட்டுக்கு அனுப்ப அன்றிரவு விமானத்துக்காக பாங்கொக் விமான நிலையம் நோக்கிப் புறப்பட்டோம். நாம் புறப்பட்ட வாகனம் ஓடிக் கொண்டிருந்தவேளை நமது செல்லிடப் பேசி ஒலித்தது. அது IBC நிறுவகத்தினரிடமிருந்ததானது அவர்களின் வேண்டுகைக் கிணங்க தாய்லாந்து 2ம் கட்டப் பேச்சுக்கள் பற்றிய செய்தித் தொகுப்பை வழங்கினோம். தொடர்ந்து அவுஸ்ரேலியாவின் ATBC தமிழ் ஒலிபரப்புக்கும், கனடா தமிழ்ச்சோலை ஒலிபரப்புக்கும் செய்தித் தொகுப்பை வழங்கினோம்.

பாங்கொக் விமான நிலையம் நோக்கி பயணம் தொடர்ந்தது. எமது நிலையத்துடன் தொடர்பை ஏற்படுத்த முயன்று கொண்டிருந்தோம் முடியவில்லை.

விமானநிலையம் வந்தது. தாய்மொழி பேசும் - தாய் இன மக்களின் நிலம் என்ற பொருள்படும் 'THAILAND' இணைந்த தாயக - புலம் பெயர்ந்த தமிழீழ ஊடகவியலாளர்கள் அங்கு அவரவர் இடத்துக்கு செல்வதற்காக பிரிந்தோம்.

விமான நிலையத்துள் நுழைந்து சோதனைகளை முடித்த வேளை எமக்கு எமது நிலையத்தவரின் தொலைபேசி அழைப்பு கிடைத்தது. எமது தொடர்பு துண்டிக்கப்பட்டதன் காரணம் - எமது நிலையத்துக்கு சிறிலங்கா Telecom இனால் வழங்கப்பட்ட வலு மிகமிக குறைந்த Motovola தொலை பேசி மழை காரணமாக செயலிழந்தமையாகும். எமது நிலையத்தினர் வேறு ஒரு தொலைபேசி வழியாகவே தொடர்பு கொண்டனர்.

விமானங்களின் கடும் இரைச்சலின் மத்தியில் செய்தியை நாம் வழங்கிக் கொண்டிருக்க விமானத்துக்கு செல்லுமாறு பணிப்பு வர அதனை இடைநிறுத்தி விட்டு விமானம் ஏறினோம். விமானம் புறப்பட

ஊடகவியலாளர் தமது பிரதான இலக்கான G.L பீரிஸிடம் மினக் கெட்டு விட்டு - விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் கருத்துப் பகிர்வுகளை முடித்து விட்டு புறப்பட்ட நேரம் - தமக்கு தனியாக பேட்டி தருமாறு வந்து நின்றார். பிரதிநிதிகள் றோஸ்கார்டன் விடுதியை விட்டுபுறப்படும் நேரம் இந்த நெருக்கடியை அந்த ஊடகவியலாளர் ஏற்படுத்தினார். இருந்தும் தமது நேர தாமதத்தையும் பொருட்படுத்தாது விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் 'ஒரு இலங்கை' இனவாத ஊடகத்தின் ஊடகவியலாளருக்கு நேர்காணலளித்தனர்.

சிறிலங்காவின் அதிகாரபூர்வ அரச தொலைக்காட்சிகளான ரூபவாகினி, ITN, பிரதமர் ரணிலின் சகோதரரான சான் விக்கிரமசிங்கவின் TNL, ஏன் 'சிஹல உறுமய' வுக்கு நிதியூட்டம் செய்வதாக கூறப்படும் E.A.P எதிர்சிங்கவின் ஸ்வர்ணவாகினி



கூட பயன்படுத்தாத வாசகம் 'ஒரு இலங்கை' இது இன்றைய சமரச பேச்சுக்களின் வேளையில் குறித்த தனியார் தொலைக்

பச்சை பௌத்தசிங்கள பேரினவாதமா?

பௌத்த பேரினவாதிகள் - இலங்கை 'சிங்கள பௌத்தம் ஒருநாடு' என இனவாதம் பேசுவதற்கும் - அந்த ஊடகத்தின் 'ஒரு இலங்கை' பிரச்சாரத்துக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது. இந்தக் கருத்துக்கள் அந்த ஊடகத்தை பார்க்கும் தமிழ் மக்களுடைய கருத்தாகவும் இருக்கிறது - என தாய்லாந்தில் தமிழ் ஊடகவியலாளர்கள் சாதாரண அளவலாவலின் போது கூறினர். இதனைக் குறித்த ஊடகத்துக்கு தெரியப் படுத்தலாமே எனக் கேட்டால் - தம்மீது பொறாமையில் கூறுகிறார்கள் என இக்கருத்து தட்டிக் கழிக்கப்படும் எனவும் தெரிவித்தார்கள்.

2ம் கட்டப் பேச்சுக்கள் முடிந்த நிலையில் றோஸ் கார்டன் விடுதியினர் இருதரப்புப் பிரதிநிதிகளையும், நோர்வே பிரதிநிதிகளையும் தேடித்திரிந்தனர்.

எதற்கு எனில் 3தரப்பு பிரதிநிதிகளிற்கும் அன்பளிப்பாக 'ஒக்கிட்ஸ்' மலர்களடங்கிய பெட்டிகளை கையளிப்பதற்கு. றோஸ் கார்டன் விடுதி நிறுவுனரான குண்டு மனிதரான 'ஜேர்மனியர்' ஒருவாறு பிரதிநிதிகளை கண்டுபிடித்து 3 அடி நீள, ஒன்றரை அடிஅகல உயரம் கொண்ட ஒக்கிட் பெட்டிகளை அவர்களது வாகனங்களில்

எமது வானொலிக்கு ஒரு பகுதி செய்தித் தொகுப்பை வழங்கிய வேளை தொலை பேசித் தொடர்பு அறுந்தது.



தொடர்பை ஏற்படுத்த முயன்று கொண்டிருந்தோம்.

இந்த வேளையில் வாகனத்தை இடைநிறுத்தி TTN டென்மார்க் சிவா சிறிய தகர கொள்கலன் (Coca cola)களை வாங்கி வந்தார் அதில் தேங்காயின் படம் அச்சிடப் பட்டடிருந்தது. உடைத்தோம், குடித்தோம் அது தாய்லாந்து இளநீர். வழுக்கையும் அதனுள் சேர்ந்திருந்தது.

தாய்லாந்தில் தென்னைகள் அதிகம். அதனால் ஏற்றுமதிக்காக இளநீரையும், வழுக்கையுடன் சேர்த்து பொதி செய்திருந்தனர். எப்படி வணிகம் போகின்றது பார்த்தீர்களா. எதனையும் வீணாக்காது பயன்படுத்துகின்ற நுட்பத்தை நாமும் கருத்தில் எடுக்க வேண்டும். இதனை சாதாரண பொருளுக்கும் பெறுமதி சேர்த்து அதனை விற்பனை வலுவுடையதாக்குவதாகும்.

செல்லிடப் பேசிகள் உட்பட்ட இலத்திரனியல் உபகரணங்களை நிறுத்த வேண்டும். ஏனெனில் அவை விமான ரேடர் வழி காட்டிகளைக் குழப்பி விடும்.

விமானம் புறப்பட்டது. சுமார் 2 மணி நேர பயணத்தின் பின் கட்டு நாயக்க விமான நிலையத்தில் விமானம் தரையிறங்கியது.

THAI AIRLINE விமானத்தை விட்டு இறங்கினோம். தாய் விமான நிலையத்தை விட மிகமிக சிறியதான - மக்களை கவரத்தக்க வகையில் அமையாத கட்டுநாயக்க விமான நிலையத்தினூடாக வெளியேறினோம். தாய்லாந்தினை விட மிகமிக மோசமான ஒரு வறிய நாட்டின் வறிய ஒழுங்கற்ற - குப்பைகள், நிறைந்த ஒரு தலைநகராக கொழும்பைக் கண்டோம். மிகச்சிறிய நாடு விரைவில் இலகுவாக வளம் பெறத்தக்க நாடு அதன் தலைநகரம் சிங்கள் அரசியல் தலைமைகளின் மோசடியால் பிச்சைக்காரத் தோற்றத்துடன் அப்போது எமக்குத் தெரிந்தது. அதுதான் உண்மை.

(முற்றும்)

# தாய்மடி வாசம் 8

ஊர் நினைவுகளில் என்னோடு உறவாடிய அந்த மரங்களின் நினைவுகள் அப்படியே ஒழிந்து போகின்றன.



**வணக்கம** வாங்கோ.. என்னைத் தெரியுமா.....? பார்த்த முகம் சட்டென என் நினைவுப் பொதியை அவிழ்த்து அந்த முகம் யாரென்பதை நினைவுபடுத்தும் முன் தன்னை அடையாளம் சொல்லி அறிமுகம் செய்தார் அந்த அன்புக்கும் மதிப்புக்குமினியவர். கனவா....? எண்ணி முடிக்கு முன்னம் அது கனவெல்ல, அவர்கள் முன் நான் நிற்பது நிஜமே.......,நிஜமே.... என்பதை என் அடிமனசு சொல்லியது.

*புலம் பேசினோம், புதினம் பேசினோம்.*
*பத்தாண்டுத் துயர் பேசினோம்*
*இன்னும் பத்து நாளில் நான் போயடையவிருந்த அடிமை வாழ்வின்*
*அடையாளம் பேசினோம்.......*

*எப்படிப் போனது அந்த 45 நிமிடம்.....?*
*ஏதோ சில வினாடி போல் ஓடிப்போன அந்த நிமிடங்கள்*
*பயன்தரு நிமிடங்கள் - நாம் பேசிய பொழுதினிது.....*

விடைபெறும் அந்த நிமிடம் எம்முன் ஓடிவந்து நிற்க நாம் விடைபெறுகிறோம். மீண்டும் எனைச் சுமந்து நந்தாவின் சயிக்கிள் மதுரா வீட்டுத் தென்னைகளுக்கும், செவ்வரத்தம் பூ மரத்துக்கும் நடுவே முற்றத்தில் இறக்கிவிடுகிறது.

"சரியக்கா... பின்னேரம் 4 மணிக்கு முள்ளியவளைக்குப் போவம். வெளிக்கிட்டு நில்லுங்கோ. நான் பிறகு வாறன். இந்தாங்கோ புத்தகங்கள் பொழுது போகாட்டி இதுகளைப் படியுங்கோ..." சொல்லிவிட்டு போகிறாள் நந்தா.

மாலை 4 மணி. முள்ளியவளை நோக்கிய எமது பயணம் ஆரம்பமாகிறது. வீதிகளில் கிளிநொச்சிவரை இருந்த பள்ளமும் திட்டியும் கொஞ்சம் குறைவாகவே இருந்தது. ஆனால் இடையிடை ஆளைக்குலுக்கி எடுத்தது வீதிகள். சின்ன நீரோடைகள் அழகாய் வரைந்துவிட்ட ஓவியங்களாய், பரந்த வயல்கள் பச்சைப் பசேலென்று மெல்ல வீசிய தென்றல் காற்றில் மிதந்து தலையாட்டித் தன் அழகால் உயிரின் ஆழம் சென்று உள்ளம் குளிர்விக்க, ஊற்றங்கரைப்பிள்ளையார் கோவிலடியான் வீதியால் எங்களைச் சுமந்து சென்ற மோட்டார் சைக்கிள் வேகம் குறைகிறது. இது தான் அக்கா 'ஊற்றங்கரைப்பிள்ளையார்' என்று காட்டினாள் நந்தா. ஒருவரையும் பிள்ளையார் அடியில காணேல்ல? என்ன ஒருத்தரயும் காணேல்ல என்றேன் நந்தாவைப் பார்த்து.. ஏன் அந்த மனுசனை கரைச்சல் பண்ணுவானெண்டு ஒருதரும் வரேல்லப் போல என்றவள் பிள்ளையாருக்கு ஏதோ மந்திரம் சொன்னாள் நந்தா. அவள் சொன்ன விதம் யார் அந்த இடத்தில் நின்றாலும் வயிறு வலிக்கச் சிரிக்கத்தான் வரும். என்னையும் அந்த அளவுக்கு சிரிக்க வைத்தாள் நந்தா.

உள்ளார அவளுக்கு நன்றி சொன்னேன். இப்படி மனம் விட்டுச்சிரிக்கவே மனிதர் இல்லாத வனாந்திரம் போன்ற ஐரோப்பிய வாழ்க்கையில் அவசரம் நிறைந்த அலுவல்களுடன் ஒவ்வொரு மனிதரும் ஓடித்திரியும் காலத்துள் நானும் சிக்குப்பட்டுச் சிரிக்கவே நேரமின்றி திரிந்தது பற்றி அவளுடன் கதைத்தேன். நல்லாச் சிரியுங்கோ கனக்கச் சிரிக்கிறவை நீண்ட ஆயுளுடன் இருப்பினமாம் என்று மேலும் பகிடிகளைச் சொல்லிக்கொண்டு வந்தாள் நந்தா.

"நீங்களும் சிரியுங்கோ நந்தா அப்ப உங்களுக்கும் ஆயுள் நீளும்" என்றேன்.

"எனக்கு ஆயுள் போதுமக்கா... கெதியில சாதிக்க வேணும்....இந்த மண்ணுக்கான என்ரை பணியைச் செய்யவேணும்."

இன்னும் அவளுக்கு இருந்த தாயகம் மீதான பாசம் , பற்றுதல்கள், தலைவர் மீதுள்ள நம்பிக்கை, நேசம் என அவளது எண்ணங்களிலிருந்து பல நினைவுகளும், நிகழ்வுகளும் அவள் சொல்லச்சொல்ல என் செவி வழி புகுந்து இதய வேரில் போய்ப் பதிந்தன.

அடுத்த முறை நான் வரேக்கயும் நந்தா இருக்க வேணும் என்கிறேன். அவள் சிரிக்கிறாள். நீங்கள் வரேக்க நான் துயிலுமில்லத்தில் தான் இருப்பன் அக்கா... அங்க வந்து பாருங்கோ... பத்து வருடத்திற்கு முதல் கட்டுவன் பகுதிக் காவல் அரணில் நிகழ்ந்த நிகழ்வொன்று என் நினைவுகளை ஆக்கிரமிக்கிறது...

அது 1990 இல் கார்த்திகை மாதம் ஊர்கள் எல்லாம் மழையில் நனைந்திருந்தன. எங்கள் ஊர்களின் பூவரசுகளும், கிழுவைகளும் ஏந்திய மழைநீர்த்துளிகளில் நனைந்தபடி தீபாவளியை வரவேற்க காத்திருந்த தீபாவளி தினமன்று...

கிழமைக்கணக்கான காத்திருப்பின் பின் விடிந்த அந்தப் பொழுது ஊர்ப்பிள்ளையார் கோவிலில் மருத்து நீர் வாங்கி முழுகி ஆயத்தமாகி பிள்ளையாருக்கு மாவிளக்கு போடும் நாளது... இரவிரவாய் மழையோடு மழையாய் செல்லடியும், துப்பாக்கி வேட்டொலியும் அந்த வருடத்து தீபாவளியை மறக்கவே முடியாத துயர்தந்த நாளது. எங்கள் ஊரோடு உறவாய் இருந்த எங்கள் ஊரின் பாசத்துக்குரிய போராளி கப்டன் றோயண்ணாவை நாங்கள் இழந்து போகக்காரணமான நாளது.

" றோய்க்குக் காயமாம்" ஒரு வாயிலிருந்து வந்த சொல்லது... ஊர் எல்லாம் அந்தச்செய்தி பரவி றோயண்ணாவைத் தெரிந்த, பழகிய அனைவரது செவிகளிலும் இடியாய் இறங்கியது.

ஆம் கட்டுவன் பகுதியில் எதிரியை எதிர்த்து நின்ற போராளி ஓய்ந்து போகவென எழுந்து வந்த குண்டு எங்கள் றோயண்ணாவை மௌனமாக்கி நாற்பது நாளுக்கு மேலாக படுக்கையில் வீழ்த்தி பின்னொரு பொழுது புலிகளின குரல் வானொலி றோயண்ணாவின் வீரமரணத்தைக் காதோரம் வந்து சொல்லி எம்மை எல்லாம் அழவைத்த அந்த நாள்...

*"எந்த நிலை வந்து சேருமோ எனக்கு எப்ப வந்து சாவு கூடுமோ? எந்த நிலை வந்து சேருமோ அதை எந்த விழி காணக்கூடுமோ? வானுயர்ந்த காட்டிடையே நானிருந்து பாடுகிறேன். வயல் வெளிகள் மீது கேட்குமா அது வல்லை வெளி தாண்டிப் போகுமா..?"*

அடிக்கடி றோயண்ணா பாடும் அந்தப்பாடலை இப்போது கேட்க நேரும்போது தேனிசையின் குரல் என்பதை மறந்து றோயண்ணாவை நினைவுபடுத்தும். அப்படியே வந்த மழைநாள் ஒன்றில் ஊரங்குணையில் மாமாவின் வீடு பார்க்க பெரியத்தையுடன் போன போது அந்தக்காவலரண் ஒன்றில் சந்தித்த அந்தப் பெண் போராளிகள் தங்கச்சி என்று முறை சொல்லி அழைத்து என்னுறவான அந்த அக்காக்கள்.... ஒரு மழைநாளில் கட்டுவன் காவலரணில் காவியமானதும்.... அந்தப் பெண்புலிகளைப் பாடையில ஏற்றிப்போன அந்தக் காலையில் தன்னையும் அர்ப்பணித்து வரலாறான அந்த மல்லாகத்து அக்கா... இப்படி நினைவெல்லாம் அவர்களாய் நிறைந்து என் கண்களை நனைவிற்கின்றன. இப்படி எத்தனையோ முகங்களின் நினைவுகள் நிரைநிரையாய்.... நிறைந்தது. விழியெல்லாம் நீராக.... நந்தாகாணும் முன்னம் அதை மறைத்துக்கொள்ள தொலைவாய் தெரிந்த அந்தக்காடுகளைப் பார்க்கிறேன்.



*என்னினிய நந்தா!*
*இன்னும் ஆண்டுகள்*
*இங்கு நீ வாழ்ந்திட*
*இறைவனை வேண்டுகிறேன்.*
*உன் போல் இங்கு*
*உயிரை எங்களது*
*விடியலுக்காய்*
*தந்துவிடக் காத்திருக்கும்*
*அத்தனை பேருக்குமான*
*ஆயுள் நீள ஆண்டவனை*
*வேண்டுகிறேன்.*

பட்டிகளாய் மாடுகள் எங்களையும் சில இடத்தில் மறித்து விட்டு உம்பா.. உம்மா... என அழைத்தபடி போயின. அது முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லம் அழகாய் வடிவமைந்திருந்த அந்தத்துயிலுமில்ல வாசல் எங்களை வரவேற்கிறது. அங்கு அமைதியாய் உறங்கிக்கொண்டிருந்த மாவீரர்கள். அந்தப் புனிதர்கள் உறங்கும் அந்த மண்ணில் அடுத்தபக்கத்தில் சிறிதான ஒரு கூடம். அந்தக் கூடத்தில்.... சாந்தனின் உயிரைப்பிளியும் குரலில்

"இங்கு வந்து பிறந்த பின்பே இருந்த இடம் தெரியும். நாளை சென்று விடும் தேதி சொல்ல இங்கெவரால் முடியும். வாழ்க்கை எனும் பயணம் இதை மாற்றிடவா முடியும்...."

எனும் புதுவையின் பாடல்ஒலித்துக்கொண்டிருந்தது. அந்த இடத்திலேயே நின்றிருந்த என்னை "வாங்கோக்கா சுத்திப்பார்ப்பம்" என்றாள் நந்தா.

*எங்களின் வாழ்தலுக்காய்*
*உயிர்ப்பூவை*
*எதிரியின் குகை புகுந்து*
*எறிந்த வித்துக்கள்.*

*தங்களது வாழ்தலின்*
*இனிமையெல்லாம் துறந்த*
*இனியவர்கள்*

*தாயகம்..... தாயகம்....*
*அவர்கள் தாகமாய்*
*ஊற்றெடுக்க....*
*தலைவனின் வழியெழுந்த*
*அபிமன்யூக்கள்*

*அம்மாவின் நினைப்பும்*
*அப்பாவின் நினைப்பும்*
*அண்ணா, அக்கா,தம்பி, தங்கை*
*அன்புக்கினியவள், இனியவன்*
*நினைவுகள் மறந்து*
*தாயகம் என்பதே*
*அவர்கள் தார்மீகமாகிட*
*தணலான சந்தணங்கள்*
*மூச்சிருந்த மட்டும்*
*அவர்கள் போராடியே*
*நின்றார்கள்.*
*அது முடிந்த பின்னாலும்*
*அண்ட கோள்களில்*
*உலாவரும் அதிசயங்கள்*
*இவர்கள் எங்கள்*
*மாவீரர்கள்...*

*ஓ... இனியவரே...!*
*உங்களை வணங்குவதற்காய்*
*ஓடி வந்துள்ளேன்.*
*எழுவீரா.... தோழர்களே... ,*
*தோழியரே..... எழுவீரா...?*

வீரவேங்கைகளாய், லெப்டினன்களாய், கப்டன்களாய், மேஜர்களாய், லெப்.கேணல்களாய் விரிந்திருந்த அந்த இடமெங்கும் துயில் கொள்ளும் புனிதர்களைப் பார்த்துக்கொண்டு நடக்கிறேன். ஏதோ அதிர்வுகள் உடலும் மனமும் வலிக்கிறது. அந்தப்பூமியில் அடியெடுத்து வைக்க கால்கள் பின்நிற்கின்றன. அந்த மண்ணில் உறங்கும் ஒவ்வொரு ஜீவனையும் எனது கால்கள் மிதிக்கின்றனவோ எனும் அச்சத்தில் கால்கள் ஓய்கின்றன. நெஞ்சினுள் ஏதோ நினைவெல்லாம்.... வந்து முட்டி....

அந்த வழியில் நின்றிருந்த ஒரு பூ மரத்தின் பூவைப்பிடுங்க உயர்ந்த கை அமைதியாகிறது. இதை எந்த ஜீவனின் நினைவு சுமக்கிறதோ தெரியாது..! வேண்டாம் அந்த உயிரின் வாசம் சுமந்து நிற்கும் இந்தப்பூவை நான் பிடுங்க வேண்டாம்.

அங்கே பல விதைகுழிகள் வெட்டப்பட்டிருந்தன. இவை யாருக்காக.. ஓ... இந்தத்தேசம் விடியும் வரை இந்த விதை குழிகள் நிரம்பாயினவோ...!

*காலமே!*
*ஏனின்னும் கண்*
*மூடிக்கிடக்கிறாய்...?*
*இந்தக் கல்லறைகள்*
*சுமந்து நிற்கும்*
*உயிர் வாசம் எடுத்துப் போய்*
*உலகெல்லாம் சொல்லாயோ....?*

*எத்தனை வலி சுமந்து*
*இந்த இடம் இவர் புகுந்தார்.*
*இன்னும் இவர்கள் மீது*
*உலகு திரும்பவில்லை.*
*இன்னும் இம் மண்ணில்*
*பயங்கரவாதமே*
*நடக்கிறதென்கிறது...*

*வருவான் என் பிள்ளை என*
*எத்தனை வாசல்களில்*
*அம்மாக்கள் காத்திருக்க*
*அவன் அனாமதேயமாய்*
*உறங்குவதும்...*

*எப்போதாவது என் பிள்ளை*
*அம்மா என்று என்னை*
*கழுத்தில் கை பதிப்பாள் என்று*
*கலங்கும் அம்மாக்களும்*
*கண்ணீர் துடைத்துவிட*
*காலமே நீ கண் திறந்து*
*பாராயோ...?*

*இப்படி... இப்படி...*
*எத்தனையோ காத்திருப்புகள்*
*இவர்களின் ஒரு வார்த்தையை*
*மீளக்கேட்பதற்காய் என்று*
*இவர்களின் ஒரு பார்வையின்*
*ஸ்பரிசத்துக்காய் என்று*
*இவர்களின் ஒரு உறவுக்கா*
*யென்று*
*எத்தனை... எத்தனை....*
*தெரியுமா... உனக்கு?*
*தெரிந்துகொள்!*
*இப்படி... இப்படி...*
*எத்தனையோ காத்திருப்புகள்*

*காலமே!*
*ஏன் இன்னும் கண்*
*மூடிக்கிடக்கிறாய்...?*
*இந்தக்கல்லறைகள்*
*சுமந்து நிற்கும்*
*உயிர் வாசம் எடுத்துப்போய்*
*உலகெல்லாம் சொல்லாயோ...?*

துயிலுமில்லம் விட்டு வெளியே வருகிறோம். இரண்டு பெரிய பஸ்களிலிருந்து அந்தத் துயிலுமில்ல வாசலில் இறங்குகிறார்கள் ஆண் போராளிகளும், பெண் போராளிகளும்...

தொடரும்....

காலத்தின் துணையில்லாமல் நீ செய்யும் எதையும், காக்க உதவுவதில்லைக் காலம். - அனற்டோல் ஃபிரான்ஸ்




# நஞ்சு விதைக்கப்பட்ட நிலம்

விழிசிட்டி க. சிவராஜா



**யாழ்ப்பாணத்திலிருந்து** புறப்பட்ட பேருந்து தெல்லிப்பளை நோக்கி விரைந்து கொண்டிருந்தது. தெல்லிப்பளைக்கு அப்பால் போவதற்கு அதற்கு அனுமதியில்லை. சிங்கள இராணுவம் தனக்குரிய இடமென அங்கே குந்திக் கொண்டிருக்கிறது.

மூர்த்தி மனைவியைத் திரும்பிப் பார்த்தான் - குழந்தைத் தனமான ஆவலுடன், ஜன்னலிற் கூடாக வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். ஏழு வருஷங்களுக்குப் பிறகு அந்த வீதியால் அவள் பயணப்படுகிறாள். மூர்த்திதான் பல தடவை வன்னியில் இருந்து வந்து, வீட்டைத் திருத்தியமைத்து, இருக்கக்கூடிய நிலைக்குக் கொண்டு வந்த பின்னரே வன்னியில் இருந்து மனைவி சுசீலாவைக் கூட்டி வருகிறான்.

பேருந்து வேகம் குறைத்து மிதமான வேகத்துடன் போய்க் கொண்டிருந்தது . மனைவியின் முதுகில் தட்டி மேற்குப் பக்கமாகப் பார்க்கச் சொன்னான். அவள் பார்த்தாள். கண்களில் ஆவல் தெரிந்தது.

“இறங்கிக் கும்பிட்டிட்டுப் போவமே”

யாரோ மணியை அடிக்க பேருந்து நின்றது. இருவரும் இறங்கினார்கள். சுசீலாவிற்கு மேல் மாடியில் நிற்கும் ஆஞ்சநேயரைப் பார்க்க பரவசமாக இருந்தது. அவசரம் அவசரமாக கால் கையைக்கழுவிக் கொண்டு படியேறிமேலே போனாள். அவன் அவளுக்காக கீழே காத்து நின்றான்.

ஒரு பத்து நிமிடம் ஓடியிருக்கும். வீபூதி, வெள்ளைச் சந்தனம், பூக்களோடு சுசீலா வந்தாள்.

“குனியுங்கோ,” சொல்லிக் கொண்டே அவனது நெற்றியில் பொட்டு வைத்தாள்.

“நாமம் போட்டிட்டாய்போல..”

“என்னப்பா”

“ஒண்டுமில்லை வா”

இருவரும் நடந்தார்கள்.‘மேல் மாடியில், ஆஞ்சநேயர் கோயில் வடிவா இருக்கல்லோ”

“வசதியான கடவுள் போல இருக்கு”

“உங்களுக்கு தெய்வங்களோடும் பகிடி”

அவள் அவனது கையைப் பிடித்துக் கொண்டு, வீதியைக் கவனமாகக் கடந்து சந்தைக்கு முன்னாலிருக்கும், வயிரவர் கோயிலிற்குப் போனாள். அவன் வாசலில் நிற்க, அவள் பக்தி சிரத்தையுடன் உள்ளே போனாள்.

வாசலில் இருந்த பிச்சைக்காரன் தனது வருமானத்திற்காக, இரந்து கையை நீட்டினான்.

பைக்குள் கையை விட்டு, அகப்பட்ட சில்லறையை எடுத்துப் போடப் போனவன் திடுக்குற்றுப் போனான்.

“இவன்...இவன்.... எங்கோ பார்த்த... இல்லையில்லை மிகவும் பரீட்சமான...

அதற்குள் சுசீலா வரவே, காசைக் கொடுத்து விட்டு விலகினான்.

“இந்தாங்கோ பூசுங்கோ”

“நெத்தியில இடமில்லையப்பா”

“விடுங்கோ நான் பூசிவிடுறன்”

அவனது நெற்றியில் திரும்பத் திரும்ப தன்விரலை ஓடவிட்டாள்.

“என்னப்பா அங்க பாக்கிறியள்”

“இதில ஓரமா நில் வாறன்”

அவன் கோவிலுக்கு முன்னாலிருந்த தேனீர்க்கடைக்குள் நுழைந்தான் மேசையில் இருந்தவனோடு கதைத்தான். அவன் நினைத்தது சரிதான் சில்லறைக்காக கையை நீட்டியவன் இளங்கோ தான். பதினைந்து வருடங்களுக்கு முன்னர். அவனோடு மேடையில் நாடகங்கள் நடித்தவன். அற்புதமான நடிகனென்று பேரெடுத்தவன். வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவன்... அக்கா, அண்ணன், அத்தான் என நல்ல சூழலில் வாழ்ந்தவன்.

அவன் ஏன் இப்படியானான்?

“என்னப்பா தேத்தண்ணிக் கடைக்கார ஆளோட கதைச்சனீங்கள்?”

“போட்ட வடையெல்லாம் விலைப் பட்டதோ எண்டு விசாரிச்சனான்.”

நீங்கள் ஒரு விவஸ்தை இல்லாத ஆளப்பா”

“சரி.. சரி.. எட்டிவா.. பஸ்வருகுது.

இரண்டு, மூன்று நாள், இளங்கோவைப் பற்றி விசாரிக்க தன் பழைய நண்பர்களைச் சந்தித்தான் மூர்த்தி. எல்லோருமே இளங்கோவைக் குறை சொன்னார்கள். நல்லா உழைத்துக் கொண்டிருந்தானாம்.. பல இடங்களில் திருமணம் பேசி வந்ததாம்... மனைவி வாறதற்கிடையில் சிங்கள இராணுவம் குடா நாட்டுக்கு வந்து விட்டது. அவர்களோடு இணைந்து, என்னென்ன பழக்கங்கள் வரப்படாதோ... அவையெல்லாம் வந்து விட்டன.

மூலைக்கு மூலை சாராயக் கடை. அவை போதாதற்கு. கள்ளச் சாராயம் குடிசைத் தொழிலாக எங்கும் முளைவிடத் தொடங்கி விட்டது. இளங்கோ மாதிரி இன்னம் எத்தனை எத்தனையோ பேர்... குடிக்காமல் வாழ முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். போதை காணாதென கசிப்புக் குடித்து விட்டு வீதிகளில் தவழத் தொடங்கி விட்டார்கள்.

ஆனாலும் இளங்கோவின் குடும்பத்தார் ஏன் கவனிக்காமல் விட்டார்கள்? மற்றவர்களிடம் கை நீட்டுவது அவர்களுக்கும் தலை குனிவு தானே இந்த எண்ணம் அவனை உந்த, மூர்த்தி நண்பன் தருமுவைத் தேடிப்போனான்.

மூர்த்தியைக் கண்டதும் தருமு பெரும் பரபரப்புக் காட்டினான். ஓடிவந்து தளுவிக் கொண்டான். பிள்ளைகளைக் கூப்பிட்டு அறிமுகம் செய்து வைத்தான்.

“மச்சான் மூர்த்தி, சாப்பிட்டு விட்டுத்தான் போகவேணும்”

மூர்த்தி மறுக்க வில்லை. அரசியலில் தொடங்கிய அவர்களது பேச்சு, குடும்பம், வேலை யெனப் பரந்துபோன போது, மூர்த்தி இளங்கோ பற்றியபேச்சை ஆரம்பித்தான்.

“அவன்ர கதையை விடு மச்சான்” தருமு வெறுப்புக் காட்டினான்.

“ஏன் தருமு அவனுடைய வீட்டுக்காரர் கவனிக்கவில்லை”

“கவனிக்கவில்லையோ... அவை நல்லாக் கவனிச்சவை... இவன், அவையோடை இருந்தால் எல்லோ...

அவை கையை விட்டிட்டினம்.

“சரி..ஏன் உழைக்கமாட்டாமல்... எல்லாரிட்டையும் கையைநீட்டுறான்”

“உடம்பில தைரியம் இருந்தா எல்லோ.. கசிப்பு அடிச்சு அடிச்சு உடம்பே கசிப்பாக் கசிஞ்சுபோச்சு” சலித்துக் கொண்டான் தருமு.

“அவனை ஆராவது கூட்டிப் போய் அனுசரிச்சால் திருந்தி விடுவான்” “சரி மச்சான் நீ கூட்டிப் போய் அனுசரியன்” ஏளனமாகச் சொன்ன தருமு தொடர்ந்தான்..

“விடு மச்சான் அவன்ர கதையை.. எழும்பு மச்சான் சாப்பிடுவம்”

மூர்த்திக்கு இளங்கோவை நினைக்க நினைக்க பரிதாபமாக இருந்தது எப்படியான இளைஞன் அவன்! மேடையில் ஏறினால் எல்லோருடைய கவனத்தையும், ஈர்த்து வைத்துக் கொண்டு, மற்றப் பாத்திரங்களை ஸ்தம்பிக்கச் செய்து விடுவானே! நன்றாகப் படித்தவன். எங்காவது ஒரு கடையில் கணக்கெழுதப் போனாலும், நல்ல மாதிரி சம்பாதிக்க கூடியவன்... அவனைக் கூட்டி வந்து, சாப்பாட்டைக் கொடுத்து வைத்திருந்தாலென்ன “தனது பிள்ளை ஒருத்தன் இந்த நிலைக்கும் போயிருந்தால்?” நினைக்க நெஞ்சு வலித்தது.

இளங்கோ பற்றிய தனது எண்ணத்தை மனைவியிடம் சென்னபோது... அவளும் பரிதாபப்பட்டாள். மூர்த்தியின் யோசனைக்கு சம்மதம் தெரிவித்தாள்... அன்று மாலையே வயிரவர் கோயிலடிக்குப் போனான்.

வாசலில் இளங்கோவைக் காணவில்லை. உள்ளே போனான் மணிக் கோபுரத்தின் உள்ளே, ஒரு சாக்குத் துண்டில் படுத்திருந்தான். வயிறு ஒட்டி, கண்கள் ஆழத்தில் தாண்டு கிடந்து சுழன்று கொண்டிருந்தன. ஏதோ புலம்பிக் கொண்டிருந்தான். கிட்ட நெருங்கிப் போனான் மூர்த்தி.

“டேய் இளங்கோ”

கண்களை இடுக்கிக் கொண்டு பார்த்தான்.

“என்னைத் தெரியுதே?”

ஓமென்பது போல தலையாட்டியபடி எழுந்து இருந்தான். வயிற்றைக் குமட்டும் நெடி வந்தது. மூர்த்தி மூக்கைப் பிடித்துக் கொண்டான்.

“ஆரெண்டு சொல்லு பாப்பம்”

ஒரு வரண்ட சிரிப்புக்கிடையில் “மூர்த்தியண்ணை” என்றான்.

“நீ என்னோட வந்து இரன்”

அவன் விரக்தியாகச் சிரித்தான்.

“ஏன் வந்தால் என்ன? பெரிய வீடு நானும் மனிசியும் தான் தனிய, பிள்ளைகள் வெளியில வேலையாக இருக்கினம்... என்னுடைய மனிசியை ஞாபகம் இருக்கோ”

“ஓம்’ என்றமாதிரி தலையசைத்து, “சுசீலா அக்கா” என்றான். “ஞாபகம் வைச்சிருக்கிறாய்... அப்ப வாவன் என்னோட வந்திரன்... எனக்கும் இப்ப பென்சன்.. பொழுது போகுதில்லை.. எழும்பு போவம்...” “நான் வந்தால் உங்களுக்குத் தொந்தரவாக இருக்கும் மறுத்தான் அவன்.

மூர்த்தி தொடர்ந்து வற்புறுத்தி அழைக்க அரை மனத்துடன் எழுந்தான். கைபிடி அறுந்து தொங்கிய நைந்து போன ஒரு பையைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டான். அது தான் அவனது உடமை போலிருக்கும்.

வீட்டிற்குக் கூட்டிப் போய் மனைவிக்கு அறிமுகப்படுத்தினான். அவள் ஆச்சரியமாகப் பார்த்தபடி இளங்கோவை வரவேற்றாள். ஒரு சிறு அறையை இளங்கோவிற்காக ஒதுக்கிக் கொடுத்தான். தனது பெட்டிக்குள் இருந்து சாரம் ஒன்றை எடுத்துக் கொடுத்தான். குளியலறையைக் காட்டி, குளித்து விட்டு வரும்படி சொன்னான்.



இளங்கோவிற்கு குளிப்பு மறந்து போய்விட்டது போல இருக்கிறது. மெல்லிய சிரிப்புடன் குளியலறை நோக்கிப் போனான்.

இப்படியே மூன்று, நான்கு நாட்கள் கழிந்தன.

குளியல், சாப்பாடு, படுக்கையென இளங்கோ அறைக்குள் அடங்கியிருந்தான். அவனிற்கு ஒதுக்கிய அறையில், மூர்த்தி பத்திரிகைகள், புத்தகங்களை வைத்து விட்டு...

“இளங்கோ! முந்தியெல்லாம் நல்லாவிழுந்து விழுந்து படிப்பாய் அதைத் திரும்பவும் பழக்கத்திற்குக் கொண்டுவா...” என்றான்.

இளங்கோ தனக்கு முன்னால் கிடந்த புத்தகங்களை சுவாரஸ்சியமில்லாமல் புரட்டத் தொடங்கினான்.

இளங்கோ மூர்த்தி வீட்டுக்கு வந்து ஒரு வாரம் கடந்திருக்கும். இப்போதெல்லாம் அவன் இருப்புக் கொள்ளாமல் அங்கும் இங்கும் அலைந்தபடி இருந்தான். சாப்பாட்டில் அவன் அதிக விருப்புக் காட்டவில்லை. சாப்பிட்டதை விட வெளியில் கொட்டியது கூடவாக இருந்தது.

அவனது போக்கினை அவதானித்த சுசீலா மூர்த்தியிடம் அதுபற்றிச் சொன்னாள்.

“கொஞ்ச நாளுக்கு அப்பிடித்தான் இருப்பான். சாப்பிடுவதும், தூங்கிறதும்தானே வேலை கைகால் ஆட்டி வேலை செய்தால் சரியா வந்திடுவான்”

“அதுக்கு நீங்கள் என்ன வேலை குடுக்கப்போறியள்”

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது, இளங்கோ வந்தான்.

“இளங்கோ எப்படி இருக்கிறாய்” மூர்த்தி கேட்டான் பதிலேதும் பேசாமல் இளங்கோ மெல்லியதாகச் சிரித்தான்.

“இளங்கோ! நீயும் என்னோட தோட்டத்துக்கு வாவன்... வாழைக்கு பசளை தாழ்ப்பம்.”

அதற்குப் பதிலேதும் பேசாமல் சிரித்தான்.

“என்ன சிரிக்கிறாய்... வேலை செய்யிறது உன்னுடைய உடம்புக்கு நல்லது. கூடியகெதியில பழைய இளங்கோவாக வர வேணும்... என்ன பேசாமல் நிற்கிறாய்... பேசன்”

“எனக்கு ஒரு ஐம்பது தாருங்கோ” இளங்கோ கேட்டான்

“ஏன் காசு”

“வேணும்”

“உனக்கு சாப்பாடு இருக்கு. உடுப்புகள் இருக்கு, வெளியில போறதில்லை. உனக்கு என்ன தேவைக்குக் காசு?”

இளங்கோ பதிலேதும் பேசாமல் தன்னுடைய அறைக்குப் போனான்.

“கேட்டால் குடுங்கோவன்” வாயால் பேசாமல் சாடையால் சொன்னாள் சுசீலா.

“வேண்டாம்” என்பது போல மூர்த்தி தலையை ஆட்டினான்.

வெளியே சென்று அப்போது தான் மூர்த்தி வீட்டுக்கு வந்திருந்தான்.

“சுசீலா! மணியம் காசு ஏதாவது தந்தவரோ”

“ஓமோம் தந்தவர்... மேசையில வைச்சிருக்கிறன்”

“எங்க இளங்கோ... சாப்பிட்வனோ”

“இல்லை சாப்பிடேல்ல... அறைக்குள்ள இருக்கிறான் போல இருக்கு”

“இளங்கோ! வாவன் சாப்பிடுவம்” மூர்த்தி கூப்பிட்டான்.

அறைக்குள் இருந்து எதுவித பதிலும் வரவில்லை. அதைப் பற்றிப் பெரிதுபடுத்தாமல் மேசையை நோக்கிப் போனான் மூர்த்தி.

“எங்கே சுசீலா காசு”

“உங்களுக்கு எதையும் பொறுமையோடு, தேடி எடுக்க ஏலாது”

சொல்லிக் கொண்டு வந்த சுசீலா, மேசையில் அங்கும் இங்கும் தேடினாள்.

“மணியம் தந்தவுடனை இதில தானே வைச்சனான்” தனக்குள் சொல்லிக் கொண்டு, மேசை அறைகளை இழுத்துப் பார்த்தாள். காசு கிடைக்கவில்லை. ஏதோ நினைவில் தட்ட மூர்த்தி இளங்கோவின் அறையை எட்டிப் பார்த்தான். அறை வெறுமையாக இருந்தது.“என்ன சுசீலா இளங்கோ அறைக்குள்ள இல்லை”

“இல்லையோ” ஆச்சரியத்துடன் அவளும் எட்டிப் பார்த்தாள். இளங்கோ இல்லை. இளங்கோ வீட்டுக்குவரும் போது கொண்டு வந்த அந்த வயது போன பையையும் காணவில்லை.

எக்குடி பிறப்பினும் யாவரே ஆயினும் அக்குடியில், கற்றோரை, மேல் வருக என்பர். - அதிவீர ராமபாண்டியர்

"எங்க போயிருப்பான்.. வெளியில போய் பார்த்துக் கொண்டு வாறியளோ"

''வேண்டாம் எனக்குச் சாப்பாட்டைப் போடு"

மனைவிக்கு மறுத்துப் பேசினாலும், மூர்த்தி இப்போ இரண்டு மூன்று நாட்களாக அந்த வயிரவர் கோவில் வாசலில் போய் இளங்கோவைத் தேடினான். இளங்கோவிற்குப் பதிலாக வேறு ஒருவன் கை நீட்டிக் கொண்டு நின்றான்.

''யாரைக் கேட்கலாம்... தருமுவைக் கேட்டால் சொல்வானோ.. வேண்டாம் உனக்கு வேற வேலையில்லையோ" என்று பேசுவான். சிந்தனையில் ஆழ்ந்தபடி போனவனின் கவனத்தை, துர்க்கை அம்மன் வாசலில் கை நீட்டிக் கொண்டு நின்றவனின் தோற்றம்.. தடுத்து நிறுத்தியது. கிட்டப் போகாமல் சைக்கிளைத் தூரவே நிறுத்திக் கொண்டு, கோவில் வாசலைப் பார்த்தான். சந்தேகம் இல்லை இளங்கோதான். அவன் கொடுத்த சாரத்தையே கட்டியிருந்தான்.

மூர்த்தி பெரு மூச்சு விட்டுக்கொண்டான். அவனைத் திருத்த முடியாது. சைக்கிளைத் திருப்பிக் கொண்டு வீட்டிற்குப் போனான்.

"என்னப்பா களைச்சுப் போய் வாறியள்" சுசீலா கேட்டாள்.

"இளங்கோவைப் பார்த்தனான்"

"எங்கயப்பா'' ஆவலோடு கேட்டாள்.

''அவன் இடத்தை மாத்தியிருக்கிறான்... ஆனால் தொழிலை மாத்தேல்ல... அம்மன் கோவில் வாசலில நிற்கிறான்..."

''நீங்கள் ஒண்டும் கேட்கவில்லையோ"

"அவனை நான் குழப்பேல்ல... சுசீலா! இளங்கோ மாத்திரமில்லை, இந்த ஐஞ்சாறு வருசங்களில யாழ்ப்பாணத்தில ஆயிரக் கணக்கான இளங்கோக்கள்.. உருவாகியிருக்கினம்.." சலிப்புடன் அவன் சொன்னான் சுசீலாவிற்கு அது விளங்கியதோ தெரியவில்லை...ஒரு மாதிரியாகப் பார்த்து விட்டு உள்ளே போனாள். ■■

## வேலியும், பட்டகிழுவையும்



**இரண்டு** காணிக்கு இடைப்பட்ட எல்லை வேலியது.

அந்த வேலியில் நன்றாகப் பெருத்து மொக்குப் பத்தி நின்றதொரு கிழுவை மரம் பட்டுப் போய்.

அதன் அடிபெருத்து பக்கத்து காணியிலும் சொற்பத்தை விழுங்கியபடி வேலிக்கு நடுவே நின்றது சாட்சியாய்.

அம்மரத்தை அகற்றினால் தனது வேலியை அகட்டி அகட்டிப் போடும் கனவு கெட்டுப் போய்விடுமே என்ற எண்ணத்தில் அதனை அகற்றாமலேயே புதிய பனையோலைகள் கொண்டு மிகவும் நிறைவாகவும், சீராகவும் வேலிச்சொந்தக்காரனால் அடைக்கப்பட்டது.

அதுவும் நீண்டகாலப் பாவனை நோக்கம் கருதி தலைகீழாக கவிட்டு (இதழ்களுக்குள் மழைநீர் தேங்கி நிற்காமல் வழிந்தோடக் கூடிய வாறு நிலம்பார்க்க) அடைக்கப் பட்டது.

அடைத்த சிறிது காலத்துக்குள்ளேயே வேலி முழுவதும் கறையான்கள் மொய்த்து மேயத் தொடங்கின. ஒவ்வொரு காலையிலும் எழும்பி கறையான்களை தட்டிக் கொட்டுவதே வேலையாகிப் போனது.

ஆரம்பத்தில் சாம்பல், பிறகு மலத்தீன், என வீசியும் கறையான் கள் கட்டுப்பட்டதாய் இல்லை. மாறாகப் பெருகிப்பெருகி பொத்தல் பொத்தலாய் இற்று விழுந்து வர வர வெழுப்பாகி வந்தது வேலி.

இனி என்ன செய்யலாம்?


இயலாமையும் சலிப்பும் வேலிச் சொந்தக்காரனைச் சூழ்ந்து துயற்றின.

வீசிய தென்றலுக்கு கிளைகளைச் சிலுப்பியடங்கிய வேம்பு, வேலிச் சொந்தக்காரனைப் பார்த்து சொல்லிற்று.

"பட்ட கிழுவை" வேலியில் நிற்கும்வரை உன்னால் உனது வேலியை பாதுகாக்க முடியாதென்று.

**ஆவரங்கால் சுதன்**

## ஏக்கம்



**அமைதிக்கும்** அமைதியின்மைக்குமிடையேயான மௌனயுத்தமொன்று பிரபஞ்சப் பெருவெளியில் நிகழ்ந்து கொண்டிருந்தது.

இந்த மௌனயுத்தம் மீண்டுமொரு பெரும் போருக்கு வழிகோலிவிடுமோ என்ற அச்சத்தோடு தடுக்கும் முயற்சிகளில் விண்ணில் உள்ள கோள்களெல்லாமே முயற்சி செய்யத் தொடங்கிவிட்டன.

சூரியனோ தனது உயர்நிலை சகல கோள்களிற்கும் தலைவன் நானே என்ற அகம்பாவ அகந்தைக்கேற்ப பூமியின் அடிபணியாத தன்மையைக் கருதி பூமியின் மீது தன் முழுப் பலத்தையுமே சொரிந்து சுட்டெரித்துக் கொண்டிருந்தது.

சூரியனே நீஉயர்ந்த பதவியை இந்தப் பிரபஞ்சத்தில் வகுப்பதால் என்மீது கொண்ட காழ்ப்பினால் எனது அழகையும் வளத்தையும் சுட்டெரித்து விடுகிறாய். இது நல்லதற்கல்ல. என்னை அழித்து விட்டால் நீ தப்பி விடலாமென எண்ணாதே! நான் இல்லையேல் நீயும் அழிந்து விடுவாய் என்பதை இனியாவது புரிந்து கொள் எனப் பூமி எச்சரித்தது.

சனீஸ்வரனைத்தவிர அனைத்துக் கிரகங்களும் கூடி ஆராய்ந்தன . சமாதானத்தைக் கட்டி எழுப்ப எல்லாவழிமுறைகளிற்கும் நாம் உதவுவோம் எனத் தீர்மானித்தன.

சந்திரன் சமாதானத்தை வலியுறுத்தினான்.

சுக்கிரனும் புதனும் வீணான உயிரிழப்புகளையும் அழிவுகளையும் நிறுத்தி சுமூகமான நிலைக்கு வாருங்களென வேண்டின.

பூமிக்குக்கிட்ட உறவில் பேசுகிறீர்கள் என்றது சூரியன்.

சனியனோ, அட்டகாசமாகச் சிரித்தது. சூரியனே உனது வலுவைநீயே அறியாது வீணாக பலவீனர்களுக்கு பணியாதே! உன்பலம் போதும்... உனக்கு பதில் சொல்ல இவர்கள் யார்? என்று சீண்டி விட்டுக் கொண்டான்.

சூரியனுக்கு தன்னை விடயாருமில்லை என்ற அகந்தை மேலிடவே மீண்டும் தனது அக்கினிக்கோலமாகத்தன் வெப்பத்தை பூமிமீது சொரிந்து பூமியை வதைத்தது. தனது ஆதிக்கத்தை நிலை நாட்டுவதொன்றே நோக்கமாக இருந்தது.

பூமி மென்னகை ஒன்றை உதிர்த்து விட்டு எதிரியான சூரியனின் வெப்பத்தையே கருவியாக்கி தனது நீர்ப்பரப்பியை ஆவியாக மாற்றி நீராவி மூலம் சூரியப் பாதுகாப்புப் படைகளான முகில் கூட்டங்களை தாக்கி நனைத்துக் கொண்டது. நீரால் கனமேறிய முகில்கூட்டங்கள் மெல்ல மெல்ல பூமியை நோக்கி இறங்கின. சூரியனின் கதிர்களைத் தடுத்தன. சூரியன் தடுமாறிநின்றது.

சூரியன் திகைத்துப் பெரும் ஏமாற்றத்தைக் கண்டது. முகில்கள் மழையாகப் பொழிந்தன. பூமி குளிர்ந்தது. பயிர்கள் செழித்தன. எங்கும் பசுமையின் தோற்றம் பாயாக விரிந்து மெருகூட்டியது. சுகந்தம் சுமந்த தென்றல் புவியைத் தழுவிக்கிடந்தது. இந்த அமைதியைக்கண்டு பிரபஞ்சத்தின் கோள்கள் மகிழ்ச்சியில் திழைத்தன.

இந்த மாற்றங்களைக் கண்டு சூரியனின் மனம் குமுறியது. கோபம் பொங்கிப்பிரவகிக்க முடியாது தடுமாறத் தொடங்கியது.

துள்ளிக்குதித்த சனியன் அள்ளி வைப்பதற்கான வேறு வழிகளைத் தேடிக் கொண்டிருக்க - ஏனைய கோள்களெல்லாம் பூமியை வாழ்த்திப் புகழ்ந்தன.

சூரியன் மனம் புளுங்கி உள்ளூற சலித்துக் கொண்டிருந்தது.

வியாழனான அறிவன் கோள் நிதானமாகவே கூறியது"ஆதிக்கம் செய்ய நினைத்தவர் வென்ற வரலாறு எங்குமே இல்லை" என்று.

பாவம் சூரியனோ பூமியின் செல்வாக்கு உயர்ந்ததையும் அதன் மேல் தோன்றிய மாற்றங்களையும் கண்டு பொறுக்காதமனதோடு எப்படிப் பூமியைப் பணியவைப்பதென்ற ஏக்கத்தில் மூழ்கிக் கிடந்து தவித்துக் கொண்டிருக்கிறது.

**வளவை வளவன்**

## கறுப்பு நங்கையின் கண்ணீர்



மிகமிகத் துயரமான கண்ணீர்
ஒரு கறுப்பு நங்கையின் கண்ணீர்தான்.
ஏனெனில்
அவளை அழவைப்பது சுலபமல்ல.
அவள் மகனை அவளிடமிருந்து
எடுத்துச்செல்.
அவனை போதைப்பழக்கத்துக்கு ஆளாக்கு.
வயலில் அவனை உழைக்கவை.
கொரியாவில் அவனைக் கொன்றுபோடு.
ஒரு பி.எச்.டி.பட்டத்துடன்
ஓட்டலில் உணவு பரிமாறச் செய்.
அவள் உதிர்ப்பாள் ஒரு புன்னகை
- தனக்கே உரித்தான
கசப்புப் புன்னகையை
கேடயமாகப் பயன்படும்
தன் கறுப்பு முகமூடியின் ஊடாக
அவள் உதிர்ப்பாள்.
கண்ணீர் பெருகும்
உள்ளுக்குள்
இரத்தச் சிவப்பாக.
அவள் கணவனை
அவளிடமிருந்து பிரித்துவை.
சமையல் அறையிலேயே
சாக வை.
பெரிய கடன் ஒன்றை உண்டாக்கி
ஆயிரம் நாளில் அதை
திருப்பிக் கொடுக்கச் செய்.
அவள் கொடுப்பாள்.
தண்டனை ஒன்று கொடுத்து
ஆயிரம் இரவுகளை கழிக்கவை.
அவள் கழிப்பாள்.
ஆயினும்
வெள்ளையனே

நீ அவளிடமிருந்து
கண்ணீரை மட்டும் பெறமுடியாது
ஏனெனில்
அவள்
துயரங்களின் அரசி.

## தற்கொலை பற்றிச் சிந்திக்கும் கறுப்புக் கவிஞர்களுக்கு



கறுப்புக் கவிஞர்கள் வாழத்தான் வேண்டும்.
-இரும்புப் பாலங்களின் மீதிருந்து
(வெள்ளைப் பையன்களைப் போல)
குதிக்கக்கூடாது.

கறுப்புக் கவிஞர்கள் வாழத்தான் வேண்டும்.
-இரயில் தண்டவாளங்களில்
(வெள்ளைப் பையன்களைப் போல)
கழுத்தை வைக்கக் கூடாது.

கறுப்புக் கவிஞர்கள் தேடத்தான் வேண்டும்.
-ஆனால் இருண்ட குகைகளில் அதிகம்
தேட வேண்டியதில்லை.
அல்லது அடிமனச் சுவடுகளில்
(வெள்ளைப் பையன்களைப் போல)
உள்ளான் குருவிகளை
வேட்டையாட வேண்டியதில்லை.
ஏனெனில்
கறுப்புக் கவிஞர்கள்
கறுப்பு மக்களுக்குச் சொந்தமானவர்கள்.
கறுப்புக் காதலர்களின்
புல்லாங்குழல்கள்.

கறுப்புச் சோகம் இசைக்கும் இசைக்கருவிகள்.
கறுப்பு வீரர்களின்
எக்காளக் குழல்கள்.

எல்லா கறுப்புக் கவிஞர்களும்
இசைக்கருவிகளாகவே மடியட்டும்.-மடிந்து
அணிவகுத்துச் செல்பவர்களின்
காலடிப் புழுதியில்
புதைக்கப்படட்டும்.

(அறைக்குள் வந்த ஆபிரிக்க வானம் தொகுப்பும், மொழிபெயர்ப்பும்)

**இந்திரன்.**

# இளைய நாதம்

## குட்டிக்கதை

# பெரியோர் சொல் தட்டாதே

கிளிநொச்சி நகரத்திற்கு அண்மையில் அன்பழகன் பாலர் பாடசாலை. இப்பாலர் பாடசாலையில் தான் மதியும், மலரும் கல்வி கற்று வந்தனர். கிளிநொச்சி நகரத்தைக் கடந்துதான் அவர்கள் பாடசாலை செல்ல வேண்டும். மதி துடிப்பான வள். துடுக்குத்தனம் மிகுந் தவள். மலருடன்தான் பாட சாலை போய் வருவாள்.

ஒரு நாள் மதியின் அப்பப்பா கடைக்குச் சென்று கொண்டிருந்த போது வீதி யில், மலரும் மதியும் ஆடிப் பாடிக் கொண்டே வீதி ஒழுங் கைப்பாராது பாயமுற்பட்ட போது வேகமாக வந்த மோட்டார் சைக்கிளில் மதி அடிபட இருந்ததை அவதா னித்தார். நல்ல வேளை மோட்டார் சைக்கிள்காறன் பிரேக் பிடித்து விட்டான்.

அன்றிலிருந்து மதியின் அப்பப்பா அவளைப் பாடசா லைக்கு சைக்கிளில் ஏற்றிக் கொண்டு செல்வார். ஆனால், மதிக்கு அப்பப்பாவின் சைக் கிளில் போவதற்கு விருப்ப மில்லை.

ஒரு நாள் மதி தனது அம்மாவிடம் "அம்மா நான் அப்பப்பாவின் சைக்கிளில் போக மாட்டேன். மலரோடு நடந்து போகப்போகின்றேன்." என்று ஒற்றைக்காலில் நின்றாள்.

மதியின் அப்பப்பா விரும்பவில்லை. "வீதிகள்முன்பு போல் இல்லை. எந்தப்பக்கம் திரும்பினாலும் வாகனங்கள் விரைந்தபடி.... பிள்ளைகள் விளையாட்டுத்தனத்தில் குறுக்குமறுக்காய்ப் பாய்வார்கள். அவர்களுக்கு என்ன தெரியும்? இளங்கன்று பயமறியாது என்று சும்மாவா சொல்லியிருக் கின்றார்கள்." என்றார்.

மதி அப்பப்பாவின் சைக்கிளில் போக மாட்டேன் என்று அடம்பிடித்தாள். மதியின் விருப்பத்தின்படி அவளின் தாய் மலரோடு பாடசாலை அனுப்பி னார். இருவரும் மகிழ்ச்சியுடன் பாடசாலை சென்று வந்தார்கள்.

வழமை போல் அன்றும் அவர்கள் அங்கும் இங்கும் பார்த்தபடி, கைகளைப் பிடித்தபடி வீட்டிற்குச் செல்லும் ஒழுங்கை யைக் கடக்கப் பாய்ந்தபோது அது நேர்ந்தது. மலர் கார் சில்லுக்குள் சிதைந்து போனாள்.

தனது நண்பியின் துயரத்தைத் தாங்க முடியாது தவித்தாள். பெரியவர் சொன்ன வார்த்தையை நினைத்து, நினைத்து விம்மினாள். வீதியை அவதானித்து வந்திருந் தால், மலர் இறந்திருக்க மாட்டாள். பெரியோர் வார்த்தையைத் தட்டல் தவறு. என்பதைப் புரிந்து கொண்டாள்.

பெரியோர் சொல் வேதம்தான்.

பா. இசைவிழி

## வாரம் ஒரு குறள்



நாம் இவ்வுலகில் எவ்வாறு உறங்கிப் பின் விழித்து எழுகின்றோமோ அதே போல் இறப்பு பின் பிறப்பு எனும் செயலும் நிலையில்லாத இவ்வுலகில் நிலையாக மாறி மாறி வருகிறது. இதையே திருக்குறளில் வள்ளுவனார் இவ்வாறு கூறுகிறார்.

"உறங்குவது போலும் சாக்காடு
உறங்கி விழிப்பது போலும் பிறப்பு"

## நல்லவை செய்வோம்

ஒற்றுமையை நினைப்போம்
ஒழுக்கத்தைக் கற்போம்
கலைகளைப் பயில்வோம்
கற்றதை மீட்போம்

நல்லோரை அணுகுவோம்
தீயோரை வெறுப்போம்
தீமைகளை ஒதுக்குவோம்
நன்மைகளைச் செய்வோம்

இறையை வணங்குவோம்
பொறுமை கொள்வோம்
தமிழை வளர்ப்போம்
புகழ் பெற்று வாழ்வோம்

ந. இந்துசா
கிளி/பிரமந்தனாறு
மகா வித்தியாலயம்.

## பொது அறிவு

01) திரவங்களின் அடர்த்தியை அளக்கும் கருவி எது?
ஹட்ரோமானி
02) விமானம் பறக்கும் போது உயரத்தை அளக்கும் கருவி எது?
அல்டிமானி.
03) மின்னோட்டத்தை அளக்கும் கருவி எது?
அம்பியர் மானி.
04) பாலில் உள்ள நீரை அளக்கும் கருவி எது?
லக்டோ மானி.
05) வெப்பத்தை அளக்கப் பயன் படும் கருவி எது?
வெப்பமானி.
06) நோர்வேயின் தலை நகர் எது?
ஒஸ்லோ.
07) முதல் முதல் தீப்பெட்டி தயாரித்த நாடு எது?
சுவீடன்.
08) கனடாவின் தலை நகரம் எது?
ஒட்டாவா.


தணிகை - மு

## கைவண்ணம்



கு.ஸிந்தூரி, பூநகரி.

## குறுக்கெழுத்துப் போட்டி 04




இடமிருந்து வலம்
01.குறைந்து செல்லும் ஸ்வரவரிசை
07.பாரம்பரிய விளையாட்டு குழம்பியுள்ளது.
22.முன்பு பேச்சுவார்த்தை இடம்பெற்ற இடம்.
31.நவம்பர் - 27

மேலிருந்து கீழ்
01.சிலர் இவ்வாறு ஒட்டிக்கொள்வர்.
02.முகம்.
03.நட்சத்திரங்களில் ஒன்று.
04.மிகவிரைவு.
06.பாத்திரத்தின் ஓரம் குழம்பியுள்ளது.
23.சில்லறைக்காசு ஓர் எழுத்தை இழந்துள்ளது.
25.அம்மாவின் சகோதரன்.
27.பெருக்கல் குறியீடு.


பரிசுக்குரியவர்
ஜெ.கீர்த்திகா,தரம்-10
கிளி/இராமநாதபுரம் ம.வி.

பாராட்டுக்குரியவர்கள்
01.பு.விதுஜா,
ஆலங்கேணி பூநகரி.
02.R.J.A மரிஸ்ரன், தரம்-05
மு/சிறி.சுப்பிரமணிய வித்தியாலயம்,புதுக்குடியிருப்பு.
03.ஜெ.சஜீவா, தரம்-03
இராமநாதன் இந்து மகளிர் கல்லாரி,
மட்டக்குளி, கொழும்பு-15

**குறுக்கெழுத்துப்போட்டி – 02**
இன் விடைகள்
இடமிருந்து வலம்
01.திருகோணமலை,11.வகு(வகுப்பு), 13.நெல்லியடி, 25.வேங்க(ை), 29.கரு, 31.பல்லி, 35.திதி,
மேலிருந்து கீழ்
01.திருநெல்வேலி,03.கோடாலிக்கல்(லு), 05.மகுடி, 06.வலை, 24.அகதி, 26.பங்(கு) 29.திரு.

இளையவர்களே!
மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி அனுப்புங்கள்.

குறுக்கெழுத்துப்போட்டி இல.4
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.




எல்லாம் பறி போன பின்பும், எதிர்காலம் மிஞ்சி நிற்கும். - கிறிஸ்டியன் போவி

(இது வடமத்திய மாகாணப் பிரச்சினை என்றாலும் இதே பிரச்சினையை நாமும் எதிர் கொள்ளவேண்டியிருப்பதால் இக்கட்டுரையை மொழிபெயர்த் துள்ளோம்)

வட மத்திய மாகாணத்தில் தொடரும் மரணங்கள், சிறுநீரகப் பாதிப்பும், கிருமி நாசினிகளும். இது இப்பகுதி வைத்தியர்களை கவலை கொள்ள வைத்துள் ளதுடன், இதனைப்பற்றிய பூரண தரவுகளினடிப்படையில் இதனை குறித்துக் காட்ட முடிந்துள்ளது.

அநுராதபுரத்தில் 1996 ம் ஆண்டு 13% மாக விருந்த சிறு நீரகப்பகுதிப்பாதிப்புக்குள்ளான நோயாளர் தொகை 2000ம் ஆண்டு 23% மாக அதிகரித்தது. இவ்விருவிகிதாசாரத்துக்குமான வித்தியாசமானது, இங்குள்ள சாவுக்கான காரணி விரிந்துள் ளமையைப் புலப்படுத்துகிறது என்கிறார் அநுராதபுரம் மத்திய வைத்தியசாலை சிறுநீரகப்பகுதி வைத்தியர் வசந்த திசநாயக்க.

திரு. திசநாயக்க மேலும் குறிப்பிடுகையில் வாராந்த கிளினிக்கின் போது 300க்கு மதிகமான சிறுநீரக (Renal) பாதிப்புடைய நோயாளர்கள் வடமத்திய மாகாணத்தின் பல பாகங்களிலுமிருந்து வருகிறார் கள். இவர்களை வைத்து ஒரு பூரணமான புள்ளிவிபரத்தை பெற்றோம்.

இவர்களில் அநேகர் விவ சாயிகள். அதிக தொகையான வர்கள் மதவாச்சியைச் சேர்ந்தவர் கள். நாடு முழுமைக்குமான சிறுநீரக பாதிப்பாடைந்தவர் களுடன் இத்தொகையை ஒப் பிட்டுப் பார்த்தோம். 2002ம் ஆண்டில் 1,035 பேர் இந்நோயால இறந்துள்ளனர். 202 பேர் அநுரா தபுரத்தை சேர்ந்தவர்கள். இது மற்றமாகாணங்களை விட அதிகம். என்றார் வைத்தியர் திசநாயக்க.

இதற்கு இந்தப்பிரதேசத்தில் இரண்டு காரணங்களைக் கூற லாம். ஒன்று குடிநீரில் காட்மியம் மெர்குரி அல்லது புளோரைட் போன்ற உலோகக்கலப்பாகும். அதனால் செலுத்தப்படும் சாவை ஏற்படுத்தக் கூடிய நஞ்சுப்பாதிப்பு முதலாவது விடயத்தை காண்பது சாத்தியமில்லை. ஏனெனில் அங்கு பெரியளவிலான தொழிற்சாலை கள் எதுவுமில்லை. எனவே உலோகவகைக்கழிவுகள் அசுத்தம் செய்ய இடமில்லை.

ஆகவே நாங்கள் இயலுமான அளவுக்கு சாவை விளைவிக்கக் கூடிய வேறு 'அசுத்தங்'கள் பற்றி நிச்சயப்படுத்த முடியும். ஏனென் றால் அது ஒரு விவசாயப் பிர தேசம் .அங்கு நச்சுப்பொருட்க ளின் பாவனையும் அதிகம் என்ற வைத்தியர் திசநாயக்க உடனடி யாக இதுபற்றி நீர் வழங்கும் சபை யினருடன் சேர்ந்து அந்தப் பிர தேசம் பற்றிய திட்டமான நீர்ப்பா வனைகள் பற்றி காண முயன் றோம் என்றார்.

அண்மையில் திறக்கப்பட்ட சிறுநீரக சிகிச்சைப்பிரிவில் பாதிக் கப்பட்டு படுத்திருக்கும் நோயாளி யான எஸ். தர்மவீரவின் சிறுநீரகத்தை யந்திரத்தின் மூலம் இயங்க வைத்திருந்தனர்.

# மரண பானம்



இந்த 45 வயது மனிதர் 'பரசங்க வேவ' வாசி. தனக்கு நேர்ந்தது பற்றித் தெரியாதவராக மூச்சு விடக்கஷ்டமான நிலையில் கிடந்தார். சாதாரணமாக வைத் தியம் பெறவே வந்தார். ஆனால் அவரது சிறுநீரகம் அழிந்து போயி ருந்தது.

வைத்தியசாலையில் அவ ரைப்பலவீனமாக்கியுள்ள நோய்க் கும் அவர் அருந்திய நீருக்கும் தொடர்புள்ளது எனக் கண்டறி யப்பட்டது. இவர் வயலுக்குச் செல்லும் போது போத்தலில் குடிநீர் கொண்டு செல்வதில்லை. அருகிலிருந்தவர்களிடமும் பெறு வதில்லை. அங்குமிங்கும் கிடைத்த நீரை வயலிலிருந்தே பெற்றுக் குடித்துள்ளார். அல்லது அருகிலுள்ள கிணற்றிலிருந்தும் பெற்றுத் தாகத்தைத் தணித் துள்ளார்.

இப்போது யந்திர உதவியு டன்தான் அவர் கிடந்தார். ஏனெ னில் அவரது மூத்திரக் காயங்க ளுடனான சிறுநீரகம் சிதைவுற்றி ருந்தது. யந்திரமூலமாக அங் குள்ள வீணான குருதி அகற்றப் பட்டு சுத்தமான இரத்தம் அவரது உடலுள் செலுத்தப்பட்டது.

அவ்வளவு ஆழமாக நாம் இதை அறிந்திருக்கவில்லை என்ப தற்காக வருந்துகிறேன்." என்ற வைத்தியர் திசநாயக்க. 'அநேக மான இவ்வகை நோயால் பாதிக் கப்பட்டோர் எங்கே குடிநீரைப் பெறுகிறார்கள் என்பதை சோதனை செய்தோம்' என்றார் டம்புல, சிகிரியா பகுதியெங்கும் ஆய்வு செய்ததில் 89% மான கிணறுகள் நஞ்சுப்பதார்த்தங் களால் அசுத்தமடையும் சாத்தியம் இருந்தது வடமத்திய மாகான விவசாயிகள் வழமையான கிண றுகளிலிருந்தும் குழாய்க் கிணறு களிலிருந்தும். குளங்களிலிருந் தும், சிறுகுட்டைகளிலிருந்தும் (வயல்களிலுள்ளவை) நீரைப் பெறுகின்றனர்.

இவ்விபரங்களைச் சேகரித்த வைத்தியர் திசநாயக்க சாதாரண ஆழமான கிணற்றுநீரை அருந்திய அதிக நோயாளர்கள் நீண்டகால சிறுநீரக சிதைவுக்கு ஆளாகி யிருப்பதை கண்டார். 10-11% இந்நோய் பரம்பரையாக இருக் கிறது. இந்நோயின் தொடர்ச்சி சிறுநீரகங்களின் நிலையை பாதிக்கும்வண்ணம் குடும்பங் களாக நச்சுப்பதார்த்தங்கள் சென்ற டையும் நீரைப் பாவிப்பதே கார ணமாகியுள்ளது என்றார்.

திரு. வசந்த திசநாயக்க என்ற மற்றுமொரு வைத்திய ஆலோ சகர் ஒன்பதாம் மருத்துவ விடுதிப் (Ward) பரிசோதகர், ரணவீர என்பரை அனுமதிக்கும்படி கொண்டு வந்தார். ரணவீர் வயது 42. 'விலாச்சியா'வைச் சேர்ந்தவர். ஊக்க மாற்றமாகவும் வலியால் குழப்பமடைந்தும் காணப்பட்டார். அவரது வயிற்றுப்புறம் வீங்கி யிருந்தது. அமைதியற்றிருந்தார். வாந்தியெடுத்தார். குருதியில் அதிகமாக யூரியா காணப்பட்டது. இங்கு கொண்டு வந்த போது இவரது சிறுநீரகச் செயற்பாடு மிக கெட்டுப் போயிருந்தது என்று அந்த அதிகாரி கூறியிருந்தார்.

இப்படியாக அந்த ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்த 90 நோயாளர்களில் 10 பேர் சிறு நீரகம் பாதிப்புறோராக இருந்த னர். ரணவீரவுடைய மகன் அவ ரைப் பராமரிக்க கட்டிலருகே நின்றவர் தன்தந்தை கிணற்று நீரையே குடித்து வந்தார் என் றான்.

வைத்திய ஆலோசகர் இதை கடுமையாக வாதித்தார். விவசா யிகள் கிருமி நாசினிகளைப் பாவிக்கின்றனர். நீரை வடித்து பின் கிணற்றிலோ குளத்திலோ அலசுகின்றனர். மருந்து தெளிப் பானையும் தங்களையும் கூட அங்கேயே கழுவிவிடுவதால் நீர் அசுத்தமாகிறது.


கொழும்புக்கு பின்னே பிரதான சாலைக்கப்பால் 'ஜயகங்க' தலவாப் பிரதேசத்தி லுள்ளது. அப்பாதையில் செல்கை யில் கண்ணுக்கெட்டிய தொலைவு வரை அழகான நெல் வயல்களின் காட்சி உள்ளத்தை கொள்ளை கொள்ளும், பெரிய பொங்கி வழியும் நீர்த்தேக்கத்தின் பின்னணியில் இவை இருக்கும். ஒரு இளம் விவசாயி முழங்கால் வரை சேற்றில் தோய இங்கு மங்கும் இளம் பயிருடாக நடந்த வாறே தாளம்பிசகாது தெளிப் பானின் கைபிடியை அசைத்த வாறே பயிருக்கு கிருமி நாசினி தெளிக்கிறான்.

அவன் எந்தப் பாதுகாப்பு உறைகளையும் அணியவில்லை. கையுறைகளோ முகக் கவசமோ இல்லை. அவனது கால்களும் மருந்தில் தோய்ந்த வண்ணமே யிருக்கின்றன. அருகிலுள்ள கட்டப்படாத கிணற்றிலிருந்து நீரள்ளி கிருமிநாசினியைக் கலந் தபின் போத்தலை அதன் ஓரத்தில் போடுகிறான். உண்மையில் என்ன நடக்கிறது என்பதை விளக்கினார் வைத்தியர் திசநாயக்க. இவ் ஆய்வின் முடிவாக இந் நச்சு நாசினிகளினால் ஏற்படும் அசுத் தங்களால் நீண்ட கால சிறுநீரகப்பாதிப்புக்குள்ளாக்கும் ரீனல் சிதைவு ஏற்படுகிறது.

விவசாயிகள் தாம் கையாளுவது நஞ்சு என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். இத னால் ஏற்படும் பாதிப்புகள் சிறு நீரகத்திற்கு மட்டுமல்ல உயிருக் கும் கூட.

நன்றி சண்டேரைம்ஸ்

குமுதினி ஹெட்டியாராச்சி
தமிழில்- மாயா




# தியாகக்கலைஞர்கள்

அந்த நாளில் நடிகர் திலகம் சிவாஜிகணேசன் நடித்த "ராஜ பார்ட் ரங்கதுரை" திரைப்படம் பார்த்தபோது. ''சிரிக்கிறேன் சிரிக்கிறேன் சிரிப்பு வரல்லே - நான் அழுவுறேன் அழுவுறேன் அழுகை வரல்லே'' என்ற பாடலுக்கு உரிய காட்சியைப்பார் த்தபோது அது மிகைப்படுத்தப் பட்டதொன்றாகவே எனக்குத் தோன்றியது.

காட்சி ஆரம்பமாகும் போது தங்கை இறந்து விட்ட செய்தி ராஜபார்ட் ரங்கதுரையிடம் சொல்லப்படுகிறது: இரசிகர்களோ நாடகத்தைத் தொடங்கும்படி ஆர்ப்பாட்டமிடுகின்றனர். இந் நிலையில் ரங்கதுரை எனும் நடிகன் கோமாளிவேடத்துடன் மேடையில் தோன்றி அழுதும் சிரிப்பூட்டியும், பாடியும் நடிக் கின்றான்.

மிகைப்படுத்தப்பட்ட காட்சி இது என்ற நினைவு நாளடைவில் அற்றுப்போயிற்று 1978 இறுதி யிலே தமிழ் நாடு கிறிஸ் தவ கலைத்தொடர்பு சேவை நிலை யும் சென்னை மியூசிக்கல் அக்க டமியில் ஒரு நாடகம் அரங் கேற்றியது. அதன் பெயர் 'பர யாஸ்' அதில் நகைச்சுவை பாத்தி ரமான யூதா பாத்திரத்தை ஏற்று நடித்தவர் இன்று திரைப்பட உலகில் நகைச்சுவை நடிகராக விளங்கும் குமரிமுத்து.

நாடகம் அரங்கேற்றுதற்கான சகல ஏற்பாடுகளும் செய்து முடித்து நாடகம் அரங்கேற்றும் அன்றைய நாள் காலையில் சென்னையில் குமரிமுத்துவின் தாயார் காலமாகிவிட்டார். முக்கிய பாத்திரமான யூதா இல்லாமல் நாடகம் அரங்கேற்றுவது சோபிக்காது. சிரமமும் கூட எனவே அன்று நாடகத்தை அரங்கேற்றுவதைத் தவிர்த்து விடுவோமா என்று நாடகத்தின் இயக்குநர் அருள்திரு சுவிசேஷ முத்து சிந்தித்தார். ஆனால் குமரிமுத்து இதற்குச் சம்மதிக்க வில்லை. பல ஆயிரங்கள் செலவழித்து. பல நாட்கள் பயிற்சி செய்யப்பட்ட நாடகம் தன்பொரு ட்டு திட்டமிட்டபடி அரங்கேறாது போவதை குமரிமுத்துவால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. எனவே என்னால் நாடகத்தை அரங்கேற்றாமல் விடவேண்டாம். நான் நடிப்பேன் என்று கூறினார்.

குமரிமுத்துவின் ஒத்துழைப் புடன் நாடகம் அரங்கேறியது. வீட்டிலே பெற்றவளின் பிணம். மறுநாள் அவளுக்கு கொள்ளி வைக்க வேண்டியபிள்ளை. சபையோர் சிரிக்கச் சிரிக்கமிகவும் நேர்த்தியாகத் தனது பாத்திரத்தை நடித்து பாராட்டுப் பெற்றார். ஆனால் அவருக்குள்ளே இருந்த இதயக்குமுறல் சம்பந்தப்பட்ட வர்களைத் தவிர வேறு எவ ருக்கும் தெரியாது.

இந்த விடயங்களை எழுதும் போது தற்பொழுது முள்ளிய வளையில் வசிக்கும் செல்லக் குட்டி எனும் கலைஞரின் எண்ண மும் கூடவே எழுகின்றது.

இவருடைய பிள்ளைகள் அறுவரில் இரண்டுபையன்கள் மாவீரர்கள். முதலாமவன் 1987ல் இந்திய அமைதிப்படையுடன் யாழ்ப்பாணத்தில் நடந்தமோதலில் வீரச்சாவடைந்த லெப். கமல். இரண்டாமவன் 1991ல் கரும்புலி டாம்போவின் சிலாவத்துறை முகாம்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சா வடைந்த லெப். சங்கர். இந்த இரண்டு மாவீரர்களின் வித்துட லையும் பெற்றவர்கள், சகோத ரர்கள், உறவுகளுக்கு காணும் பேறு கிட்டவில்லை.

லெப். சங்கர் வீரச்சாவடைந்த அன்று முத்திரையன்கட்டில் சங்கர் மாமா தலைமையில் நாடகம் அரங்கேற்றப்பட்டுக் கொண்டி ருந்தது. செல்லக்குட்டி அவர்களே நாடக இயக்குநரும், ஹார்மோனி யம் வாசிப்பவரும்.

நாடகம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் இரண்டு போராளிகள் தேடிவந்து சங்கர்மாமாவிடம் இரகசியமாகக் கதைத்ததும், உடனே சங்கர்மாமா தன்னைப்பார்த்ததும் மற்றவர்கள் தமக்குள்ளே இவரைப்பார்த்து 'கிசுகிசு'த்துக் கொண்டது. அனைத் தையும் கண்டதும் நடக்கக் கூடாத விபரீதம் நடந்து விட்டதை செல் லக்குட்டி உணர்ந்து கொண்டார்.

ஏனெனில் தனது மகன் சங்கர் சிலாவத்துறைத் தாக்குதலுக்குப் போனதும் அந்தத்தாக்குதலில் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றி கிட்டவில்லையென்பதும். போரா ளிகள் வீரச்சாவடைந்தது மான செய்திகளை அறிந்திருந்தார். ஆகையால் தனது மகன் சங்கரும் வீரச்சாவடைந்துவிட்டான் என் பதை உறுதியாக நம்பினார். ஆயி னும் பதட்டமடையாமல் நாட கத்தை சிறப்பாக அரங்கேற்றி முடித்தார்


இசைநிகழ்ச்சி நிறைவடைந்த பின்னர் சங்கர்மாமா தயங்கித் தயங்கி "சிலாவத்துறை மோதலில் மகனுக்கு காயமாம்'' என்று தெரிவித்தார். ஆனால் தன்மகன் வீரச்சாவடைந்துவிட்டதை ஏற்கனவே தீர்மானித்துக் கொண்ட அமைதியோடு மனைவி மக்க ளிடம் புறப்பட்டார். செல்லக் குட்டியரிடம் இருந்த சிறப்பு என்ன வென்றால் வீரச்சாவடைந்த தனது இரண்டு மக்களுக்கும் இளவு வீடு கொண்டாடுவதில்லை என்ற உறுதியோடு நடந்து கொண் டமைதான். மூன்றாம் நாளே மீண்டும் கலை நிகழ்ச்சிகளைச் செய்யத் தொடங்கிவிட்டார். மகாபாரதத்தில் கண்ணனின் கீதோபதேசம் பெற்று போராடத் தொடங்கிய அர்ச்சுனன் மகன் அபிமன்யு போரில் இறந்தான் என்று கேள்விப்பட்டு மனம் உடைந்து தீக்குளிக்க முயன்ற தாகக் கூறப்படுகின்றது. ஆனால் எத்தனை அபிமன்யூக்களை இழந் தாலும் கலங்காதவர்கள் எமது கலைஞர்கள் என்ற பெருமை எமக்குண்டு.

இன்று 57 வயதையுடைய கலைஞர் இவர். 11 மேடை நாட கங்களையும் 11தெருவெளி நாட கங்களையும் எழுதியுள்ளார். 'போர்ப்பறை' எனும் இசைநாடா முழுவதும் இவரது பாடல்களைக் கொண்டதே. ''தியாகராகம்'' ஒலிநாடாவில் வரும் ஒன்பது பாடல்களில் 8 இவருடையது. இன்னும் பல பாடல்களை எழுதி யுள்ளார்.

நாவண்ணன்

# உணர்வுகளைப் பகிரவும், அனுபவங்களைப் பெறவும் வாய்ப்பாக அமைந்த நத்தார் சமாதானச் சுற்றுலா





பச்சை பசேலென வானைத் தொட்டுச் செல்லும் கீற்றுக்களைக் கொண்ட தெங்குமரச் சோலைகளும், கற்பகதரு என அழைக்கப்படும் பனைமர தோப்புக்களும், பச்சை வண்ணப் பட்டாடை போர்த்திவிட்டாற் போல பரந்திருக்கும் வயல் வெளிகளும் உள்ளடங்கப் பெற்ற இந்து சமுத்திரத்தின் முத்தாம் இரத்தின துவீபம் என அழைக்கப்படும் இலங்கையிலே இனவெறி பிடித்த அடங்குமுறைகள் காணப்பட்டன. இது சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்து இன ரீதியாகப் போர் என்ற வலைக்குள் மாறியது. சில காரணங்களை முன்வைத்து போர் வலுப்பெற்றது.

இன்று சமாதான உடன்படிக்கையின் பிரகாரம் ஆண்டு இறுதியில் முதலாவது கிறிஸ்மஸ் விழாவிலே மூவின மக்களும் சமாதானமாக வாழ வேண்டும் என்பதனைக் கருத்திற் கொண்டு தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம், லயன்ஸ் கழகம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் போன்றன இணைந்து கிறிஸ்மஸ் சமாதான பயணம் (Santa`s Pease Mission) என்ற சுற்றுலாப் பயணம் ஒன்றை ஏற்பாடு செய்தன. வடக்கு, கிழக்கு மாகாணத்திலிருந்து 1000 சிறார்களையழைத்து தென்பகுதி சிறார்களுடன் ஒன்றிணைத்து ஒற்றுமையை வளர்க்கவும், உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளவும் இச் சுற்றுலா சிறுவர்களுக்கு மிகவும் வரப்பிரசாதமாக அமைந்தது எனலாம்.

இதன் பயனாக தமிழர் புனர்வாழ்வுக்கழக உதவியுடன் வட மாகாணத்திலுள்ள கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள குருகுலம் சிறுவர் பராமரிப்பு இல்லத்திலிருந்து 58 சிறார்களும், 05 பணியாளர்களும் பேருந்து ஒன்றிலே 2002/12/13 அன்று பி:12.00 மணியளவில் கொழும்பு நோக்கிப் புறப்பட்டோம். பி.ப. 1.30 மணிக்கு சோதனைச் சாவடி நிலையத்தை (புளியங்குளம்) அடைந்த போது எல்லோர்க்கும் பாலைவனைப் பட்டாந்தரை போன்ற அந்த கடந்தகால ஞாபகங்கள் நெஞ்சைப் பிழிந்தெடுக்க.... கண்கள் கடுகடுக்க சமாதானம் என்ற போர்வையை நீராகப் பாச்சி மனதில் எழுந்த கனலை அணைத்துக் கொண்டோம். நவாலி சென்பீற்றர் தேவாலயம், நாகர்கோவில் மகாவித்தியாலயம், கிளாலிக் கடற்கரை, புதுக்குடியிருப்பு மந்துவில் படுகொலை போன்றவற்றில் நடைபெற்ற சம்பவங்கள் அனைத்தும் கண்முன் மின்னல் வேகத்தில் வந்து மறைந்தன. இவற்றையும் பிஞ்சுகளாகிய நாம் நெஞ்சிலே சுமந்தவாறு பி.ப.2.45 மணியளவில் வவுனியா கோவில் குளம் சிவன் கோவிலை அடைந்தோம். வன்னியிலிருந்து எம்முடன் 06 இல்லங்கள் இப் பயணத்தை மேற்கொண்டன. அங்கு மதிய உணவை முடித்துக் கொண்டு 5.30 மணிக்கு கொழும்பு நோக்கிப் புறப்பட்டோம். அந்நிய மண்ணிலே கால் பதிக்காத நாம் ஆவலுடன் எல்லா இடமும் பார்த்த வண்ணம் சென்றோம். சிறு சிறு மலைகளையும், புத்த கோவில்களையுமே அதிகம் காணக்கூடியதாக இருந்தது.

நள்ளிரவு 12.30 மணிக்கு கொழும்பு மண்ணிலே கால் பதித்தோம். கிறிஸ்மஸ் காலமாதலால் வீதிகளெங்கும் மின்குமிழ்களால் அலங்கரிக்கப்பட்டு அழகாக இருந்தது. கொழும்பு மாநகரம் எம்மை வரவேற்க நாம் கொழும்பு இசுப்பத்தான எனும் இடத்தை அடைந்தோம். இசுப்பத்தான கல்லூரியிலே எமது இரவு உணவை முடித்துக் கொண்டு சேனநாயக்கா மாவத்தையிலுள்ள D.S சேனநாயக்கா ஆண்கள் கல்லூரியிலே தங்குவதற்காக விடப்பட்டோம். கிளிநொச்சியிலிருந்து கொழும்புக்கு என்று உற்சாகமாக புறப்பட்ட எம்மை 12 மணித்தியால பயணம் உடற்சோர்வுக்குள்ளாக்கியது. களைப்பினூடாகவே அன்றைய பொழுதைக் கழித்து விட்டு மறுநாள் (2002.12.14) சுற்றுலாப் பயணத்திற்கு ஆயத்தமானோம். மு.ப 8.45 க்கு மிருகக்காட்சிச் சாலைக்குப் பயணமானோம். முன்னே அறிவித்தல் வாகனம் தமிழ், சிங்கள, மொழிகளில் அறிவித்துக்கொண்டு செல்ல அதனைப் பின்தொடர்ந்து 15 பேருந்துகள் நெடுஞ்சாலை வழியே அணிவகுத்துச் சென்றன. பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை ஊடாக தெகிவளை என்ற இடத்திலுள்ள மிருகக் காட்சி சாலையை அடைந்தோம்.

ஆகா! என்ன அருமையான, அழகான காட்சிகள் கண்ணைக் கவர்ந்தன. எங்கு பார்த்தாலும் பசுஞ்சோலைகள் மனதிற்கு இனிமை தரும் காற்றின் அசைவுகள், கொள்ளை கொள்ளுமளவு பஞ்சவர்ணக் கிளிகள், பல நிறங்களில் பலவித பறவைகள் அனைத்தையும் கண்ணுக்குள் அடக்கிவிட்டு அடுத்தபடி நகர்ந்தோம். அங்கு நீர்வீழ்ச்சியைக் கண்டோம். முதலை, ஆமை, வாத்து, தாரா, நீர்க்காகம், நீர்யானை, மீன் போன்ற நீர்வாழ் உயிரினத்தைப் பார்வையிட்டோம். அதற்கு அடுத்தாற் போல பல இனவர்க்கக் குரங்குகள், குதிரை, புலி, சிங்கம், கரடி, யானை, மான், மரை, கழுதை, பண்டி, ஒட்டகச் சிவிங்கி போன்ற விலங்கினங்களையும் கண்டு ரசித்தோம். சில மிருகங்களை படங்களிலேதான் பர்த்திருந்தோம். ஆனால் நேரடியாக காணும் போது எமக்கு வியப்பை ஊட்டின. பென்குயின் டொல்பின் மீன் என்பவற்றை பார்த்ததோடு பூட்டிய குளுகுளு குகைக்கள் சென்று மீனினங்களையும், பாம்பினங்களையும் பார்வையிட்டோம். எமக்கு யானை நடன விருந்து காண்பிக்கப்பட்டது. பின் 12.30 ற்கு அங்கு இருந்து புறப்பட்டு இசுப்பத்தான பாடசாலை விகாரமாதேவி பூங்காவிற்கு அழைத்துச் செல்லப்பட்டோம்.

அங்கு சிங்களச் சிறார்களின் நடன விருந்துடன் ஊர்வலமாக குறுகிய தூரம் நடந்து சென்று நுழைவாயிலை அடைந்தோம். "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற கோட்பாட்டிற்கு இணங்க நாம் எல்லோரும் ஒற்றுமையாக இருந்தோம். எங்கள் ஒவ்வொருவருக்கும் காற்று நிரப்பப்பட்ட பல நிற பலூன்கள் தரப்பட்டன. அவற்றை வானிலே பறக்கவிட்டு மகிழ்ந்தோம். விரும்பிய இடத்தில் விளையாடினோம். அங்கு நின்றவாறே கொழும்பு பிரபல்ய நூலகத்தையும் பார்வையிட்டோம். பின் அங்கிருந்து புறப்பட்டு வானளாவிய அடுக்குமாடி தொடர்கட்டிடங்களையும், பெரிய கடைகளையும், ஊர்ந்து செல்லும் வாகனங்களையும் ஆவலுடன் பார்த்து மகிழ்ந்ததுடன் பூஞ்செடிகள் மனதைக் கொள்ளை கொள்ளும்படி மிக அழகாக காணப்பட்டன. அவற்றைப் பார்வையிட்டபடி D.S சேனநாயக்கா பாடசாலையை வந்தடைந்தோம். நாம் நிகழ்வுக்காக கலையரங்கம் சென்றடைந்தோம்.

மறுநாள் உலக வர்த்தக மையத்தை பார்வையிடச் சென்றோம். மிக உயரமான கட்டிடத் தொடர் கண்ணாடி பதிக்கப்பட்டு பார்ப்பதற்கு அழகாக காணப்பட்டது. லிப்டிலே ஏறிமேல் மாடியைச் சென்றடைந்தோம். பின் அங்கிருந்து காலிமுகத் திடலை சென்றடைந்தோம். சுகமான காற்று எம்மேனியைத் தொட்டுச் செல்ல கடலலை வரவேற்க திடலினுள் கால் பதித்தோம். சந்தோசமாய் பொழுதைக் கழித்து விட்டு அங்கிருந்து புறப்பட்டு பேருந்திலிருந்து பாராளுமன்றம், சக்தி F.M ஒலிபரப்பு கூட்டுத்தாபனம், சுதந்திர வர்த்தகமையம், புள்ளிமதிப்பீட்டகம், பண்டாரநாயக்கமண்டபம் போன்றவற்றை பார்வையிட்டோம். மற்றும் வெலிக்கடைச் சிறைச்சாலை, நூதனசாலை, புகைவண்டி போன்றவற்றையும் பார்த்து ரசித்தோம். 6.00 மணிக்கு D.S சேனநாயக்கா கலையரங்க மண்டபத்திற்கு வந்தடைந்தோம். 'அங்கு இறுதி நிகழ்வாதலால் எமக்கு அன்பளிப்புடன் கலை நிகழ்வுகளும் காண்பிக்கப்பட்டன. மறுநாள் காலை சுற்றுலாப் பயணத்தை முடித்துக் கொண்டு எமது இடமான கிளிநொச்சிக்குப் புறப்பட்டோம். நாம் சென்ற சுற்றுலாக்களில் இதுவே நீண்ட பயணத்தையும் பல சுவாரஸ்சியமான அனுபவங்களையும் தந்தது மாத் திரமல்லாமல் புதிய இடங்களையும் காணக் கூடியதாக அமைந்தது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் உதவியுடன் இயங்கிவரும் "குருகுலம்" சிறுவர்பராமரிப்பு இல்ல மாணவர்களின் கிறிஸ்மஸ் சமாதான சுற்றுப்பயணம்" தொடர்பான அனுபவப் பகிர்வினை 2003 வர்த்தகப்பிரிவில் கல்விகற்கும் மாணவி சிவதாஸ் சந்திரிகாவால் எழுதப்பட்டது.


NO. 18 கலன் ஆபர் பிளேஸ்
பம்பலப்பிட்டி, Colombo-3
T.P.01 - 555556
FAX - 074 - 510734

நியூ சஜானா என்ரர் பிறைசஸ்

இல. 44 இரண்டாம்குறுக்குத்தெரு
வவுனியா
T,P.0 74 - 589396.

கொம்பியூட்டர் மலிவு விற்பனை

PI 166 MHz 2.O GB H.D.D. 32MB RAM 6000/-
PI 200 MHz 2.4 GB H.D.D. 32MB RAM 10000/-
PII 233 MHz 3 GB H.D.D. 48MB RAM 15000/-
PIII 450 MHz 6 GB H.D.D. 64MB RAM 22000/-

Sound Speaker (ISA) 450/-
Net Work Card (ISA) 150/-
Net Work Card (PCI) 500/-
Multi media (40xCDRom+PCIS.C.) 3000/-
Printer laser - 6000/-

Modem - 15000/-
Monitors 14" 2750/- = 3750/-
Monitors 15" 4000/- = 4500/-
Monitors 17" 6500/- = 7500/-
T.V. - 14",18",21",28", டெக், கசட்செட்

விற்பனைக்கு உண்டு

கோல் கொயின் கோழித்தீன்கள்

இல. 44 இரண்டாம் குறுக்குத்தெரு
வவுனியா
T.P. 074-589396.


இல-78
புனித சென் செபஸ்டியன் வீதி,
பெட்டா, மன்னார்.
T.P. 023-32822

(1) இறைச்சிக் கோழிக்கான கோழித்தீன்களும்.
(2) முட்டைக் கோழிக்கான கோழித்தீன்களையும், இங்கே மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (சி-7235)


இளமையில் சிரமங்களை நாம் தாக்குகிறோம், முதுமையில் சிரமங்கள் எம்மைத் தாக்குகின்றன. - ஜோஷ் பில்லிங்ஸ்




## முதலாம் ஆண்டு நினைவினில்



தாய்மடியில்
முத்தாக.
12.10.1980.

கடல்மடியில்
வித்தாக
30.01.2002

*மழலைச் சிரிப்பும் கள்ளமில்லா உளத்துடனும்*
*துள்ளித்திரிந்த குட்டுவா!*
*உன் உயிரைத் துரும்பாக்கி உடலை இரும்பாக்கி*
*நீ செய்த மாயங்கள்,*
*கனரக வாகனங்கள் கேட்டால் கதை சொல்லும்.*
*எதிரித்தடை உடைத்துத் தேசம் விடிய*
*நீ கண்ட கனவுகள் ஆயிரம் ஆயிரம்.*
*தளபதி ராயுவின் செல்லப் பிள்ளையே!*
*இளம்புலியே, அவரின் அருகே நீயும் துயில்வதைக்*
*கண்டு நாமும் கதறியே நிற்கிறோம்.*
*உமைத் தொழுதுமே தொடர்கின்றோம்.*

**மேஜர் செங்குட்டுவன் / உருத்திரன்**
**[இரத்தினசிங்கம் பிரபாகரன்]**
**மயிலிட்டி,யாழ்.**
திதி - 20.01.2003

**20.01.2003 அன்று மேஜர் குட்டுவனின் முதலாம் ஆண்டுத்திவசம் அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெறும் என்பதனைப் போராளிகளிற்கும் உறவுகளிற்கும் அன்புடன் அறியத் தருகின்றோம்.**

தற்போதய முகவரி
மாமூலை,முள்ளியவளை.

(2793)

குடும்பத்தினரும்,
உறவுகளும்.

ஈழ மண்ணில்
லாலா
சோப்
துயரிப்பான
சன்சயின்
பாவித்துப்
பயனடையுங்கள்
லாலா
சோப் தொழிற்சாலை
அச்சுவேலி
(சி-7226)

**கிட்டண்ணாவும் அவரது தோழர்களும் வீரகாவியமாகி இன்றுடன் ஒரு தசாப்தம் தன்னை நிறைவு செய்கின்றது.**

**தலைவர் அவர்களின் தம்பியாய், தமிழீழ தேசத்தின் முதுபெரும் தளபதியாய் மக்களின் தோழனாய் வாழ்ந்து அனைவரது இதயங்களிலும் நிலைத்து விட்ட கிட்டு எனும் மனிதத்தின் எண்ண ஓட்டங்களுக்கு ஈடு கொடுப்பது கடினம். கடமை நேரங்களில் அவரிடம் நிறைந்திருக்கும் கண்டிப்பு அவரது வீரத்தைப் போலவே பிரசித்தமானது. இது அனைவரும் அறிந்த ஒன்று. கடமை தவிர்ந்த நேரங்களில் அவரிடமுள்ள கனிவான இதயம் எல்லோராலும் அறியப்படாத மற்றொன்று. எழுத்துக்களினால் வடிவம் கொடுக்க முடியாதது. அதனை நேரில் தரிசித்து உள்ளங்களால் உணர்ந்து கொள்ளப்பட வேண்டியது.**

**"புரட்சிக்காரர்கள் என்பதால் உலகம் அவனை கடினமானவனாகவே எண்ணுகின்றது. ஆனால் அவன் மனிதனுக்குள் மென்மையானவன், சாதுவானவன் ஆதலால் தான் அவன் சமூகத்தில் நிலவும் அநீதியை தாங்க முடியாதவனாகப் போராடப்புறப்படுகிறான்.**

**எனும் அவரது நாட்குறிப்புத் தாங்கிய வரிகள் வாயிலாக அவரது மனதின் மென்மையின் ஆழத்தினைத் தரிசிக்க முயலலாம்.**

**நாம் ஏராளமான மரணங்களை கண்டுவிட்டோம். தோழர்களின் வீரமரணம் எம்மை பாதிக்காது, வீரமரணம் எமக்கு பரிச்சயமானது சாவை சந்திக்க தயாராக இருக்கின்றோம் என்று தான் நாம் இறுமாந்திருந்தோம். ஆனால் உன் மரணம் இதயத்தை உருக்குலைத்து உள்ளம் சூனியமாகியதை நாம் எப்படி வெளிப்படுத்தமுடியும்"**

**எனும் தன் தோழனின் மரணம் குறித்த மனக்குமுறலினை அவரது நாட்குறிப்பு தாங்கியிருந்தது.**

**இத்தகைய மனவுணர்வுகளை உள்ளடக்கிய ஒரு மனிதத்தை தமிழீழ தேசம் இழந்து போனது என்பது ஜீரணிக்க முடியாத உண்மை தான். கிட்டண்ணாவின் முழுமையை அவரது பரிபூரணத்தினை இங்கு முழுவடிவமாகக் கொண்டு வர முடியாது என்பது யதார்த்தமானது. எனினும் அவரது நினைவுகள் தழுவிய இந் நாட்களில் அவரின் ஓரிரு பக்கங்களை இங்கு மீட்கின்றோம்.**

# கிட்டண்ணா...

## நன்றியுணர்வு

இந்திய தமிழீழப்போர் ஆரம்பித்த நாட்கள் கிட்டண்ணா இந்தியாவில் தங்கியிருந்து குண்டுத்தாக்குதலில் இழந்த தன் காலுக்கு சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தார்.

அவர் குடியிருந்த வீட்டினுள் எப்படியோ ஒரு சொறி பிடித்த நாய் ஒன்று நுழைந்து கொண்டது. கிட்டண்ணாவுடன் உதவிக்கு நின்றிருந்த போராளிகள் அவர் ஏசிவிடுவார் என்ற நினைப்பில் அந்த நாயினைத் துரத்த முற்பட்டுக் கொண்டிருந்த வேளையில் அவரும் அதனைக் கண்டு கொண்டார். உடனே அந்த நாயினை கூட்டிவரச் சொன்னார். குளிப்பாட்டினார். அதன் உடல் மீது காணப்பட்ட புண்களுக்கு மருந்திட்டார். விரைவில் புண்கள் மாற்றமடைந்து அந்த நாய் குணமாகியது.

இப்போது அது கிட்டண்ணாவின் உற்ற நண்பன். அவர் உணவருந்தும் போதும் நீராடும் போதும், தூங்கும் போதும், அத்தனையும், அவரை ஒத்ததாகவேயிருக்கும். அது அவருக்கான காத்திருப்பாகவும் விளங்கும் நாளடைவில் இருவருக்குமான நட்பு பலமடைந்து சென்றது. இருவரும் நல்ல நண்பர்களாயினர். காலங்கள் கழிந்தன.

1988 தமிழீழ இந்தியப் போர் தீவிரம் அடைந்த வேளை கிட்டண்ணாவினை கைது செய்து சிறையினுள் தள்ளிவிட எண்ணியது இந்திய அரசு. இது தமது ஆக்கிரமிப்பு போருக்கு பக்கத்துணையாகவிருக்கும் என்றும் நம்பியது.

கைதும் நிகழ்ந்தது. சென்னையிலுள்ள சிறைச்சாலைக்கு கிட்டண்ணா கொண்டு செல்லப்பட்டார்.

இப்படியான துர்அதிஸ்டமான நிகழ்வினை அது நினைத்துக் கூடப்பார்த்திருக்காது. அவரின் பிரிவுத்துயரினை தாங்கமுடியாது சோகத்துடன் அங்குமிங்கும் ஓடித்திரிந்தது. கிட்டண்ணாவைத் தேடியது. உணவு உண்ண மறுத்தது. கிட்டண்ணாவின் பாவனையிலிருந்த இடங்கெளெல்லாம் மோர்ந்து மோர்ந்து பார்த்தது. பலனேதுமல்ல. இறுதியில் சோகத்துடன் ஒரு மூலையில் ஒதுங்கி அவ்விடத்திலேயே தனது வாழ்வினை முடித்துக்கொண்டது.

சிறைக்குள்ளிருந்து சேதியறிந்த கிட்டண்ணா அதிர்ந்து போனார். பிற்காலத்தில் அவர் மேற்குலகில் வாழ்ந்த நாட்களில் அழகான விதம் விதமான நாய்களைக்காணும் போதெல்லாம் அந்த நாயின் முகம் அவரது மனக்கண் முன் தோன்றி அவரின் இதயத்தை ஈரமாக்கும். அந்த இதயத்தின் ஈரம் அவரது கண்களில் வந்து நிற்கும்.

பாரத மாதாவின் புண்ணியத்தினால் கிட்டண்ணா நாடு நாடாக அலைந்து கொண்டிருந்தார். அவர் தலைமறைவாக பல நாடுகளில் வாழந்த காலம் அது. அந்நாட்கள் சோகமானது. சுமையானது. அவரது எண்ண ஓட்டங்களுக்கேற்ப அவரால் இயங்க முடியாது போயிருந்த நாட்கள் அவை.

பரந்து விரிந்த அந்த பெரும் தெரு. அதனை பனித்துகழ்கள் மறைத்துக் கொண்டிருந்தது. பார்ப்பதற்கு மனதுக்கு ரம்மியமாகவிருந்தாலும் இரசிப்பதற்கு கிட்டண்ணாவின் மனது ஒத்தியங்கவில்லை. அவரது நினைவுகள் தாயகம் நோக்கி விரிந்து கொண்டிருந்தது. மண்ணை நினைத்து நினைத்து அவர் மனது ஏங்கிக் கொண்டிருந்தது.

அந்தப் பெரும் தெருவினை அவரது பாதங்கள் கடந்து கொண்டிருக்கின்றது. ஒரு வயோதிபர் வாழ்க்கைப்பயணத்தில் பல ஏற்ற இறக்கங்களைச் சந்தித்த ஒரு மனிதராக இருக்க வேண்டும். ஆனால் இப்போது அவரிடம் நாளை பற்றிய நம்பிக்கைகள் ஏதும் இருப்பதாகத் தோன்றவில்லை. இனியும் இருக்கும் என்று நம்பவும் முடியவில்லை.

இப்போது அந்த மனிதர் கிட்டண்ணா முன்னிலையில். அவர்களிடையே வார்த்தைகள் ஏதும் பேசிக்கொண்டதாக அறியவில்லை. அவர்களது பார்வைகளும் உள்ளுணர்வுகளும் மட்டுமே பேசியிருக்க வேண்டும்.

சிறிது நேரம் கழிந்த நிலையில் குட்டியாக ஒரு உரையாடல். கிட்டண்ணா தன்னிடமிருந்த சிறுதொகைப் பணத்தினை அவருக்கு உதவினார். பார்வைகளால் நன்றி பகர்ந்த வயோதிபர் அவ்விடத்திலிருந்து நகர்ந்து கொண்டிருந்தார். வயோதிபர் கிட்டண்ணாவின் கண்களிலிருந்து இப்போது மறைந்து கொண்டிருந்தார்.

திடீரென நினைவுக்கு வந்தவர் தன் கூட வந்த தோழர்களை நோக்கித் திரும்பிய போது அவருடைய முகம் சோகத்தினுள் புதைத்து விழிகள் நீர் சொரிந்திருந்தன. கலங்கிய விழிகளுடன் அருகிருந்த தோழர்களுக்கு அவர் தளதளத்த குரலில் கூறிய வார்த்தைகள்......

" உலகில் ஏழைகள் என்று யாரும் இருக்கக்கூடாது" போராட்ட வாழ்வில் மட்டுமல்லாது பொதுவாழ்விலும் தனது மனதை அன்பினால் நிரப்பி தூய்மையைப் பேணி வாழ்ந்தவர் கிட்டண்ணா. ஏழை மக்களது வாழ்வில் அக்கறை கொள்ளும் பண்பும் எப்போதுமே அவரிடம் நிலைத்திருந்தது. ஏழை மக்களது வாழ்வு வளம் பெற வேண்டும் என்பதில் அவர் காட்டிய அக்கறை எழுத்துக்களினால் வடிவம் கொடுக்க முடியாத ஒன்று. அவரது டயறி குறிப்புக்களில் அதிகமான பக்கங்களில் ஏழைகள் வாழ்வே இடம் பிடித்திருந்தது என்பது எல்லோருக்கும் தெரியாத ஒன்று.

அவரது இந்தக் கனிவான மன இயல்பே அவரது இறுதிக் காலங்களை ஆன்மீகம் நோக்கி நகர்த்தியிருக்க வேண்டும் என எண்ணுகின்றேன். இந்த ஈடுபாடுதான் ஆன்மீகத்துக்கும் புரட்சிக்குமிடையிலான உடன்பாடுகளை அவரை பரிசோதனைகள் மேற்கொள்ளும் அளவுக்கு உயர்த்தியிருக்க வேண்டும் என எண்ணத் தோன்றுகிறது. ஏனெனில் தன் இறுதிக்கால நாட்களில் தன் துணைவியாருக்கு எழுதிய மடல் ஒன்றில்

விறகு கொத்தும் கந்தனும்
கள் வடிக்கும் பூதனும்
கோவணத்துடன் தோட்டம் கொத்தும் இராமையாவும்
கரைவலை இழுக்கும் கோபுவும்.

தனது வாழ்நாளிலும் சரி வயது போனகாலங்களிலும் சரி மற்றவர்களில் தங்கி வாழ்ந்ததையும் பிச்சை எடுத்து செத்ததையும் பார்த்திருக்கின்றேன். இவர்களின் வாழ்வு வளம் பெற வேண்டும். இதைத்தான் ஆன்மீகமும் சொல்கின்றது. புரட்சியும் சொல்கின்றது. ஆன்மீகம் போதிக்கின்றது. புரட்சி வழிகாட்டுகின்றது. ஆன்மீகமும் புரட்சியும் வேறு வேறல்ல. இரண்டும் ஒன்று தான் என தனது மனதின் முடிவினை அதில் வரைந்திருந்தார்.

மக்கள் படும் இன்னல்களில் பங்கெடுக்க வேண்டும் அவர்களுக்கு ஒரு அமைதியான கௌரவமான வாழ்வு கிட்டவேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடு அவரது சமாதானப்பயணம் ஆரம்பமாகியது. ஆனால்....!

கிட்டண்ணாவும் அவரது தோழர்களும் வீரகாவியமாகி ஒரு தசாப்தம் நிறைவுறும் இந் நாட்களில் மீண்டும் எமது தாயகத்தில் ஒரு சமாதானச் சுடர் ஏற்றப்பட்டுள்ளது. இந்தச் சமாதானச் சுடரும் எம்மை சுட்டடெரித்து விடாதபடி அவர்களது நினைவுகள் எம்மை வழிகாட்டிச் செல்லட்டும்.

## இராஜதந்திரம்

சூரியனைக் காணாது கடிகார முட்களின் நகர்வுகளால் மட்டுமே புதிதான பொழுதில் பிரசவிப்பு நிகழும் காலம் அது. கடும் குளிருடன் இணைந்த பனிகூட தாயகம் நோக்கி துரத்தும் சூழல். இரண்டாம் கட்ட ஈழப்போரின் ஆரம்பம். பல்வேறு வல்லரசு களின் அழுத்தங்களின் மத்தியி லும் பம்பரமாய் கிட்டண்ணா சுழன்றடித்த பொழுதுகள் இலகுவில் மறக்கக் கூடியவையல்ல. ஒரு நள்ளிரவுக்கும் அதிகாலைக்குமிடையிலான குறுகிய நேரத்தூக்கத்தோடு வல்லரசுகளின் அழுத்தங்களை ஓயாது எதிர் கொண்டு சர்வதேச அரசியல் பொறுப்பாளராக கிட்டண்ணா பிரித்தானியாவில் இயங்கிய காலமது.

கிட்டண்ணா இந்தியா சென்ற போது அவரைப்பார்க்க ராஜீவ் காந்தியின் கறுப்புப் பூனைகள் எப்படி முண்டியடித்தனரோ? அதுபோலவே சர்வதேச அரசியல் பொறுப்பாளராக பிரித்தானியாவில் இயங்கிய காலத்திலும் சர்வதேச பத்திரிகையாளரும் முண்டியடித்தனர்.

எமது போராட்டத்துடன் நன்கு பரிச்சயமான பத்திரிகையாளர் ஒருவர் கிட்டண்ணாவினை செவ்வி கண்டு கொண்டிருந்தார். பத்திரிகையாளர் தனது தற்திறமையினை வெளிக் காட்ட எண்ணியிருக்கலாம். அல்லது கிட்டண்ணாவை ஒரு தர்மசங்கட நிலைக்குத் தள்ளிவிட நினைத்திருக்கலாம். இதில் எதுவோ திடீரென ஒரு கேள்வியினைத் தூக்கிப்போட்டார்.

"நீங்கள் போராட்டம், புரட்சித் தமிழீழம் என்றெல்லாம் கூறுகிறீர்கள், நீங்கள் கூறும் தமிழீழம் எப்படியானது. எப்படியான எல்லைகளை வரையறுத்தது. இலங்கைத்தீவில் எப்படியான ஒரு வடிவத்தினைக் கொண்டுள்ளது? என வினாவி தனது தந்திரமான கேள்வியினை நிறைவு செய்தார்.

கிட்டண்ணா கேள்வியின் உள்ளகத்தினை நன்குணர்ந்து கொண்டார். எமது போராட்டத்துடன் பரிச்சயமான ஒருவர் இவ்வளவு நாட்கள் நகர்ந்த நிலையில் இப்போது வந்து தமிழீழ எல்லைகள் பற்றிக் கேட்கும் வினாவில் புதைந்துள்ள சூழ்ச்சியினை உணர்ந்து கொண்டவராக பத்திரிகையாளரை சாதுவாக நோக்கினார்.

"கிட்டுவினை எப்படியோ மாட்டி விட்டேன்" என்ற இறுமாப்புடன் பத்திரிகையாளரும் அவர் முன்னிருந்தார். கிட்டண்ணா மெல்ல புன்னகைத்தார். பதிலுக்குத் தயாரானார்.

"இலங்கைத்தீவின் வரைபடம் ஒன்றை எடுங்கள். வரைபடத்தில் கடந்த 15 வருடங்களாக சிறிலங்கா இராணுவம் எங்கு கொலைகளை புரிகின்றதோ? குண்டுகளைப் போடுகின்றதோ? அந்த இடத்தினைப் பெயின்ற் பண்ணுங்கள். அதன் பிற்பாடு பாருங்கள் தமிழீழத்தின் எல்லையினை தாங்களாகவே தெரிந்து கொள்வீர்கள்"

பத்திரிகையாளர் குளிக்கப் போய் சேறு பூசிய கதையாக அப்படியே அசந்து போனார். அடுத்த கேள்விக்கான தொடங்கு நிலையினை எட்ட முடியாதவராக சங்கடப்பட்டார்.



# நேர்நோக்கு

## புத்துயிர் பெற்றுள்ள சமாதான விரோதிகள்

யாழ். மாவட்டத்தில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடியேற்றுவது தொடர்பாக சிறிலங்கா இராணுவத்தலைமை வெளியிட்ட நிபந்தனையால் எழுந்திருந்த சர்ச்சை நிலை தாய்லாந்தில் இடம் பெற்ற 4ஆம் சுற்றுப் பேச்சு வார்த்தை மூலம் சீர் செய்யப் பட்டிருக்கிறது. இந்த விவவாரம் சமாதான முயற்சிகளுக்கு நெருக்கடியை ஏற்படுத்திய நிலையில், தாய்லாந்து பேச்சுவார்த்தை இந்த நெருக்கடியைத் தணித்திருக் கிறது.

பெருமளவான பொதுமக்களின் வாழ்விடங்களையும் விளை நிலங்களையும் ஆக்கிரமித்து நிற்கும் சிறிலங்கா இராணுவம் அதனால் எழுந்துள்ள மனிதாபிமானப் பிரச்சினைபற்றிச் சிந்திக்க மறுக்கும் அதேவேளை இந்த மனிதாபிமானப் பிரச்சினைக்கு கடந்த 17 வருட காலயுத்தத்தில் தம்மால் செய்ய முடியாது ஆயுதக் களைவைப் பேரமாக வைத்திருக்கிறது: இந்த விவகாரத்தில் விடாப்பிடியாக நிற்கிறது.

இவ்விடயம் தற்போதுதணிவு நிலைக்கு வந்தபோது இராணுவத்தின் இந்த நிலைப்பாடானது ஒரு கைங்கரியத்தை தெளிவாகச் செய்துள்ளது. அதாவது இராணுவத்தின் இந்த கடும்போக்கு நிலை கையறுநிலையிலிருந்த பொது சன ஐக்கிய முன்னணிக்கு தெம்பூட்டியுள்ள அதேவேளை, ஜே.வி.பி, சிகலஉறுமய மற்றும் இனவாதக்கட்சிகளுக்கும் சக்திகளுக்கும் புதியதொரு உத்வேகத்தை ஊட்டியுள்ளமையை இவ்வார நிகழ்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை பொது சன ஐக்கியமுன்னணி நடத்திய செய்தியாளர் மாநாட்டில் சிறிலங்கா இராணுவத்தின் நிலைப்பாட்டை ஆதரித்துள்ள அக்கட்சி ஆயுதக்களைவு உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடியேற்றுதல் ஆகிய இரண்டு விவகாரங்களையும் ஒரே விடயமாக ஒன்றிலிருந்து ஒன்றைப்பிரிக்க முடியாத விவகாரமாகக் கருதவேண்டும் எனக் கூறியிருக்கிறது.

இதேவேளை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கரும் புலிகள் அணியைக் கலைக்க வேண்டும் என்று தமது "வழமையான பாணியிலான" அபத்த அறிவிப்பொன்றையும் வெளியிட்டுள்ளார். அதேவேளை பல்வேறு வகையான நெருக்கடியாலும் அஞ்ஞாதவாசம் புரிந்த முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா மீண்டும் மேடையில் நோர்வேக்கு எதிராக முழங்கியிருக்கிறார்.

கடந்த ஒரு வருடகாலமாக சமாதான முயற்சிகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தால் அமுங்கிய குரலில் பேசிவந்த பொதுசன ஐக்கிய முன்னணி இப்போது உரத்தகுரலில் இவ்வாறு பேசத் தொடங்கியிருப்பதற்கு உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாக இராணுவம் கொண்டுள்ள நிலைப் பாட்டினால் எழுந்துள்ள புதிய சூழ்நிலையே காரணம் என்பதில் சந்தேகம் எதுவுமில்லை.

அதேவேளை ஜே.வி.பி. அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம் என்ற ரீதியிலும் சமாதான முயற்சிகளுக்கு எதிரான போராட்டம் என்ற வகையிலும் ஆர்ப் பாட்டங்களை நடத்தியிருக்கிறது. ஒரு புறம் பொதுசன ஐக்கிய முன்னணியுடன் உறவை வளர்க்க மேற் கொள்ளப்படும் முயற்சிகள், மறுபுறம் சமாதானத்திற்கு எதிரான கோசங்கள், ஆர்ப்பாட்டங்கள் என ஜே.வி.பி. தனது நடவடிக்கைகளைத் திடீரென முடுக்கி விட்டுள்ளது.

இதேவேளை கடந்த பாராளுமன்றத்தில் கொண்டிருந்த ஒரேயொரு உறுப்புரிமையையும் இழந்து கடந்த ஒருவருடகாலமாக குரலெழுப்பாதிருந்த சிகல உறுமய இப்போது வாய்திறக்கத் தொடங்கியுள்ளது. நோர்வே அரசாங்கத்தையும், ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தையும் மட்டுமல்ல பொதுசன ஐக்கிய முன்னணியையும் கூட சிங்களத்தின் விரோதியாக வர்ணித்து வருகிறது. அதேவேளை இந்தச் சமாதான முயற்சிகளை முறியடிக்க அதனால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத கொள்கைகளைக் கொண்ட தமிழ்க் குழுக்களுடன் இணையவும் அது தயாராக உள்ளது.

இதேவேளை மேலும் பிக்குகளும் வேறுசிலரும் "சிங்கள மக்களைக் காக்க" எனக் கூறிக் கொண்டு புதிய அமைப்புகளையும் கட்சிகளையும் உருவாக்கப் போவதாகக் கூறிவருகின்றன.

இவற்றுக்கு சமாதான முயற்சியின் முக்கிய ஒரு படியாகவுள்ள மீள்குடியேற்ற விடயத்தில் இராணுவம் தீவிரமான விரோதப் போக்கை கடைப்பிடிக்கிறது என்பது வெளிப்பட்டதே காரணம் எனக் கூறமுடியும்.

தமிழ்மக்களின் மனிதாபிமானப் பிரச்சினையாக உள்ள இவ் விடயத்தை அரசாங்கம் சரியான வழிமுறைகளைக் கையாண்டு விட்டால் அது சமாதான முயற்சிகளுக்கு பெரும் குந்தகத்தை ஏற்படுத்திவிடும் என்பதையும் இந் நிகழ்வுகள் புலப்படுத்துகின்றன.

வேலவன்

---

## படத்திற்கு உயிரூட்டுங்கள் -01



பரிசுக்குரியவர்
செல்வி.
மதுரா இராமநாதன்
உடையார்கட்டு வடக்கு,
உடையார்கட்டு.

பரிசுக்குரிய **வரிகள்**

**நீயுண்ணப் போதா நிறையுணவு காணா**
**நாயுண்ணக் கொடுப்பாயோ நம்பி – தாயுண்ணத்**
**தருவாளுனக்குணவு தளராதே தம்பி**
**வருமோர்நாள் வளமாகும் வாழ்வு.**

பாராட்டுக்குரிய **வரிகள்**

★ *ஐந்தறிவும், ஆறறிவும் தேடுவது*
*பசியைப் போக்க உணவு*
*ஆனால்! கிடைக்காதபோதும்*
*ஐந்தறிவிற்கு ஆறுதல் ஊட்டுகின்றது. ஆறறிவு....!*

K.அரவிந்தன்
கலைமகள் அழகுச்சோலை,
கிளிநொச்சி.

★ *பக்கமாயிருங்கள்*
*பாற்சோறு.*
*எனினும்*
*பகிர்ந்துண்போம்.*

அமலகிருபன் (சிட்டி)
சேரன் வாணிபம்,
யோகபுரம்,மல்லாவி.

★ *உருவங்கள் வேறாயினும் உள்ளே இருப்பது*
*உயிரன்றோ. உயிரை கொடுத்தவன் எங்கோ?*
*தட்டில் உணவிருந்தும் சிறுவனின் பரஸ்பரம்*
*மழலை குட்டிகளுடன் மாபெரும் பரஸ்பரமோ?*

நிலா திருவாகரன்,
புளியம் பொக்கணை.

★ "பகிர்ந்துண்ணும் பண்பினை
பாரினிற்கு போதிக்கும் - பாலகா!
நிச்சயம் நீ உயர்வாய்:
கவலையை விட்டுத்தள்ளு."

எம். சோதீஸ்
வன்னேரிக்குளம்,
கிளிநொச்சி.

★ *இங்கே பள்ளியறியாப் பாலகன் பகுத்துண்டு பல்லுயிர்*
*ஓம்புகிறான். உயிரை உயிராய் நேசிக்க*
*தெரியாதவர்களே எக்ஸ்ரே எடுத்துப் பாருங்கள்*
*உங்களுக்குள் இதயம் இருக்கின்றதா என்று?*

கருணாகரன் சிவநேசன்,
மயில்வாகனபுரம்.

★ தமிழனாக பிறந்ததினால்
நான் அகதி
கூடவே இருந்தினால்
நீங்கள் அனாதைகள்.

அ. லியோஸ்.
திருவையாறு,
கிளிநொச்சி.

★ "ஏழைக்கு மகவாய்
பிறந்ததனால் தானோ - நீயும்
உயிர்களை நேசிக்க
கற்றுக் கொண்டாய்"

எம்.எஸ். வரன்,
திருவையாறு,
கிளிநொச்சி.

**பரிசுக்குரியவருக்கான நினைவுப்பரிசு அனுப்பி வைக்கப்படும்.**

---

(02ம்பக்கத்தொடர்ச்சி..)

இங்கே நாங்கள் மிக முக்கியமான விடயத்தின் விளிம்புக்கு வந்துள்ளோம். அது,' இராணுவத்தை யுத்தத்துக்குப் பின்னான மனநிலைக்குத் தயார்படுத்தல் ' என்ற மிக முக்கியமான பாரிய நடவடிக்கையேயாகும். இதற்குச் சிறிலங்காவின் பாதுகாப்புக் கொள்கை வகுப்பாளர்களும், அதனை நடை முறைக்கிடுபவர்களுமான உயர்பீடத்தினர் முதலில் தம்மை தயார்படுத்திக் கொள்ளல் வேண்டும். நான் நினைக்கின்றேன், இவர்கள் இந்தக் கட்டத்துக்கு வருவதற்கு முன்னதாகவே ரணிலின் அரசு சமாதான முன்னெடுப்புகளை ஆரம்பித்து விட்டதென்று. எனவேதான் யுத்த முனைப்பிலும் அதற்கான தயார் நிலையிலுமே இருக்க முனையும் பாதுகாப்புத் தரப்புடன் மல்லுக்கட்ட வேண்டிய சூழமைவுக்குள் விழிபிதுக்க வேண்டியேற்பட்டு விட்டது.

உண்மையிலேயே யுத்தத்துக்குப் பின்னான சூழலுக்கு இராணுவத்தைத் தயார் படுத்த வேண்டுமாயின், அதற்கென உயர் அதிகாரிகளின் குழாமொன்றினை முதலில் பயிற்றி அவர்களை யுத்தம் நடைபெற்ற பிராந்தியங்களுக்கான கட்டளையதிகாரிகளாக அனுப்பியிருத்தல் வேண்டும். அத்தோடு தீவிர போர் முனைப்புடன் பயிற்றுவிக்கப்பட்ட படையணிகளைப் பின் விலத்திக் கொண்டிருத்தலும் வேண்டும்.

யாழ். குடாநாடு கைப் பற்றப்பட்டவுடனே இராணுவப் புலனாய்வுப்பிரிவைச் சேர்ந்த உளவியற் போர் நிபுணர்களே அங்கு கட்டளையதிகாரிகளாக நியமிக்கப்பட்டனர். இவர்கள் அங்கே "மக்கள் மனங்களை வெல்லுதல்" என்ற நடவடிக்கையைத் தீவிரமாக முன்னெடுத்தார்கள். தற்போதய இராணுவத் தளபதியே அதற்குத் தலைமை தாங்கியவர் என்பதுவும் இங்கே கவனிக்கத்தக்கது. அத்தோடு அவரின் "இராணுவத்தின் நலன்கள் கவனிக்கப்படும்" என்ற கூற்றும் கூர்ந்து கவனிக்கப்பட வேண்டியதாகும்.

ஆகவே, இராணுவத்தை யுத்தத்துக்குப் பின்னான சூழலுக்கு "உண்மையிலேயே தயார்படுத்த" சிறிலங்கா அரசாங்கமும் அதன் கொள்கை வகுப்பாளர்களும் முனைகிறார்களெனில், தமது தீர்மானங்களுக்குப்பணிந்து, ஏற்று அதனை நடைமுறைக்கிடும் பக்குவத்துக்கு இராணுவத்தைக் கொண்டு வருவதாயின் அதற்குப் பயிற்றப்பட்ட ஒரு தொகுதி உயர் இராணுவ அதிகாரிகள் மிக உடனடியாகத் தேவைப்படுகின்றனர். இவர்கள் கட்டளையதிகாரிகளாக நியமிக்கப்பட்டு படிப்படியாக இராணுவத்தின் யுத்தமுனைப்பும் தமிழர்கள் மீதான அதன் காழ்ப்புணர்வும் தணிக்கப்பட்டுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படல் வேண்டும்.

இதனை, குடாநாட்டில் உள்ள இராணுவத்தினரின் 'போரிடும் மனநிலை பாதிப் படைவதை' தடுத்து அவர்களின் மனோநிலையைக் கட்டியெழுப் புவதற்கு அனுப்பப்பட்ட மேஜர் ஜெனரல் சரத் பொன் சேகாவிடம் எதிர்பார்ப்பதென்பது அடிமுட்டாள் தனமாகும். கிராமத்து மொழியிற் சொன்னால். "சுரைக் கொட்டை போட்டால் பாவற் கொட்டையா முளைக்கும்?" எனவே புதிதாகப் பாவற்கொட்டைகள் போடப் படுதல் வேண்டும்.

அதனை விடுத்து இராணுவத் தரப்பை கருத்து வெளியிடுவதற்கும் தீர்மானங்களை முன் வைப்பதற்கும் அனுமதிப்பது விரும்பத்தகாத விளைவுகளையே ஏற்படுத்தும். அத்தோடு இப் போக்கு யாழ். ஆயர் குறிப் பிடுவதைப் போன்று "தலையிருக்க வால் ஆடுவதைப் போன்றும்" "மக்களை எரிச்சலடையச் செய்வதுமாகும்" மக்கள் எரிச்சலடைவதென்பது கேணல் கருணா அவர்கள் குறிப்பிடுவதைப்போன்று " மக்களிடம் இருந்து அழுத்தங்களைத் தோற்றுவிக்கவும் அவர்களை ஏமாற்றமடையவைக்கும்" என்பதிலும் சந்தேகமில்லை. ■■





20 வயதை அடையும் ஜப்பானிய இளம் பெண்கள் கூடிக் களிக்கும் ஒரு நிகழ்வு ஒன்றில் பாரம்பரிய கிமோனோ உடையணிந்த நங்கையருடன் மிக்கி, மினி மௌஸ் பொம்மைகள் குதூகலித்திருக்கும் ஒரு காட்சி. ரோக்கி யோவின் டிஸ்னி லாண்டில் இது படமாக்கப் பட்டது.



உலகின் முதலாவது மனிதனைப்போல நடக்கும் அஸிமோ எனும் பெயர் கொண்ட ரோபோ ஒன்று மலேசியச் சிறுவர்களுடன் நடனமாடுகின்றது. சனவரி 12 இல் கோலாலம்பூரில் இடம் பெற்ற நிகழ்வில் காட்சிப்படுத்தப்பட்ட இவ் ரோபோ 52 கி.கி எடை கொண்டதும் 1.2 மீ உயரமானதுமாகும். கதைக்கவும் மரத்தில் ஏறத்தெரிந்ததும் தலையாட்டும் இயல்புடையதுமான இவ் வகை ரோபோக்கள் பெரிய நிறுவனங்களில் வரவேற்பாளர்களாகவும் வழிகாட்டிகளாகவும் வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன.


லூயிஸ் வொயிற்றன் கிண்ணத்திற்கான படகுப்பந்தயத்தில் ஈடுபட்டிருக்கும் சுவிஸ் பந்தயவீரர்கள் அமெரிக்கப் படகு ஒன்றுடன் போட்டி போடத் தயாராகின்றார்கள். இதற்கு முன் இடம்பெற்ற பந்தயம் ஒன்றில் சுவிஸ் வீரர்கள் ஒரு நிமிடமும் இருபத்தினாலு செக்கன்களில் வெற்றிபெற்றிருந்தனர்.



காபூல் இராணுவக்கல்லூரியில் சூட்டுப்பயிற்சியில் ஈடுபடும் ஆப்கான் தேசிய இராணுவத்தைக் காணலாம். இப்படைக்கு தேசிய பாதுகாப்பு உதவிப்படையணியில் இருந்து வந்த பிரெஞ்சுப் படையினர் பயிற்சியளிக்கின்றனர்.



## படத்திற்கு உயிரூட்டுங்கள் -02



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை வாக்கியங்களாக எழுதி அனுப்புங்கள்.
சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.

அனுப்புங்கள்:
படத்திற்கு உயிரூட்டுங்கள் —02
ஈழநாதம் பணிமனை,
யாழ் சாலை, கிளிநொச்சி.

சென்றவார 'படத்திற்கு உயிரூட்டுங்கள் —01' இற்கான பரிசுக்குரிய கவிதையும், பாராட்டுக்குரிய கவிதைகளும் பதினைந்தாம் பக்கத்தில் வெளியாகியுள்ளது.

பிரிட்டனுக்குச்சொந்தமான விமானம் தாங்கிக்கப்பல் ஏச்.எம்.எஸ். ஆர்க் றோயல் அரேபிய வளைகுடாவில் தரித்து நின்று பயிற்சியில் ஈடுபடுகின்றது. ஈராக்குடனான போர் வெடிக்கலாம் என்று தோன்றிய நிலைமையை அடுத்து கடமையில் ஈடுபடும் இப்போர்க்கப்பல் 1982 இல் போக்லான்ட் யுத்தத்தில் பிரிட்டனின் மிகப்பெரிய ஈரூடக விசேட அலுவல்களுக்காக படையினரைக்கொண்டு அப்பொழுது யுத்தத்தில் ஈடுபட்டது.



இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமன்னயில் 2003ம் ஆண்டு ஜனவரி மாதம் 17ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.